# வளம்மிக்க வழக்காற்றியல்

## ஆய்வுக் கட்டுரைகள்

Documenting of Rich Folk Culture

இரா. மகேஸ்வரன்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம்மிக்க வளக்காற்றியல்

ஆய்வுக் கட்டுரைகள்

(Documenting of Rich Folk Culture)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம்மிக்க வளக்காற்றியல்

## ஆய்வுக் கட்டுரைகள்

## (Documenting of Rich Folk Culture)


**இராசையா மகேஸ்வரன்**

B.A.Hons(Pera), M.L.S(Colombo)

பதில் நூலகர்

பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை



குமரன் புத்தக இல்லம்

கொழும்பு - சென்னை

2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம்மிக்க வளக்காற்றியல்: ஆய்வுக் கட்டுரைகள்
இராசையா மகேஸ்வரன் எழுதியது

© 2018

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
*39, 36வது ஒழுங்கை, கொழும்பு-06, தொ.பே. 011 2364550, மி. அஞ்சல்:* kumbhlk@gmail.com
*3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, வடபழனி சென்னை - 600 026*

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
*39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06*

Valammikka Valakkaarriyal: Aaivuk katturaikal
Rasaia Makeshwaran

© 2018

*Published by* Kumaran Book House
39, 36th Lane, Colombo - 06, Tel.: 011 2364550, E-mail : kumbhlk@gmail.com
3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* Kumaran Press (Pvt) Ltd.
39, 36th Lane, Colombo -10

*வெளியீட்டு எண்: 777*

ISBN 978-955-659-589-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையில் நாட்டாரியல் ஆய்வுகள் இன்றும் பலராலும் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமூக வளர்ச்சி காரணமாக இவை வழக்கொழிந்து வந்தாலும் இந் நாட்டாரியல் அனுபவங்கள் சுவை யானவை. பொக்கிஷமாகப் பேண வேண்டியவை. பழைமையையும், வரலாற்றினையும் நாட்டாரியல் கலைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன. நாட்டாரியல் ஆய்வுகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்கள், தரவுகள் இன்னும் பகுக்காமல், வகைப்படுத்தாமல், ஆவணப்படுத்தாமல் ஆங்காங்கே காணப்படுகிறன. நூலகர் என்ற வகையில் இவற்றை தொகுத்து ஆவணப்படுத்த வேண்டிய ஒரு கடமையினை நான் இங்கு செய்துள்ளேன்.

தமிழர்கள் அனைவரும் ஒரே மொழி பேசினாலும் தாம் வாழும் பிரதேசத்திற்கேற்ப, தமது மதத்திற்கேற்ப உச்சரிப்பையும், சில சொல்லமைப்புகளையும் கொண்டுள்ளனர். வட்டார மொழிக்கு அப்பால் மத ரீதியாகத் தனிச் சொற்களையும் கொண்டுள்ளனர். வடக்குத் தமிழர், கிழக்குத தமிழர், மலையகத் தமிழர், கொழும்புத் தமிழர், கொழும்பு செட்டித்தமிழர், முஸ்லிம் தமிழர், மேற்கு புத்தளம் பகுதி வாழ் தமிழர், தமிழ் பேசும் முஸ்லிம்கள் போன்றோர் வெவ்வேறு உச்சரிப்பைக் கொண்டுள்ளனர். இதனை மண்வாசனை, ஊர் வாடை, மொழி நடை, பழக்க தோஷம் என கூறினாலும் பல பிரிவுகளையே காட்டி நிற்கின்றன.

நாட்டார் வழக்காற்றியலும் இவ்வாறு பிரதேச மொழிக்கேற்பவே அமைந்து காணப்படுகிறது. கிராமப்புறத்தின் மண்ணும் மண்சார்ந்தது மான வாழ்வியலில் மருத நில பகுதி, நெய்தல் நில பகுதி, குறிஞ்சி நில பகுதி என்பன தனித்தனி செல்வாக்கினைப் பெற்றுக் காணப்ப டுகின்றன. தமிழ் நாட்டில் கொங்குத்தமிழ், தஞ்சை தமிழ், மதுரைத்தமிழ் என்பன போன்றே இலங்கையில் இது காணப்படுகிறது. உலகமய மாக்கலின் காரணமாக சகலரும் இணைந்து காணப்பட்டாலும் இன்னும் நாட்டுப்புற இலக்கிய சொல்வாக்கு குறையவில்லை. தனி மரபுகளையும், தனிவழியினையும், தனி பழக்கவழக்கங்களையும் கொண்டவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை. பண்பாடு, கலைத்துவம், வரலாற்று செய்திகள் மாறாமல் இவ்வாய்வு கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

இப்படைப்பினை அறிஞர்கள், இளைஞர்கள், எதிர்கால சந்ததியினர் ஏற்றுக்கொள்வதோடு மேலும் எழுதும் ஆர்வத்தினைத் தூண்டுவர் என எதிர்பார்க்கின்றேன்.

**இரா. மகேஸ்வரன்**
பதில் நூலகர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | v |
| 1. | இலங்கையில் இந்தியத் தமிழர்: நாட்டார் வழக்காற்றியல் தொன்மையும் இன்றைய நிலையும் | 1 |
| 2. | இலங்கை வரலாற்றில் பெண் தெய்வ வழிபாடும் தமிழர் பண்பாட்டில் அதன் செல்நெறியும் | 13 |
| 3. | நவீன ஊடகத்தில் நாட்டுப்புற கலைகள் | 21 |
| 4. | ஈழத்தமிழர்களின் நாட்டுப்புற விளையாட்டுகள் | 30 |
| 5. | இலங்கையில் மலையகத் தமிழரின் நாட்டுப்புற மருத்துவம் | 46 |
| 6. | சங்க கால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள்: ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு | 57 |
| 7. | தைப்பொங்கல் வழக்காற்றியல் | 71 |
| 8. | கண்டி எசல பெரகராவும் உபயோகத்திலுள்ள தமிழ் சொற்பதங்களும் - ஓர் ஆய்வு கண்ணோட்டம் | 74 |
| 9. | கண்டி எசல பெரகராவும் நான்கு தேவாலயங்களுக்கும் இடையிலான தொடர்புகளும் | 81 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# இலங்கையில் இந்தியத்தமிழர்

## நாட்டார் வழக்காற்றியல்

## தொன்மையும் இன்றைய நிலையும்

நாட்டுப்புறவியல், மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவவியல், மொழியியல், வரலாற்றியல் ஆகிய துறைகளுடன் இணைந்து பிணைந்து காணப்படுகின்றது. இது மக்களின் நாகரிகத்தினை, பண்பாட்டினை நடத்தையினை, பழக்கவழக்கங்களினைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. மண்ணின் மைந்தர்களின் மனக்கருவில் உருப்பெற்ற, உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்களாகின்றன. இது காலங்காட்டும் கண்ணாடியாகவும் காணப்படுகிறது. தமிழில் நாட்டுப்புறவியல் ஆய்வின் வளர்ச்சியும் வரலாறும் என்னும் ஆய்வில் சு.சக்திவேல் 1871- 1959 வரை சேகரிப்புகாலம் எனவும் 1960-1969 வரை ஆய்வின் தொடக்ககாலம் எனவும் 1970 க்கு பிற்பட்டகாலம் ஆய்வின் வளர்ச்சிக்காலம் எனவும் மூன்றுகால கட்டங்களை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில், நாட்டார் வழக்காற்று ஆய்வுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பீட்டர் பெர்சிவல், ஹெர்மான் ஜென்ஸன், ஜான் லாசரஸ், நடேசசாஸ்திரி ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் தமிழ் ஆய்வாளர்கள் சேரிமொழி, இழிசனர் வழக்கு என கருதியதால், இவற்றினை தொகுத்து ஆய்வு செய்யாது ஒதுங்கியிருந்தனர். 1960 களின் பின்னரே, மாணவர்கள், முதுகலைமானி (எம்.ஏ.) கலைமானி (பீ.ஏ.) பட்டத்துக்காக நாட்டுப்புறவியல் ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கினர். தமிழ்நாட்டில், 1960 க்குப் பின்னரே கள ஆய்வுகளைச் செய்து, தரவுகளைத் தொகுத்தனர். இக்காலத்தில் பல்வேறு நாடுகளில் நாட்டார் வழக்காற்றியல் தனியானதொரு ஆய்வுப்புலமாக உருவாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுமானிடவியல், சமூகமொழியியல் ஆகியவற்றின் வளர்ச்சியுடன் நாட்டார்வழக்காற்று ஆய்வுகளும் வளர்ச்சி கண்டன. நாட்டார் வழக்காற்றுடன் சமயம், ஒப்பியல், இயற்கைக்காட்சி, புராண கதைகள், வாய்மொழி பாடல்கள், கதைகள் போன்றன பற்றியும் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றை ஒப்பியல்முறை கொண்டு ஆராய்ந்தால், ஒரே தன்மையான பலகூறுகள் முந்தைய மூதாதையர் களிடமிருந்து தற்காலமக்களுக்கு வந்து சேர்ந்தமைப் புலப்படும். பழமொழிகள், விடுகதைகள், வாய்மொழிப்பாடல்கள், பழம்மரபுக் கதைகள், பழங்காலநம்பிக்கைகள் என்பன இவ்வாறு காலங்காலமாக மக்களிடையே புழங்கி வந்தவையாகும்.

இந்தியத்தமிழ்நாட்டு நாட்டுப்புறவியலை நடேசசாஸ்திரி, நா. வானமாமலை, ப.ரா.சுப்பிரமணியம், சோமலே, ஞானப்பிரகாசம், சு.சக்திவேல், சு.சண்முகசுந்தரம், டாக்டர் லூர்து, ஆறு.இராமநாதன், இரா.சுரேந்திரன், அரவாணன், ஆறு.அழகப்பன், கி.வா. ஜெகநாதன் ஆகியோர் ஆய்வு செய்து பல்வேறு வகையில் வெளிக்கொண்டு வந்துள்ளனர்.

நாட்டார் வழக்காற்று ஆய்வாளர்கள், ஆய்வுகளுக்கு கோட்பாடு களை வகுத்து ஆராய முற்பட்டனர்.

## நாட்டார் வழக்காறும் இடம்பெயர் கோட்பாடும்: (Migratory Theory)

ஐரோப்பிய தேவதைக் கதைகள், இந்திய புராணக்கதைகளில் தொடர்பு பட்டிருப்பது ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டன. ஐரோப்பியதேவதைக் கதைகள், இந்தியாவில் தோன்றி ஐரோப்பாவுக்கு இடம்பெயர்ந்தன என்பதனை கோட்பாடாக தியோடோர் பென்ஃபி (Theodore Benfey) 1858 இல் கண்டுள்ளார்.

### 1. கடன்வாங்குதல் கோட்பாடு:

நாட்டார் வழக்காற்று ஆய்வாளர்கள், ஆய்வுகளில் ''கடன்வாங்குதல்'' என்ற கோட்பாடும் காணப்படுகின்றன என்கின்றனர். சமஸ்கிருத கதைகளை ஐரோப்பியர்கள், பின்பற்றியுள்ளனர். இது மக்களின் இடப்பெயர்வுகள், போர்கள், பயணம் செய்தல் போன்ற காரணங்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்புமைகள் ஏற்பட்டுள்ளன. இதனை "ஊடுருவிப்பரவுதல்" (Diffusion) எனவும் கூறினர்.

**2. வரலாற்று அணுகுமுறைக்கோட்பாடு:**

இயற்கையில் காணப்படும் பொதுவான இயல்புகளைக் (Common Sources) கொண்டு நாட்டார் வழக்குகள் ஊடுருவுவதை "வரலாற்று நிலவியல் அணுகுமுறை" என்று ஆராய்ந்தனர். இதனைக் காரணமாக வைத்து, அது பரவிய காலம், தோன்றிய இடம் என்பன பற்றி ஆராய்கின்றனர். இந்த அடிப்படையில் ஆறு.இராமநாதன் எழுதிய வரலாற்று நிலவியல் ஆய்வுமுறை, அறிமுகமும் ஆய்வுகளும்' (1988) என்ற நூலே தமிழில் வெளிவந்த முதல் நூலாகும்.

**3. உளவியல் ஆய்வுமுறைக்கோட்பாடு:**

நாட்டார் வழக்காற்றில் ஊகத்தின் அடிப்படையில் அமையும் ஆய்வு உளவியல் ஆய்வாகும். ஒரு படைப்பாளி ஏன் இதனை உருவாக்கினான்? எப்படி உருவாக்கினான்? என்பது இதில் முக்கியம் பெறுகிறது. நம்முடைய கருத்துக்கள், உணர்வுகள், ஆர்வங்கள், நம்பிக்கைகள் என்பன உளவியல் ரீதியாக நோக்கப்படுகின்றன.

**4. வரலாற்று மீட்டுருவாக்கக் கோட்பாடு**

வரலாற்றுநிலவியல் அணுகுமுறைகோட்பாடு, அமைப்பியல் அணுகு முறை கோட்பாடு, உளவியல்கோட்பாட்டு அணுகுமுறை ஆகிய மூன்றையும் கொண்டே இணைப்பாய்வு முறை மூலம் இந்தியவம்சாவளி மலையக தமிழர் தொடர்பான நாட்டார் வழக்காற்றினை ஆய்வு செய்யவேண்டும். இதன்போது, "வரலாற்றுமீட்டுருவாக்கக் கோட்பாடு" (Historical Reconstruction Theory) முக்கியத்துவம் பெறுகிறது. வரலாற்றினை நாட்டார் வழக்காற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்ந்து வெளிக்காட்டுவதன் மூலம் இந்திய தமிழர்களின் பெருந்தோட்ட துறைக்கான வரவும், இதனோடு இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்த தமிழரின் நாட்டாரியலும், இதற்கு முன்னர் காணப்பட்ட நாட்டார் வழக்காறுகளையும் பிரித்து ஆராயலாம். இதன் மூலமே இந்திய வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவளி தமிழரின், அவர்கள் குடியேறிய புவியியல் ரீதியான மலையகத்தின் நாட்டார் வழக்காற்றின் தொன்மம் பற்றி ஆராய முடியும்.

இவ் வரலாற்று நிலவியல் மற்றும் வரலாற்றுமீட்டுருவாக்கக் கோட்பாடு அணுகுமுறைகள் கொண்டே இவ்வாய்வு அணுகப் பட்டுள்ளது. ஒரு வழக்காறுவகை ஒட்டுமொத்தமாக இறந்து போகலாம் அல்லது மறைந்து போகலாம். அதுபோல ஒரு வகை வழக்காறு, தேவையற்றதாகிவிடலாம். தேவையற்றதாகிவிட்ட ஒரு வகை வழக்காறு இன்னுமொரு குழுவினரிடையே வழக்கிலிருக்கலாம்.

இந்திய அரசப்பம்பரையினர் இலங்கையை ஆட்சிசெய்தகாலத்து நாட்டார் வழக்காறுகள், அக்காலமன்னர் வழிபாடுகள், கலைகள், வாய்மொழிக்கதைகள் இருந்துள்ளன. அதற்கு ஒப்புவமையுடைய வேறோரு சமூகமாக ஆங்கிலேயரினால் இலங்கைக்கு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தோட்ட தொழிலாளர்களது நாட்டார்வழக்காறுகள் காணப்படுகின்றன. இவ் வழக்காறுகள் வாய்மொழியாக பரவுவதால் பழங்காலத்து எச்சங்கள் என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நாட்டார்கதைகள், பழமொழிகள், விடுகதைகள், வாய்மொழிப்பாடல்கள், இதில் ஒப்பாரிப்பாடல்கள், விளையாட்டுபாடல்கள், சிறுவர்பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், நையாண்டிப்பாடல்கள், உடுக்கடிப் பாடல்கள், கதைப்பாடல்கள், திருகைப்பாடல்கள், நெல்லுக்குற்றும்பாடல்கள், ஏற்றப்பாடல்கள், அம்பாப்பாடல்கள், விளையாட்டுபாடல்கள், கோலாட்டப்பாடல்கள், வில்லுப்பாட்டு பிற என பல்வகைப்படும்.

ஒரு காலத்தில் மன்னர் வழிபாடு முக்கியத்துவம் பெற்றுகாணப் பட்டுள்ளது. அரசனுக்கு செய்யும் பணி அரசன் வழிப டும் தெய்வத்தையும், உள்ளடக்கியிருந்தது. வழிபாட்டின் சில பணிகளை அரசன் குடிகளுக்கும் ஓதுக்கினான். இதன் பிரகாரமே அரசர்காலத்தில் கண்டி பெரஹரா ஊர்வலத்தில் கரகம், காவடி, கசையடி, வில்லு சண்டை, அம்புசண்டை, வாள்சண்டை, சிலம்படி, உறுமி, கோலாட்டம் போன்றனவும் கரணப்பட்டுள்ளன. இந்தியதோட்டதொழிலாளர்கள் வருகைக்கு முன்னரே இவை நிகழ்த்தப்பட்டதற்கு இங்கு பல ஆதாரங்கள் உண்டு. இது போலவே, ஐயனார் வழிபாடு மன்னர் காலந்தொட்டு இங்கு நடைபெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாய்மொழி வாய்ப்பாட்டுகோட்பாடு:

வாய்மொழிபாடல்கள் எவ்வாறு உருவாக்கப்படுகிறது, கட்டப்படுகிறது. நிகழ்த் துறன் (Performer) குறிப்பிட்ட பனுவலை (Text) மனப்பாடம் செய்கின்றனரா? அல்லது பாடும் கணத்தில், ஆசுகவியாக பாட்டுக்கட்டுகின்றனரா? என்பது கேள்விக்குரியதாகும். இங்கேயே, 'வழக்காற்று வகைமை' என்ற கோட்பாடும், வளர்ச்சியடைகிறது. இது ஒரு காலத்தில் நிகழ்வாகவும், மற்றெரு காலத்தில் பழையமரபாகவும், பின்னர், புராண கதையாகவும், மாறுகின்றது.

நாட்டார் வழக்காற்றில் 'சூழல்கோட்பாடு'ம் முக்கியமானதாகும். பொருண்மை சூழல், நிறுவனச்சூழல், கருத்துபுலப்படுத்த ஒழுங்கமைப்புச்சூழல், சமூகச் சூழல், தனிப்பட்டசூழல், நிகழ்வுச்சூழல் ஆகியனவும் முக்கியத்துவம் பெறுகிறது. இதனையே பொருள், இடம், காலம், எனவும் குறிப்பிடுவர்.

இம்மக்களது தாய்வேர்களான மதநம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், கலைகள், ஆகியவற்றில் தென்னிந்தியாவில் இவர்களது பூர்வீகஇடங்களில் காணப்பட்ட பண்பாட்டின் வேர்கள் காணப்படுவதைக் காணலாம். ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரை சமயச் சடங்குகளுடன் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் பின்னிப் பிணைந்துள்ளது.

வெளியுலகத்தொடர்பற்று தனிமை, மழை, மலைகள் காரணமாக கடும்குளிர், காற்று, தொற்றுநோய்கள், பசிபட்டினி, துயரங்களும் காரணமாக சமயநம்பிக்கைக்கு பற்றுகோலாக அமைந்தன. இவர்களிடத்து குடும்பதெய்வங்கள், சிறுதெய்வங்கள் என வழிபாடு முறைகள் காணப்பட்டன. மாரியம்மன் ,பத்தினியம்மன், சிவபெருமான், உமாதேவியார், காளி, காயத்திரி, சரஸ்வதி, இலட்சுமி, விநாயகர், முருகன், இராமர், சீதை, அனுமான், கிருஷ்ணன், நாராயணன், சபரிமலைஐயப்பன், மாரியப்பன், காமாட்சி, ஏழுகன்னிகைகள் ஆகியன பெருந்தெய்வங்களாகவும், மதுரைவீரன், மாடசாமி, முனியாண்டி, ரோதைமுனி, காட்டுமுனி, தவறணைமுனி, கருப்பன்சாமி, வேட்கை கறுப்பன், செண்டாகட்டி, கவ்வாத்துச்சாமி, மின்னடையான், மலைசாமி, வைரவர், இடும்பன், வனத்துச்சின்னப்பர், அந்தோனியார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாள், சூசையப்பர், மாயாண்டி, சங்கிலிகறுப்பு, கறுப்புத் தெய்வம், சுடலைமாடன், உத்தரகாளி, ஆகிய சிறு தெய்வங்களை கு லதெய்வங் களாகவும் கொண்டுள்ளனர். ஆடு, கோழி, பலியிட்டு, சுருட்டு, சாராயம் படைத்தும், வழிபடுகின்றனர்.இவர்களிடத்து கதைப் பாடல்(Bullad) , அம்மானை, மாலை, ஏற்றம், கும்மி, போன்ற வடிவங் களில் உள்ளது. இவை அடித்தளமக்களின் கலைகள் எனவும் அழைக்கப்படுகின்றன. அடித்தளமக்கள் என்பனை சாதி, செய்யும் தொழில், ஆதிக்கம், பாலியல்நிலை, பொருளாதார நிலை, ஆகியவற்றில் ஒன்று அல்லது அனைத்திலும் குறைந்த அல்லது தாழ்ந்த மக்கள் என வரையறுக்கலாம். இன்று அருந்ததியினர் என்றும் அழைக்கின்றனர். இவர்களது வாய்மொழி வரலாறு என்பது ஆவணப்படுத்தப்படாத வரலாறு எனவும் கூறப்பட்டுவந்தது.

## பொதுவாக, செய்திப்பரிமாற்றங்கள்

1. வாய்மொழியாக (வாய்மொழி மூலங்கள்)
2. எழுத்துமொழியாக(எழுத்துமொழி மூலங்கள்) பரிமாறப்படுகின்றன. இவ்வாறானவற்றில்-

இம்மக்களின் நாட்டுப்புறப்பாடல்களில் புலம்பெயர்தல் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

*''ஆல மர மானேன்*
*ஆகா பெண்ணானேன்*
*ஆகா பெண்ணானேன்*
*ஆளுக்கொரு தேசமானோம்''* என்றும்,
*''எட்டுப் பேர் சேவகரும்*
*எலங்கைக்கு போனதில்*
*எட்டுப் பேர் வந்தென்ன =நீங்க*
*எலங்கையிலே மாண்டதென்ன''* என்றும்,
*''கூனி அடிச்ச மலை*
*கோப்பிக் கன்னு போட்ட மலை*
*அண்ணனைத் தோத்த மலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அந்தா தெரியுதடி -" என்றும்,*
*எலுமிச்சம் பழம் போல*
*இரு பேரும் ஒரு வயது*
*யாரு செய்த தீவினையோ*
*ஆளுக்கொரு தேசமானோம்"*

என்றும் கூறப்படுகின்றது.

சடங்குப்பாடல், தொழிற்பாடல், கதைப்பாடல்கள், கொண்டாட்டப் பாடல், ஏற்றப்பாடல், நடுகைப்பாடல், களையெடுப் புபாடல், கதிர்அறுவடைப்பாடல், வண்டிக்காரன் பாடல், என்பன இவர்களிடம் காணப்பட்டதோடு தேயிலைதோட்டம், இறப்பர் தோட்டம், கோப்பித் தோட்டங்கள் காரணமாக பிற்காலத்தில் தொழிலுக்கேற்ப மாறுதல் பெற்றுள்ளன.

கதைப்பாடல்கள் ராசன்பாடல், மதுரைவீரன்பாடல், கட்ட பொம்முபாடல், மணிக்குறவன்பாடல் என பல கதைப்பாடல்கள் காணப்படுகின்றன. இக்கதைப்பாடல்கள், வில்லுப்பாட்டின் மூலமும், உடுக்கடிப்பாடல்கள், சாமியாட்டம், பேயாட்டம், போன்றவற்றிலும் பாடப்பட்டவையாகும். இது நையாண்டி பாடல்கள், கேலிப்பாடல் களாகவும் உண்டு. இவர்களின் பாரம்பரியகலைகள், பண்பாட்டு விழுமியங்கள், கலாசார விழுமியங்கள் சில தற்போது அழிந்து வருகின்றன. நாட்டில் ஏற்பட்ட இனவாத பிரச்சினையோடு ஏற்பட்ட பயங்கரமான பயங்கரவாத சூழலும், இன முரண்பாட்டு முறுகல் நிலையும், புதிய கலாசார சூழலும்,உலகமயமாக்கலின் விளைவு களினாலும், ஆவணப்படுத்தப்படாமையினாலும் அழிந்தும் மறைந்தும் வருகின்றன.

இந்தியாவிலிருந்து வந்த இவர்களைத் தற்போது, இந்தியவம் சாவளி தமிழர்கள் என்றும், மலையகத்தமிழர் என்றும், அழைக்கப்படு கின்றனர். இவர்கள் பெருந்தோட்டங்களில் வேலை செய்வோராகவும், நகரசுத்தி தொழிலாளர்களாகவும், தோட்டங்களில் வேலைகளை கவனிக்கும் உத்தியோகத்தர்களாகவும் இருந்தவர்கள் இன்று ஆசிரியர் களாகவும், வணிகமுயற்சியாளர்களாகவும்,சுயதொழில் செய்பவர்க ளாகவும் உள்ளனர். இன்று பல தோட்டங்கள் மூடப்படுவதால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிப்பந்தி களாகவும், (டக்சி) முச்சக்கர வண்டி ஓட்டுநர்களாகவும், உள்ளனர்.

இவர்கள் ஆரம்பகாலத்தில் சாதி அடிப்படைலேயே, லயன்களில் தங்கவைக்கப் பட்டனர்.

| | | |
|---|---|---|
| அகம்பாடியார் | சக்கிலியர் | |
| அம்பட்டார் | சாணரர் | பறையர் |
| அம்பலகாரர் | செட்டி | பள்ளர் |
| ஆசாரி | கோமுட்டிச்செட்டி | பண்டாரம் |
| இடையர் | வள்ளுவர் | மறவர் |
| ஒட்டர் | வளையட்செட்டி | முத்துராசா |
| கம்மாளர் | தேவர் | முதலி |
| கவுண்டர் | நாடார் | வடுகவண்ணார் |
| கள்ளர் | நாயர் | வலையர் |
| குயவர் | நாயுடு | |
| வேளாளர் - | ஆறுநாட்டு வேளாளர்கள், கொங்கு வேளாளர்கள், | |
| கோனார் | தேவேந்திர பள்ளர் | |

கொடிக்கா வேளாளர்கள், சோழியர் வேளாளர்கள்

என பல சாதிகள் உண்டு.

இவர்கள் சாதிக்கேற்ப ''உறைநிலையில்'' வைக்கப்பட்டனர். உள்ளூர் தொடர்புகளோடு ஒதுக்கப்பட்டனர். சாதி வேறுபாடுகளுக்கேற்ப புறம்பாக வைக்கப் பட்டனர். இவர்கள் தனிசாதியாகவும் சாதிக் கூட்டமாகவும் வாழவிடப்பட்டனர். வாழ்ந்தும் வந்தனர்.

இன்று இந்நிலை மாறிவருகின்றது. கலப்புத்திருமணங்கள் இதற்கு, ஒரு காரணமாக அமைந்துள்ளதுடன்,பேரினவாதத்துக்குப் பயந்து, சகலரும் தமிழர் என்றபோர்வைக்குள் சாதிவேறுபாடுகளைவிட்டு இணையும் நிலை காணப்படுகிறது. கோழி, ஆடுகள் பலியிடப்படும் முறை சுருட்டு, சாராயம் படைத்தல், போன்றனவும், முனிதெய்வ வழிபாடும் பலியிடலும், சாமிபார்த்தல், முறைகளும், குறைந்தும் நீங்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை முதல் மாலை வரை வேலை கணவன், மனைவி, குடும்ப உறுப்பினர்கள் சகலருக்கும் தோட்டத்தில் தொழில் வழங்கப்பட்டு அத்தொழிலில் முழுமையாக ஈடுபடுத்தப்பட்டனர்.ஆனால் இன்று இந்நிலை நீங்கி வருகிறது.

இவர்களது வழக்காற்றில் வாழ்க்கைச்சடங்குகள் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

பிறப்பு, பூப்புனித நீராட்டு, திருமணம், இறப்பு, ஆகிய சடங்குகள் முக்கியமாக வுள்தோடு ஆடிமாதத்தில் பெண்ணை தாய்வீட்டுக்கு அனுப்புதல், பெண்பிள்ளைக்கு காது குத்துதல், திருமணம் முடித்தபின், ஆடி பதினெட்டாம் தினத்தில் பெண்ணின் தாய்வீட்டிலும், அடுத்துவரும் வருடங்களில் கணவனின் தாய்வீட்டிலும் தாலியினை புனிதப்படுத்தி கயிறு மாற்றுதல், தாலியினை மஞ்சள் நீராட்டல், பொட்டு என்ற அணியை தாலியுடன் இணைத்தல், மற்றும் பெண் கருத்தரித்த ஐந்தாம், ஏழாம் ஒன்பதாம் மாதங்களில், கட்டுச்சோறு கட்டும் நிகழ்வு, இதில் முதலில் பெண்வீட்டார் கட்டுச்சோறு கட்டுவர், பெண்வீட்டார் மாப் பிள்ளை வீடு சென்று வளை காப்பு அணிவித்தல், இது பெண் கருத்தரித்து ஏழாம் மாதத்தில் செய்யப்படுகிறது. பிரசவத்துக்கு தாய்வீடு அழைத்துவரல், புளிகரைத்து தயிர்சோறுகட்டல், தேசிக்காய் அல்லது தக்காளிச்சோறு கட்டல், வெள்ளைச் சோறு கட்டல், போன்றனவும், செய்யப்படுகிறது. இதுதவிர, மகப்பேறு பார்த்தல், மகப்பேற்று தாயை நீராட்டல், சேனைப்பாலூட்டல் என, பிள்ளைப் பாலூட்டல், பேய் பிசாசுக்கு தோசப்பரிகாரம் செய்தல், கழுத்தில் அல்லது இடுப்பில் நூல் கட்டல், கறுப்புபொட்டு வைத்தல், தொட்டில் கட்டுதல், தாய்மாமன் ஏணைச்சீர் கொடுத்து தொட்டில் கட்டுதல், பெயர் சூட்டுதல், முடி இறக்குதல், பல்லுகொழுக்கட்டை அவித்தல், வித்தியாரம்பம் அல்லது ஏடு தொடக்குதல், பூப்புனித நீராட்டலில் நீர் வார்த்தல், களி கிண்டுதல், வண்ணான் சடங்கு, புண்ணியதானம், அதன்பின் திருமணம், தாம்பூலம் மாற்றுதல், பத்திரிகை வைத்தல், பொன்னுருக்கல், மணமகளின் வருகை, மணமகனின் வருகை, முகூர்த்தக்கால் ஊன்றுதல், ஓமம் வளர்த்தல், கன்னிகாதானம், மாங்கல்யதாரணம், அம்மிமிதித்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஞ்சிபோடுதல், அருந்த்தி பார்த்தல், குழந்தைபரிமாறல், ஐயர் இல்லாத திருமணம் என்பனவும், மரணச்சடங்களும், இதில் கோடி போடுதல், கட்டைமெய் எடுத்தல், மாமன் சீர் கொடுத்தல், நீர் மாலைஎடுத்தல், அரைப்பு வைத்தல், நெய்பந்தம் பிடித்தல், சீதேவி வாங்குதல், வாய்க்கரிசி போடுதல், கொள்ளிக்குடம் உடைத்தல், எட்டுச்செய்தல், மூன்றாம் குழிமூடல், கருமாதி செய்தல், தாலி கழற்றல், திவசம் என மரணச்சடங்கள் பலவும் அமைந்துள்ளன.

இவர்களது இசைக்கருவிகள் பாவனையினை ஆராய்வின் வீணை, தம்புரா, சுரசெத்து, வயலின், புல்லாங்குழல், நாதசுரம், சங்கு, எக்காளம், கொம்பு, மத்தளம், பறை, தவில், கஞ்சிரா, டமாரம், உடுக்கை, தமசபட்டம், முரசு, ஜால்ரா, கடம், கொக்கள், குடுக்கை என்பன ஆங்காங்கே புழக்கத்தில் உள்ளன. பல கருவிகள் அழிந்து போயின. குடமுழவம், கொடு,கொட்டி, துடி, பசகம், குரித்தாளம், கஞ்சிரா, நாற்சுரம், நாழி, நூம்பு ஆகியன அழிந்து போயின.பறை, சிலம்பு மற்றும் கூத்துகள்-கலைகள் ஒரு காலத்தில் இவர்களிடம் சிறப்பு பெற்றிருந்தது.

பறைக்கு தப்பு என்றே கூறுகின்றனர். காலைத்தப்பு, பிரட்டுத்தப்பு, பகல்உணவுத்தப்பு, மாலைத்தப்பு, ருதுசாந்தித்தப்பு, திருமணத்தப்பு, சாவுத்தப்பு, காவடித்தப்பு, கரகத்தப்பு, காமன்தப்பு, என பல வகைத்தப்புகள் அடிப்பர். காமன்கூத்து, பொன்னன்சங்கர், அர்ச்சுனன் தபசு போன்ற கூத்துகளும் அவற்றுக்கு அடிக்கும் தப்புகளும் வேறுபட்டன. இராமபஜனையும் தோட்டங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளன. 'வஸ்தா' என அழைக்கப்படும், சிலம்பாட்டம் மலையகத்தில் சிறப்புப்பெற்று காணப்பட்டது.

கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, கோலி, கிளித்தட்டு, சடுகுடு, தாயம், சேவல் சண்டை, ஏறு தழுவல் போன்றன ஆங்காங்கே அவ்வப்போது விளையாடப்படுகின்றன. சில ஒழிந்தும் போயின.பட்டம் விடுதல் அல்லது காற்றாடி,பம்பரம் விடுதல் ஆகியவே இன்னும் காணப்படுகின்றன. அதுவும் குறைந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

அண்மைக்காலமாக ஊடகங்களில், நாட்டுபுறகதைகள் உள்வாங்கப் பட்டுள்ளன. சினிமாவில் உள்வாங்கப்பட்ட நாட்டுபுறகதைகள், பாடல்களை மக்கள் இரசிக்கின்றனர்., நாட்டுபுறகதைகள், பாடல்கள், கலைகள், ஆடல்கள், கூத்துகள், விளையாட்டுகள் என பல்துறையிலும் தற்போது வெவ்வேறாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், நாட்டுபுறக்கலைஞர்களுக்கு இன்றும் சமூகத்தில் சிறந்த அந்தஸ்து வழங்கப்படவில்லை. தற்போது 'கிரிக்கெட்' போட்டிகளில் 'கிளர்னட் பாண்ட்' அடித்து ஆடுகின்றனர். இதன் மூலம், சடங்குமுறை கலைஞர்கள், மெல்லமெல்ல தொழில்சார்கலைஞர்களாக மாறி வருகின்றனர். ஆனால், இதனை 'சக்கிலி பாண்ட்' என்றே இன்றும் அழைக்கின்றனர். ஏற்றப்பாடல்கள், நடுகைப்பாடல்கள், அறுவடைப் பாடல்கள் இன்று இயந்திர முறைகளில் அறுவடைசெய்தல், நீர்பாய்ச்சு தல் போன்ற இயந்திரமயமாக்கல் காரணமாக மங்கி போய், வழக்கொழிந்து அழிந்து போயின.

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மதமாற்றம்,தமது செயல்கள் வழிபாடுமுறைகள் பிற்போக்கானது என நினைத்து, நற்போக்கையும், முற்போக்கையும் விரும்புபவர்களாக, தம் மதச்சடங்குகள் ஏனைய மதத்தினர் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினால் ஏற்பட்டுள்ள வெட்கம் போன்றவற்றினாலும் சில வழிபாட்டுமுறைகளும், சடங்குகளும் கைவிடப்பட்டும், மாற்றம் பெற்றும் வருகின்றன.

பல இசைக்கருவிகள் ஒழிந்து போயின. பறைச்சத்தம் குறைந்து போனது. சிலம்பாட்டம் ஏறத்தாழ முற்றாகவே அழிந்துபோயிற்று. அர்ச்சுனன் தபசு, பொன்னன்சங்கர், போன்ற கூத்துகளைக் காணமுடி வதில்லை. காமன்கூத்தானது இன்றும் சில பகுதிகளில் ஆடப்பட்டு வருகின்றது. அதுவும் தற்போது, காமன்கூத்து, புதுப்பொலிவுடன், புது இசைவடிவத்துடன் மேடையேறுகின்றது. ஒப்பாரிப்பாடல்களை கேட்கவே முடிவதில்லை. தற்போதெல்லாம், மரணவீடுகளில் துக்கமான, கவலையுடனான சினிமாப்பாடல்களையே ஒலிபரப்புகின்றனர். சில தோட்டங்களிலேயே இன்னும் சங்கொலி கேட்கின்றது. அதற்கு பதிலாக பல தோட்டங்களில் ஹோர்ன் சத்தமே கேட்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்மொழி பாடல்கள் மறக்கப்பட்டுவிட்டது. நாட்டார் விளை யாட்டுக்கள் பல அழிந்தும், மறந்தும் போயிற்று. கிரிகட், கைத்தொலை பேசி, தொலைக்காட்சி, இருவெட்டில் திரைப்படங்கள், சின்னத்திரைகள் மற்றும் பிரத்தியோக வகுப்புகள் ஆகியன அவ்விடத்தில் நிரம்பியுள்ளது.

பாவனையிலில்லாமலும் உள்ளது. பல விளையாட்டுக்கள் அழிந்து போயின. எனவே மிகுதியாயுள்ளவற்றையாவது ஆவணப்படுத்தி தொகுத்து பாதுகாத்து வைக்கவேண்டும். இல்லாது போனால் எஞ்சிருப்பதும் அழிந்துபோன பின் இப்படி ஒன்று இருந்தது என கூறமுடியாத நிலை உருவாகலாம் அல்லது இப்படிப்பட்ட ஆய்வுக் கட்டுரைக்காக மட்டும் பயன்படுத்தப்படலாம்.

**உசாத்துணை நூல்கள் :**

1. தமிழ் நாட்டார் வழக்காற்றியல். பதி. க. சண்முகலிங்கம், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 1995.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# இலங்கை வரலாற்றில் பெண் தெய்வ வழிபாடும் தமிழர் பண்பாட்டில் அதன் செல்நெறியும்

**அறிமுகம்:**

இலங்கையில் பெண் தெய்வவழிபாடு ஆதிவாசிகள் காலத்திலிருந்து நீண்டகாலமாக நிலவி வந்துள்ளது. இது பல்வேறு சூழலில் பல் வேறுவகையில் நிலவி வந்துள்ளது. இலங்கையில் பெண்தெய்வ வழிபாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சக்தி வழிபாடாக அம்மன் வழிபாடு, கண்ணகிவழிபாடு என்றும் பிரித்தானியர் காலத்தில் குடியேறிய இந்தியத்தமிழர் வாழும் மலையகத்தில் மாரியம்மன் மற்றும் சிறு தெய்வவழிபாடாகவும், சிங்களவர்கள் பரந்துவாழும் பிரதேசங்களில் பத்தினி அம்மன் வழிபாடாகவும் நிலவிவருவதைக் காணமுடிகின்றது. சிந்துவெளி நாகரிகத்திலும், சுமேரியநாகரிகத்திலும் பெண்தெய்வவழிபாடு நிலைபெற்றிருந்தமைக்கு ஆதாரங்கள் உண்டு. சுமேரியநாகரிகத்தில் நிந்து, நின்மா, ஈணான், ஸ்தார், யூரினோம்। இயாசிம் ஆகியன பெண் தெய்வங்களாகக் குறிப்பிடப் படுகின்றன. யூதர்கள் 'யாஹோவா' எகிப்தியர்கள் 'ஜஸீஸ்' என்றும், பபிலோனியர்கள் 'நியாமத்' என்றும், ரோமர்கள் 'வீனஸ்' என்றும் வணங்கினர். பெண் தெய்வ வழிபாடாகிய சக்திவழிபாட்டுக்கு இருக்கு வேதத்திலும் குறிப்புகள் உள்ளன. வாக்தேவி, அதிதிவாக்புரந்தி, திஷக, ஈரை, வாருணி போன்ற பெண் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் காணப் படுகின்றன. சைவசமயத்தில் பெண்தெய்வ வழிபாடாக சக்தி வழிபாடு, உமாதேவி, துர்க்காதேவி, அம்மன், காளி தேவி, கண்ணகி வழிபாடு காணப்படுகின்றன. சிந்துவெளிநாகரிகச் சின்னங்களிலும், சுமேரிய நாகரிககாலத்துச் சின்னங்களிலும் சைவ சமயத்திலும் சிங்கவாகனத்துடன் பெண்தெய்வம் காணப்படுகின்றது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் சேரன் செங்குட்டுவன், சோழ நாட்டைச் சேர்ந்த, பாண்டியநாட்டில் கணவனை இழந்து நீதிகேட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகிக்கு கோயில் எடுத்த விழாவில் கலந்து கொள்ளக் கடல் சூழ் இலங்கைக் கயபாகு மன்னன் வருகை தந்ததாகச் சிலப்பதிகார வரந்தரு காதையிலும் இராஜரெத்தினகர போன்ற சிங்கள நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கயபாகு மன்னன் கண்ணகி சிலையைப் பிரதிஷ்டை செய்த பின்னரே, சிங்கள மக்கள் பத்தினித்தெய்வ வழி பாட்டில் ஈடுபட்டனர் என வரலாறுகள் கூறுகின்றன. கண்டி, தெவிநுவர, அங்குரான்கெத்த, குண்டசாலை ஆகிய இடங்களிலும் பத்தினித் தேவாலயங்கள் உண்டு. கண்டி எசலபெரகரா (ஆடிதிருவிழா) வில் புத்தபெருமானின் புனிதப்பல் ஊர்வலத்துடன் பத்தினி கோயில் ஊர்வலமும் இடம் பெறுகின்றது. புளியங்குளம், பாணமை, களுவன் கேணி, திகிரிவட்ட ஆகிய இடங்களிலும் பத்தினி தேவாலயங்கள் காணப்படுகின்றன. பத்தினிப் பெண்கள் வழிபாடு செய்ய பன்திஸ் கேன்முற என்னும் முப்பத்தைந்து நூல்கள் சிங்கள பௌத்தர் களுக்காக எழுதப்பட்டுள்ளது. சிங்களவர் மத்தியில் கதிர்காமத்தில் முருகக்கடவுள் வழிபாட்டுடன் வள்ளியம்மை, தெய்வானையம்மை வழிபாடுகளும் காணப்படுகின்றன. மடுத்திருப்பதியில் பத்தினி தேவாலயம் காணப் பட்டதாக வரலாறுகளில் கூறப்படுகிறது. இலங்கை தமிழ் கத்தோலிக்கர் களிடத்து மாதா வழிபாடு உண்டு. இவர்கள் ஒரு புனிதையாகக் கருதி வழிபடுகின்றனர். மன்னார் மடு, மாத்தறை, மாதா கோயில்களும், கண்டி தென்னக்கும்புர படிவத்த பாத்திமா அன்னை போன்ற பெரிய கோயில்களும், பல சிறிய கோயில்களும் பரவலாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் பெண்தெய்வங்கள் ஊருக்கு ஒன்றாகப் பெருகிக் காணப்படுவதோடு, தற்போது அழிந்தும் மறைந்தும் மாற்றம் பெற்றும் வருகின்றன. எனவே, சடங்கு முறையிலான மரபுவழி வந்த நம்பிக்கைகள் போற்றப்படுவதற்கான காரணங்கள் ஆகியன பற்றிப் பதிவு செய்வதும், ஆவணப்படுத்தி எதிர்காலத்தில் சந்ததியினர் தமது பண்பாட்டினை அறிந்து கொள்ளக்கூடிய வகையில் எடுத்துக்காட்டு வதும் இன்றைய நிலையில் அவசியமாகும்.

இலங்கையில் தாய்த்தெய்வ வழிபாடான பெண்தெய்வ வழிபாடு தொடர்பான தோற்றம், காணப்பட்ட சூழல், புவியியல் காரணிகள் வரலாறு, காரணப்பெயர்கள், மற்றும் பல்வேறு தளங்களில் பெண் தெய்வவழிபாட்டின் வளர்ச்சியின் போக்குகள் பற்றி ஆராய்வதும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்வழிபாட்டுடன் தொடர்புடைய கலாசார, பண்பாட்டுக் கூறுகளை வெளிக்காட்டுவதுமே, இவ்வாய்வின் நோக்கமாகும்.

களப்பணி, வரலாற்று, விவரண அணுகுமுறை ஆகியன கொண்டு ஆராயப்படுவதோடு, முதன்மை ஆதாரங்கள், இரண்டாம் நிலை ஆதாரங்கள், கடந்த கால ஆய்வுகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படும்.

உலகில் பெண்தெய்வவழிபாட்டினைப் பெருந்தெய்வவழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆகம சிற்ப விதிப்படி அமைக்கப்பட்டு ஆறுகாலப்பூசைகள் இடம்பெறும். பிராமணர்கள் பூசகர்களாக உள்ள கோயில்கள் பெருந்தெய்வ வழிபாட்டுத் தலங்களாகும். திருமகள், சரஸ்வதி, பராசக்தி, ஆதிபரா சக்தி, ஆதிலட்சுமி, தானியலட்சுமி, வீரலட்சுமி, கஜலட்சுமி, சந்தானலட்சுமி, விஜயலட்சுமி, வித்யாலட்சுமி, சக்தி, தனலட்சுமி, மாரி, வைஷ்ணவி, நாராயணி, பத்தினி, கண்ணகி, இராஜராஜேஸ்வரி, மலைமகள், தாட்சாயிணி, பார்வதி, உமாதேவி, முத்துமாரி, அம்மன், துர்க்காதேவி, காளிதேவி, வள்ளியம்மை, தெய்வானையம்மை ஆகியனவற்றைப் பெருந்தெய்வங்களாக வகைப் படுத்தப்படலாம்.

சிறுதெய்வவழிபாடு பிராமணர்கள் அல்லாத பூசகர்களைக் கொண்டது. உயிர்ப்பலியிடல் நடைமுறையிலுள்ளது. தெய்வங்கள் கொடூர உருவ முடையவையாகச் சிறுதெய்வவழிபாடு காணப் படுவதுடன், கோயில்களுக்கென ஆகமசிற்ப அமைப்புகள் இல்லை. சிறுதெய்வங்கள் நோய்கள், சூனியங்கள், கண்ணூறு, நாவூறு கெடுதல், துன்பங்கள் போன்ற தீமைகளிலிருந்து காப்பாற்றுவனவாக நம்பப்படுகின்றன. சிறுதெய்வங்கள் ஏவுதலின்படி கெடுதல் செய்யக் கூடியனவாக உள்ளன. சிறுதெய்வங்கள் ஊருக்கு ஒன்றாகப் பெருகிக் காணப்படுகின்றன. அங்காளம்மன், அங்காளபரமேஸ்வரி, முப்பத்தம்மன், பச்சையம்மன், பார்வதியம்மன், சோழபுரியம்மன், எல்லையம்மன் மாதங்கியம்மன், முத்துக்காளியம்மன் சோடியம்மன் காத்தாயியம்மன், குத்தாளம்மன், காளியம்மன், பங்காரகாமாட்சி யம்மன், பச்சைக்காளி, சியாமளாதேவியம்மன், செங்கமல நாச்சியம்மன், செல்லியம்மன், திரௌபதியம்மன், கனகதுர்க்கையம்மன், மனோன் மணியம்மன், பொற்கொடியம்மன், கங்கையம்மன், காட்டேரியம்மன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகினி, பிடாரி, பேச்சி, பிச்சி, பிள்ளைக்கொல்லி, உத்திரகாளி, அறியாத்தம்மன், காளிகாம்பாள், பேச்சியம்பாள், ஸ்ரீபுவனேஸ்வரி யம்பாள், அன்னபூரணியம்மன், ஸ்ரீதுர்க்காதேவி, சிவகாமியம்மன், கருமாரியம்மன், கண்ணகியம்மன், பூமாரியம்மன், கடல்நாச்சி யம்மன், துர்க்கையம்மன், வீரமாகாளியம்மன், பத்தினியம்மன், வட்ட பாதையம்மன் போன்றன சிறுதெய்வங்களாகவும் வகைப் படுத்தப்படலாம்.

நயினாதீவில் நாகபூசணியம்மன், மட்டக்களப்பில், வடமராட்சி பருத்தித்துறையில், மந்திகை மற்றும் மாதனையில்; கண்ணகியம்மன், கண்டியில் பத்தினியம்மன், மாத்தளையில் முத்துமாரியம்மன், தெல்லிப்பளையில் துர்க்காதேவியம்மன், யாழ்ப்பாணம் நல்லூரில் வீரமாகாளியம்மன், சம்பூரில், பொலன்னவையில், ஏறாவூரில், போரதீவில், அன்னமலையில், சிலாபத்தில் காளியம்மன், மட்டக் களப்பில், கோட்டமுனையில், பருத்தித்துறை தும்பளையில் மாரியம்மன், பருத்தித்துறை தும்பளையில் பத்திரகாளியம்மன் வழிபாடு பிரசித்தி பெற்றுள்ளது. மாரியம்மன் கோயில்களில் வெள்ளிப்பிரம்பு, உடுக்கை, வேப்பிலை, அம்மாணக் காய் என்பன முக்கிய சின்னங்களாகும். உயிர்ப்பலி, உருவேறுதல், தெய்வமாடுதல், கும்பமெடுத்தல், தீமிதித்தல் என்பனவும் இங்கு நடைபெறுகின்றன.

காளிகோயில்கள் இலங்கை நாட்டின் பலபகுதிகளிலும் பரந்து காணப்படுன்றன. திருகோணமலை காளிகோவில், சம்பூர் பத்திர காளியம்மன், உப்புவெளி காளியம்மன், பறையனாங்குளம் எல்லைக் காளியம்மன், படுக்கைப்பத்திரகாளியம்மன், பாலம் போட்டாறு பத்திரகாளியம்மன் மற்றும் பல அம்மன் ஆலயங்கள் திருகோண மலை நகரினைச் சூழ அமைந்துள்ளன. காளியம்மன் காவல் தெய்வமாகவே கருதப்படுகின்றது. குளக்கோட்டன் மன்னன் காலத்தில் திருகோணமலை காளியம்பாள்கோவில் எல்லைக்காளி கோயிலாகவே திகழ்ந்துள்ளது. இவ்வாலயத்தின் நிருத்தமண்டபத்தில் வலது புறத்திலுள்ள தூணில் இராஜராஜ சோழனின் புதல்வரான இராஜேந்திர சோழனின் (கி.பி. 1012-1044) மெய்கீர்த்தி பொறிக்கப் பட்டுள்ளது. ஏறத்தாழ ஏழாயிரம் ஆண்டுகள் பழைமைவாய்ந்த கல்வெட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலின் பழைமையினையும் தொன்மைச் சிறப்பினையும் எடுத்தியம்புவதாகக் கருதப்படுகின்றது.

'காளி ஆச்சி' என அழைக்கப்படும் திருகோணமலை பத்திரகாளி யம்பாள் ஆகமவிதிப்படி அமைக்கப்பட்ட ஆலயத்தில் எழுந்தருளி இருப்பதுடன், சங்கு, சக்கரம், வில், கதாயுதம், கலப்பை, கேடயம், ஈட்டி, பாசம், சூலம் என்று பல்வேறு ஆயுங்களுடன் காட்சியளிக் கிறாள். சம்பூர் பத்திரகாளியம்மன் கோயில் அறுநூறு ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்தது. போரதீவிலுள்ள பத்திரகாளியம்மன் ஆலயத்துடன் பண்டைய இயக்கரின மக்களைத் தொடர்புபடுத்தி மட்டக்களப்பு மான்மியத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே, மட்டக்களப்பில் ஆதிக் குடிகள் வாழ்ந்த காலத்தில் போரதீவு பத்திரகாளியம்மன் ஆலயம் தோற்றம் பெற்றது எனலாம். இலங்கைத்தமிழ் மக்கள், இந்திய வம்சாவளி மக்கள் மத்தியில் மாரி மற்றும் முத்துமாரியம்மன் வழிபாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. மாரியம்மன் மற்றும் முத்துமாரியம்மன் கோவில்கள் நாடெங்கிலும் காணப்படுகின்றன. பன்னிரண்டு மடைகள் வைத்தல், பூசைசெய்து தெய்வம், உரு ஆடுதல், கற்பூரம், சர்க்கரைப் பொங்கல் செய்தல், பூக்குழி இறங்குதல் அல்லது தீமிதித்தல் என்பன நடைபெறுகின்றன. பராயமடையாத பன்னிரண்டு சிறு பெண்களை நீராட்டி, புது ஆடைகள் அணிவித்து, பூப் போட்டு, சர்க்கரைப் பொங்கல் படைத்து, பூசை செய்வார்கள். மாரியம்மனுக்குச் சர்க்கரைப் பொங்கல் பிரியமானது என மக்கள் நம்புகின்றனர். மாரியம்மனுக்குக் குளிர்த்தி, பள்ளயம் செய்வர். நோய்கள் தொற்றாது எனவும் மக்கள் நம்புகின்றனர்.

மழைவேண்டியும் மாரியம்மனுக்குச் சடங்குகள் நடத்தப்படுகின்றன. 'பூக்குடம் எடுத்தல்' எனும் சடங்கு, இலங்கையின் கிழக்கு மாகாணத் திலும், வடக்கு மாகாணத்திலும், மழை வேண்டி நடத்தப்படுகின்றது. இந்நிகழ்வில் பெண்கள் நீர்க்குடம் ஏந்தி, குரவையிட்டபடி, அம்மன் மீது பாடல்களைப் பாடியபடி குடத்து நீரினை கோயிலைச்சுற்றி அம்மன் மூலஸ்தானத்தினைச் சுற்றி ஊற்றுவர். முதல் குடம் நீரை அம்மனின் மூலஸ்தானத் திருவுருவத்துக்கு ஊற்றுவதும் உண்டு. இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் நடைபெறும் மாரியம்மன் வழிபாடுகள் தனித்துவமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் ஆகமவிதிப்படி கோயில்கள் அமைக்கப்பட்டு இருப்பதுடன், குளிர்த்தி வழிபாடுகளும் நடத்தப்படுகின்றன. நேர்த்தி, கடன் கழித்தல், கரகம் எடுத்தல் போன்றனவும் நடைபெறுகின்றன. 'ஆருகடன் நின்றாலும் மாரிகடன் ஆகாது' என்பது மலையகத்தில் வழங்கும் பழமொழி ஆகும். அதாவது, மாரியம்மனின் நேர்த்திக் கடனைப் பூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்பதே பொருளாகும். மாரியம்மன் வழிபாடு வடமேல் மாகாணத்திலும் காணப்படுகின்றது. மலையகத்திலும் ஆகமவிதிப்படி கோயில்களை அமைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. மலைய கத்தில் மாத்தளையில் முத்துமாரியம்மன் ஆலயம் ஆகமவிதிப்படி அமைந்த கோயிலுடன் மகோற்சவம் நடைபெறும் கோயிலாக விளங்குகின்றது. இக்கோயில் ஆயிரத்து எண்ணூறுகளில் சிறுகொட்டிலில் மிகச்சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு இருந்ததாக அறியப்படுகின்றது. அம்மைநோய்கள், கண்நோய்கள் போன்ற தொற்று நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்காக முத்துமாரியம்மன் வழிபாடு செய்யப்படுகிறாள். முத்துமாரியம்மன் கோபமுற்றால் முத்தெறிவாள் என்றும், இதன் காரணமாக அம்மைநோய்கள் வரும் எனவும் மக்கள் நம்புகின்றனர்.

இலங்கையில் வளமான வாழ்வுக்காகவும் நோய்களிலிருந்து பாதுகாப்புக்காகவும், மழை வேண்டியும் கண்ணகியம்மனுக்கு வழிபாடு நடத்தப்படுகின்றது. வைகாசி மாத பூரணைதினத்தில் அல்லது வைகாசிமாத பூரணையினை அடுத்து வரும் திங்கட்கிழமைகளில் கண்ணகியம்மன் கோவில்களில் பொங்கல் வைத்துப் பூசனை செய்யும் வண்ணம் திருவிழா நடைபெறும். திருவிழா தொடங்கும்போது விளக்கு வைத்தல் எனும் சடங்கு நடத்தப்படும். இச்சடங்குக்காக கடலிலிருந்து நீர் எடுத்து வந்தே திருவிழா முடியும் வரை விளக்கு ஏற்றப்படுவதாக கூறப்படுகின்றது. கண்ணகியம்மன் கோவில்களில் பாற்பொங்கல் வைத்தே பூசனை செய்யும் முறை நிலவி வருகின்றது. வடஇலங்கை, கிழக்கிலங்கை உட்படப் பல பகுதிகளில் பல கண்ணகியம்மன் ஆலயங்கள் தோற்றம் பெற்றிருந்தன. புங்குடுதீவு, செட்டிகுளம், கரம்பன், புலோலியூர், மந்திகை, பொதிக்கடல், சங்குவயல் முதலான இடங்களில் கண்ணகியம்மன் கோயில்கள் எழுச்சிபெற்றிருந்தன. கிழக்கில் கண்ணகியம்மனை 'கண்ணகையம்மன்' என்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றுகின்றனர். கண் சம்பந்தமான கடவுளாக நம்பப்படுகிறாள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலரும் அவரது சகாக்களும் சிறுதெய்வவழிபாட்டினை விடுத்துக் கோயில்களை ஆகம மயப் படுத்தியபோது, பல கண்ணகியம்மன் கோயில்கள் வடக்கி லங்கை யிலிருந்து மறைந்தன. பல இராஜ இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, மனோன்மணி, நாகேஸ்வரி, நாகபூசணி என்னும் பெயர் கொண்ட சக்தி ஆலயங்களாக மாற்றம் பெற்றன. எஞ்சியிருப்பவை ஒருசில கோயில்களே. அவற்றுள் வற்றாப்பழை கண்ணகியம்மன் ஆலயம் பிரசித்தி பெற்றது. தலவரலாற்றுப் பெருமை கொண்ட புங்குடுதீவு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி ஆலயம் பண்டைய கண்ணகியம்மன் ஆலயம் எனக் கருதப்படுகின்றது.

பாண்டிய நாட்டிலிருந்து வெளியேறிய கண்ணகி இடைச்சேரியில் பாலமுதம் அருந்தியும் கொம்புமுறி விளையாட்டினைப் பார்த்தும் கோபமாறினாள் என்பது ஐதீகம். கண்ணகையம்மன் கோயில் திருவிழாக்களில் கொம்புமுறி விளையாட்டுகள் நடைபெறுகின்றன. பாலமுதம் பொங்கி பூசனை செய்வதும் நடைபெறுகின்றது. கண்ணகையம்மன் கோபத்துக்குள்ளானால் வைசூரி, கண்ணோய், குக்கல், வெப்பு, சின்னம்மை, வயிற்றுக் கடுப்பு, பெருஞ்சுரம் முதலிய நோய்களுக்கு ஆளாகவேண்டி வரும் என அஞ்சினர். பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பாண்டிருப்பு திரௌபதியம்மன் ஆலயமும் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய பழுகாமம் திரௌபதியம்மன் ஆலயமும் உடப்பிலுள்ள திரௌபதியம்மன் ஆலயமும் பிரசித்தமானவை. அத்துடன் கல்லடி புதூர், புளியந்தீவு, மட்டக்களி ஆகிய இடங்களிலும் திரௌபதியம்மன் ஆலயங்கள் தோன்றின. இவை பிரதானமாக வைணவ மதத்தினைப் பரப்பும் நோக்குடன் அமைக்கப்பட்டவை. மகாபாரதக் கதையினை அடிப்படை யாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டன. இங்கு தீக்குளித்தல் வைபவம் சிறப்பானது. பாண்டவர் வனவாசம் செல்லுதல், அருச்சுனன் தவம்செய்து பசுபதாஸ்திரம் பெறுதல், அரவாணைக் களப்பலி கொடுத்தல் போன்ற காட்சிகள் திருவிழாக் காலங்களில் பக்தர்களால் உருவகிக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவுரை :**

சங்ககால இலக்கியங்களில் நற்றிணை (216), புறநானூற்றுப் பாடல் களிலும் (144-146) கண்ணகிவழிபாடு பற்றிக் கூறப்பட்டுள்ளது போலவே இலங்கையில் இவ்வழிபாடு பரவியது பற்றிச் சிலப்பதிகார உரைபெறு கட்டுரையிலும், வரந்தருகாதையிலும் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் சக்திவழிபாடாகப் பெண்தெய்வ வழிபாடுகள் நிலைத் திருப்பதுடன், ஆகமசிற்பவிதிப்படியான வழிபாடாக மாறி வருவதை யும், மோகினி, பிடாரி, பேச்சி, பிச்சி, பிள்ளைக்கொல்லி, உத்திரகாளி போன்ற சிறுதெய்வவழிபாடுகள் அருகி, மறைந்து வருவதையும் காணலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


1. மகேஸ்வரலிங்கம், க., (1996) மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், தில்லை வெளியீடு.
2. வடிவேலன்,. பெ (1997) மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும், கலைஒளி முத்தையாப்பிள்ளை நினைவுக்குழு.
3. வேல்முருகு. ந., (1993) மலையகமக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும், வாசகர் பதிப்பகம்.
4. நாகேஸ்வரன். கனகசபாபதி (2013) நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்.மணிவிழாக்குழு., நயினை தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# நவீன ஊடகத்தில் நாட்டுப்புற கலைகள்

## அறிமுகம்

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் குறிக்கப்பட்ட இனத்தவர்களால் நிகழ்த்தப்படுவையாக உள்ளன. இது காலப்போக்கில் காலத்தின் நோக்கம் கருதி செழுமைப்படுத்தப்பட்டு நிகழ்த்துகலைகளாக (Performing Art) ஆயின. இது ஊடகங்களினால் (Mass media) உலகறியச் செய்யப்பட்டன. கிராமத்து கலைகளாக இருந்த இவை நவீன வெகுசன ஊடகங்களினால் அனைவராலும் அறியப்பட்டன.

ஊடகம் என்பது தகவல்களை மக்களுக்கு பரப்புவன. ஊடக செய்தி பரிமாற்றத்தில் நாட்டுப்புற இலக்கியம் பரவும் விதத்தினை பின்வருமாறு ஆய்வாளர்கள் விளக்குகின்றனர்.

1. வாய் மொழியாகப் பேசப்பட்டு ,
2. இலக்கிய வடிவமெடுத்து
3. பல்வேறு நிகழ்வுகளாகி,
4. செய்தியாக பல நிலைகளாகின்றன

என்கின்றனர்.

நவீன யுகம், இடம்பெயர் யுகம், விவசாய யுகம், கைத்தொழில்யுகம், தகவல் யுகம்.

நவீன யுகம் என யுகங்கள் மாறி வருகின்றன. இதில் விவசாய யுகத்திலேயே நாட்டுப்புற கலைகள் அதிக செல்வாக்குடன் காணப் பட்டுள்ளன. தற்போது நிலவுவது நவீன ஊடகயுகமாகும்.

நவீன ஊடகங்களினால் நாட்டார் கலைகளில் ஏற்பட்ட தாக்கம் நன்மையானதாக அமைந்துள்ளதா? பாதிக்கப்பட்டுள்ளனவா? என்பதைக் கண்டறிதல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடி அவதானிப்பு, இரண்டாம் நிலை தரவுகளின் அடிப்படையில் பெறப்பட்ட ஆதாரங்களுடன் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நவீன ஊடகத்தில் நாட்டுப்புற கலைகள் நவீன ஊடகத்தில் கதைகளாக தோன்றி, சிறிய கதைப் பாடல்களாகி, பெரிய கதைப் பாடல்களாகி, மீண்டும் கதைகளாகி, கதைபாடல்களாகி,கற்பனைகள் பல கலந்து என படிமுறையாக வளர்ச்சியடைந்துள்ளன என்கின்றனர்.

வெகுசன ஊடகங்களாக செய்தி பரப்புவதற்கு கட்டுரைகள், சஞ்சிகைகள், நூல்கள், வானொலி, தொலைக்காட்சி, சினிமா, கணினி, இணையத்தளம் என விரிந்து செல்கின்றன.

வெகுசன ஊடகங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
காணுதற்குரியது - அச்சு ஊடகம், எழுத்துக்கள், பாறை ஓவியங்கள், கோலங்கள், வேடங்கள், உடை ஒப்பனைகள், செய்தித்தாள்கள், புகைப்படங்கள்

கேட்பதற்குரியது - அலை ஊடகம், பேச்சு, பாட்டு, ஒலிபெருக்கி, பறை, மேளம், வானொலி, நாட்டுப்புற இசை.

காணுவதற்கும், கேட்பதற்கும் உரியது - காட்சி ஊடகம், தொலைக் காட்சி, வீடியோ, கூத்துக்கள், நாடகங்கள், சினிமா மற்றும் இணையத்தளங்கள் என வகைப்படுத்தலாம்.

## நாட்டுப்புற கலைகள் பற்றிய தகவல் வழங்குவதில் நவீன ஊடகங்கள்

1. விமர்சனப் பார்வை (Critical Method),
2. பாரம்பரியக் கலைகளை ஒப்பிட்டு வழங்குவது (Classical Method),
3. விபரித்து எழுதுதல், படைத்தல், பரப்புதல் (Reportorial Method),
5. புதிய படைப்பை வரலாற்று கண்ணோட்டத்தில் நோக்குதல் (Organic Mrthod), என பல்துறையாக ஆய்கின்றனர்.

நாட்டுப்புறவியல் பற்றி பின்வரும் நான்கு வகையிலும் அடிப் படையில் பூரண அறிவு இல்லாதவர் செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாற்றத்தினை விவரித்தல் (Elaboration), சுருக்குதல் (Condensation), தெய்வீக நிலையாக்குதல் (Sanctification), செய்தியாக்கல் (News) எனக் கூறலாம்.

## ஊடகங்களில் நாட்டுப்புறவியல் உள்வாங்கல்

பாடல்கள், இசைவகைகள், நாட்டுப்புற கதைகள், கூத்துக்கள், நடனங்கள், வாழ்வியல் நிகழ்வுகள், வட்டார மொழி நடைகள் பல வகைப்படுத்தலாம். இவை நேரடியாகவும் தழுவிய நிலையிலும் மறைமுகமாகவும் உள்வாங்கப்பட்டுள்ளது.

நிகழ்கலைக்கும் அதனை ஊடக கலையாக்கும் போது நவீன ஊடக கலைக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் ஒப்பீட்டு நோக்கின்..

| நிகழ்க்கலை | நவீன ஊடகக் கலை |
|---|---|
| நிறப்பூச்சுக்கு அடுப்புக்கரி,அரிதாரம், செம்மண், செந்சந்தனக் கட்டை உரைசல், மஞ்சள் பயன்படுத்தப்பட்டன. | நிறப்பூச்சுக்கு வண்ணக்கலவை, முகப்பூச்சு பயன்படுத்தப்படுகிறன. |
| வாய்ப்பாடல்கள் குரல்களால் உரத்த குரலில் ஒலித்தன. | வாய்ப்பாடல்கள் ஒலிபெருக்கியினால் வண்ணக்குரலில் மென்மையாக பாடப்படுகின்றன. |
| நாட்டுப்புற கலைகள் ஏழ்மையானவை, எளிமையானவை. | நவீன ஊடக கலைகள் ஆடம்பரமானவை. |
| வட்டாரத்தன்மை வட்டார பண்பாடு வட்டார உடை, ஒப்பனை, தொழில் முறை காணப்பட்டன. | ஊடகத்துறையில் எல்லோரும் பயன்படுத்தக் கூடியதாக உடை தயாரிக்கப்படுகின்றன. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நாட்டார் கலை வடிவங்கள் குழுமை நிலைக்கொண்டமை. | ஊடக கலை வடிவங்கள் தனிநபர் நிகழ்த்துகையாக காட்டப்படுகிறது. |
| சிலவற்றை அழுத்தப்படுத்தி காட்டுதல் ஒரு சிறப்பாக காணப்பட்டன. | நவீன வெகுசன ஊடகத்திலும் வேறாக அழுத்தப்படுத்திக் காட்டப்படுகிறது. |
| திரை மறைவில் பலர் செயற்படுவர். | பிற்புல ஆட்களை ஊடகங்களில் படம் பிடித்து காட்டப்படுகின்றன. |
| தெய்வத்தின் முன் தெய்வ வழிபாட்டுடன் உரு ஏற்று நிகழ்த்தப்படும் கலை. | நவீன ஊடகங்களில் கெமராக்களுக்கு முன் நடத்தப்படுகின்றன. |
| நாட்டார் கலைகள் கலைஞர்களின் உழைப்பை முழுமையாக்க கொண்டவை. | நவீன வெகுசன தொடர்பு சாதனங்கள் இயந்திரமய இயக்குனர்களைக் கொண்டவை. |
| நாட்டுப்புறவியல் கிராம சூழலை கொண்டவை | ஊடகத்துறை நகர கலாசாரத்தினை பிரதிபலிப்பன. |
| நாட்டுப்புற நிகழ்வுகள் விடிய விடிய நிகழ்த்துவன சில கலைகள் பல நாட்கள் தொடர்வன. | வெகுசன ஊடாக கலைகள் சில நிமிட /மணிநேரம் |
| நாட்டுப்புற மக்கள் ரசனையுடன் கூடியவர்கள். | ஊடகத்துறை பார்வையாளர் நேரத்தை கழிப்பதற்காக பார்ப்பவை வெகுசன ஊடாக - குழும நிலை - சிறுகூட்டம் தனிநபர் ரசனை கொண்டவை. |
| நாட்டுப்புற கலைகளில் இயற்கை மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. | வெகுசன ஊடாக கலைகள் வேறுபட்டு, நவீனமய புத்தாக்கம் கொண்டவை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஆடல் ஓசைக்கு வாகைநெத்து, கருவேல் நெத்து குண்டுமணி பயன்படுத்தப்பட்டன. | ஊடகத்துறையில் நவீன இசை பொருட்களுடன் சலங்கை பாவிக்கப்படுகின்றன. |
| மனித உழைப்பை கொண்டவை. | நவீன ஊடகம் இயந்திர உதவி கொண்டவை. |
| இயற்கை தன்மையுடனான கலைகள். | செயற்கை தன்மையுடன் வடிவமைக்கப்படுகின்றன. |
| படைப்பாளர்களது சுதந்திரத் தன்மைக் காணப்பட்டன. | ஊடகங்கள் மூலம் படைப்பாளரது சுதந்திரதன்மை பாதிக்கப்படுகிறது. ஊடகத்திற்கு ஏற்றவாறு படைக்கப்படுகின்றன. |
| கூத்து, ஆட்டம், நடிப்பு ஆகியன உடை ஒப்பனை திரைச்சீலை போன்றக் கலை கூறுகளாகக் காட்டப்பட்டன. | காட்சி நிலைக்கு அமையாத கலை வடிவங்கள் நவீன காட்சி வடிவமாக மாற்றப்படுகின்றன. |
| நாட்டு மருந்து விற்பனை, பாவனை குறைந்தது போல நாட்டார் கலைகளும் குறைகின்றன. | நவீன மருந்துக்கள் மற்றும் விளம்பரம் போல நவீன கலைகள் வளர்ந்துள்ளன. |
| தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட குறிப்பிட்ட மக்களின் கலைகள். | சகலரதும் நடிப்பாலான கலைகளாகவுள்ளன. |
| கலைஞர்களுக்கு வருமானமில்லை. | கலைஞர்கள் நல்ல வருமானம் பெறுகிறார்கள். விளம்பரங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறார்கள். |

ஊடகங்களில் நாட்டுப்புறவியல் புறக்கணிக்கப்படுகின்றமைக்கு காரணம் அதன் அங்கீகாரம் போதாமை, நையாண்டி பார்வை, சமூகத்தில் மதிப்பிழப்பு, சாதிய ஆதிக்கம்- ஒடுக்கல், உலகமய மாதலினால் நவீனத்தாக்கம் அவற்றோடு தொழிற்சங்க அரசியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கம், கலைஞர்களின் பற்றாக்குறை, சினிமாத்தாக்கம், கணினி இணையத் தாக்கம் போன்றன காரணமாகின்றன.

வெகுசன ஊடகங்கள் கவனிக்க வேண்டியனவையாக கால அளவு, நவீன உடைப் பயன்பாடு, மென்மை/வன்மைத் தன்மை, வட்டாரத்தன்மை, குழுமத்தன்மை, அழுத்தப்படுத்தி காட்டுதல் ஆகியவற்றில் கவனம் கொள்ளுதல் மற்றும் இடம், மக்கள் கூட்டம், அரங்கு, இயற்கைச்சூழல் பாவிப்புப் பொருட்கள் பற்றியும் கவனம் கொள்ள வேண்டும்.

நவீன ஊடகச் சந்தையில் நாட்டுப்புறவியலான இரசிப்புத் தன்மை, ஏற்றுக் கொள்ளப்படும் தன்மை, செல்வாக்கு நிலைகள் ஆகியவற்றோடும் சந்தைப் பொருளாக மாற்றுதல், வேறுபட்ட வாய்ப்புக்கள்

உதாரணமாக சினிமாவில் பாடல்களின் பின்னணி இசை, இனிய கனவு, காதல் பாடல் காட்சிகள் ஆவனவோடு சண்டைக் காட்சிகளில் புலியாட்டம், சிலம்படி- வாஸ்தா, மல்யுத்தம், வாளும் கேடயமும், காளை அடக்குதல் - மஞ்சு விரட்டுதல் ஆகியனவும் வாழ்வியல் நிகழ்ச்சிகளாக பொங்கல், ஏர் மங்கலம் பூட்டல், வில்லுபாட்டு என சினிமாவில் நாட்டுபுற பாடல்கள், கதைகள், ஆடல்கள் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளன.

நவீன ஊடகமான நாட்டுப்புறக் கலைஞர்களை விளம்பரப்படுத்தல், கலைகளை உலகறியச் செய்தல், செய்திகளை பரிமாற்றல், பலருக்கு சென்று சேரும் தன்மையை ஏற்படுத்தல், விளக்கங்களுடன் தெளிவுடன் காட்டுதல். பல்வேறு இன மொழி மக்களுக்கு சென்றடையக் கூடியதாக காணப்படுகிறது. அழிந்து வரும், மாற்றமுற்றுவரும் கலைகளை காப்பாற்றி புத்துயிராக்க முடியும். நிகழ்கால கலைஞர்களையும் பார்வையாளர்களையும் இணைக்கக் கூடியதாக இது உள்ளது.

ஆட்டங்களான கரகாட்டம் (சக்தி கரகம், ஆடுகரகம்), காவடி ஆட்டம், குறவன் குறத்தி ஆட்டம் (நரிக்குறவர் ஆட்டம்), மரதடிப்பு ஆட்டம், புலியாட்டம், பொம்மலாட்டம், ஆலி நடனம், மந்தி நடனம், மயிலாட்டம், மரக்கால் ஆட்டம், பொய்க்கால் ஆட்டம், குதிரையாட்டம், தப்பாட்டம், போன்றவற்றை நவீன வெகுசன ஊடகங்கள் பல்வேறு புதிய வடிவமைப்புக்களை இணைத்து மாற்றங்களை உட்புகுத்தியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேளங்களான.மேளம், உடுக்கடி, தவில், பம்பை, தப்பு, உறுமி போன்றன இவை நையாண்டி மேள நிகழ்ச்சிகளாக காட்டப்படுகின்றன.

கூத்துக்களான காமன்கூத்து, தோற்பாவை, நிழற்கூத்து, புத்மச ாலியார் கூத்து, வடமோடி, தென்மோடி காத்தவராயன் கூத்துக்கள் ஆகியன தோட்டங்களில் கிராமங்களில் அழிந்தாலும் ஊடகங்களுடாக சினிமா ஊடாக ஒரு பகுதியாவது பார்வையிட முடிகிறது.

சினிமாவில் நாட்டார் கலை

வெற்றிமாறனின் ஆடுகளம், கங்கை அமரனின் கரகாட்டக்காரன், எங்க ஊரு பாட்டுக்காரன், சுரேஸ் கிருஷ்ணாவின் சங்கமம், ராம நாராயணனின் பாளையத்து அம்மன், பாரதி கண்ணனின் ஸ்ரீ பன்னாரி அம்மன், கண்ணாத்தாள் ஆகியன சில உதாரணங்களாகும்

உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட திரைப் படங்களால், இணையத்தளங்களால் நாட்டுப்புற கதைகளுக்கான ஆர்வம் கூடியுள்ளது. தற்போது தகவல், தேடல், செய்தி ஆய்வு என ஆர்வம் காட்டப்படுகிறது.

## தடைச் சட்டங்களால் ஏற்பட்ட தடைகள்

சேவல் சண்டை - சூதாட்டம், பலி கொடுத்தல் - மிருகவதைச் சட்டம், காளையடக்குதல் - தடைச்சட்டம், கள்ளுக்குடித்தல் - தடைச் சட்டம் (தமிழ்நாடு) சில நாட்டுப்புற நிகழ்வுகளுக்கு தடை ஏற்பட்டுள்ளது.

## முடிவுரை

நாட்டுப்புறவியல் கலைகள், எமது பாரம்பரியம், வாழ்வியல் பண்பாட்டு கூறுகள், நவீன ஊடகங்களினால் நவீன மயப்படுத்தலினால், இயல்பான நிகழ்வினது தன்மையை வெளிக்கொண்டுவராமல் மாற்றியமைப்பதி னால் இம் மாற்றம் அழிவிற்கே வழிவகுக்கும். நவீன ஊடகங்களின் தாக்கம் நாட்டுப்புற இயற்கை அமைப்பிற்கு மாறாகவே உள்ளன. நாட்டுப்புற கலைகளின் அதன் உண்மைத்தன்மையோடு காப்பது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சினிமாவில் நாட்டார் கலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# ஈழத்தமிழர்களின் நாட்டுப்புற விளையாட்டுகள்

## அறிமுகம்

தமிழர் நாட்டுப்புற விளையாட்டுக்கள், நாட்டுப்புற சடங்குகள், நாட்டுப்புற வாய்மொழிபாடல்கள், நாட்டுப்புற வாய்மொழி கதைகள், நாட்டுப்புற விடுகதைகள், நாட்டுப்புற தெய்வ வழிபாடுகள், நாட்டுப்புற கலைகள் என காலம் காலமாக நடைமுறையிலிருந்து வந்துள்ளன.

விளையாட்டினால் ஒருவருக்கு மனமகிழ்ச்சியும், உடல்வளர்ச்சியும், உடலுக்கு புத்துணர்வும் ஏற்படுகின்றன. மனிதனுக்கு உழைப்பும், உறக்கமும் போலவே விளையாட்டு, திளைப்பு, மகிழ்ச்சி, என்பனவும் முக்கியமனதாகும். மனிதர்கள் மட்டுமன்றி சகல உயிர்களும் விளை யாட்டுக்களில் ஈடுபடுகின்றன. விலங்குகளும் பறவைகளும் கூட விளையாடுவதைக் காண்கிறோம். உலகில் கிரேக்க ஒலிம்பிக் 776 இல் ஆரம்பமானது. நவீன ஒலிம்பிக் 1896 இல் ஆரம்பமானது. ஆனால் தமிழ்இலக்கியத்தில், பழந் தமிழ்மன்னர்கள் காலந்தொட்டு வீரவிளையாட்டுக்கள் இருந்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. தற்காலத்தில் பிரபலமான பல விளையாட்டுக்கள் இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாக பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, தமிழ் இலக்கியத்தில், சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலை எடுப்பதற்கு சேரன் செங்குட்டுவன் இமயமலைக்குச் சென்றதை 'உருளுகின்ற மணி வட்டைக் குணில் கொண்டு தூத்தாற் போல்' என்று கூறப்படுகின்றது. இங்கு 'குணில்' என்பது வளைந்த தடி என்பது பொருள். இது தற்கால ஹொக்கி விளையாட்டின் ஆரம்பமாகும்.

தற்காலத்தில், சட்டதிட்டங்கள் உடன் விளையாடப்படும் விளை யாட்டுக்கள் கூட ஆரம்பகாலத்தில் நாட்டுப்புற விளையாட்டுகளாவே இருந்தே வளர்ச்சியடைந்தது. பின்னர் இன்று வரைக்கும் காலத்துக்காலம் காலத்துக்கேற்ப விதிமுறைகள் அமைக்கப்பட்டு தற்போது விளையாடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு வருகின்றது. இவ்வாறான விளையாட்டுக்களில் ஈழத்தமிழர்களின் விளையாட்டுக்களே இவ் ஆய்வில் ஆவணப்படுத்தி வகைப்படுத்தி விபரிக்கப்படுகின்றன.

இத் தமிழர் நாட்டுப்புற விளையாட்டுக்கள் பற்றி பல்வேறு ஆய்வுகள் கட்டுரைகள் காணப்பட்டாலும் ஈழத்தமிழர்களின் நாட்டுப்புற விளையாட்டுகள் என தனியாக ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை. எனவே களநிலையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலும், இரண்டாம் நிலை ஆவணங்களில் பெறப்பட்ட தகவல்களைக்கொண்டு ஈழ தமிழர் களின் நாட்டுப்புற விளையாட்டுக்களைப் பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்.

1. ஆண்கள் விளையாட்டுக்கள்
2. பெண்கள் விளையாட்டுக்கள்
3. இருபாலாரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள் மற்றும்.
4. பருவத்துக்குரிய விளையாட்டுக்கள்.
    - 4.1 குழந்தைப்பருவம்
    - 4.2 சிறுவர் விளையாட்டு
    - 4.3 இளைஞர் பருவ விளையாட்டு
    - 4.3.1. வீர விளையாட்டுக்கள்
    - 4.3.2. பொதுவான விளையாட்டுக்கள்
5. பிரதேச ரீதியிலான விளையாட்டுக்கள்
    - 5.1 யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேச விளையாட்டுக்கள்
    - 5.2 மலையக பிரதேச விளையாட்டுக்கள்
6. கூடத்து ஆட்டம் மற்றும் வெளிப்புற ஆட்டம்
    - 6.1 வெளிப்புற ஆட்டம்
    - 6.2 கூடத்து ஆட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.3 கூடத்திலும், வெளிப்புறத்திலும் ஆடும் ஆட்டம்

என பல பிரிவுகளாக வகைப்படுத்தி ஆராயலாம்.

## 1. ஆண்கள் விளையாட்டுக்கள்

ஆண்கள் விளையாட்டுக்களாக கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, கோலி விளையாட்டு, கிளித்தட்டு, சடுகுடு, வெட்டுக்கத்தி, வாளும் கேடயமும், வழுக்குமரம் ஏறுதல், பட்டம் விடுதல், டாம் விளையாட்டுக்கள், போன்றனவும் ஜல்லிக்கட்டு, ஏறு தழுவுதல், மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு, வாளும்கேடயம் ஆகியன ஆண்களின் வீரவிளை யாட்டுக்களாகவும் குறிப்பிடுவர்.

## 2. பெண்கள் விளையாட்டுக்கள்

பெண்கள் விளையாட்டுக்களாக கோலம்போடுதல், சமைத்து விளை யாடல், நொண்டிக்கோடு, பாண்டியாடுதல், வீடு கட்டி விளையாடல், கோலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், நொண்டிக்கோடு, பாண்டியாடுதல், குளம்கரை, காயா பழமா, கீச்சு கீச்சுத்தம்பாளம், போன்ற விளையாட்டுக்களும் விளையாடப்படுகின்றன.

## 3. இருபாலாரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்கள்

பொதுவான இருபாலாருக்குமான விளையாட்டுக்களான தொட்டுவிட்டு ஓடுதல், குதித்தல் (ஸ்கிப்பிங்), ஆடுபுலி ஆட்டம், கண்ணைக்கட்டி நொண்டித்தொடுதல், கயிறு இழுத்தல், கள்வரும் பொலிசாரும், தாயக்கட்டையில் பல்வேறு விளையாட்டுக்கள், தொட்டால் விரட்டி, பந்தால் ஆள் அடித்தல், கண்கட்டி தேடல், கையைத்தொட்டவரை விரட்டல், நிழலை மிதித்தல், நொண்டித்தொடுதல், நிழலைமிதிதல், பழம்பொறுக்குதல் போட்டி, சேவல் சண்டையிடவிட்டு குதூகலித்தல், பம்பரம், குளம்கரை, காயா பழமா, கீச்சு கீச்சுத்தம்பாளம், பண்ணாங்குழி, சங்கிலிபுங்கிலி, முந்திரிக்காயும் நரியும், சிறுவீடு கட்டுதல், கண்ணாம் பூச்சி, ஓடிப்பிடித்து விளையாட்டு, சதுரங்கம் (டக்டிக் டொாஸ்), தாயம் விளையாடுதல், நொண்டி விளையாட்டு, உப்பு விளையாட்டு, காற் றாடி, கப்பல் விடல், மண்வண்டி விளையாட்டு, காவடி விளையாட்டு, மாட்டுவண்டி ஓட்டுதல் போன்றன இடம்பெறுகின்றன..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பருவத்துக்குரிய விளையாட்டுக்கள்.

## 4.1 குழந்தைப்பருவம்

## 4.2 சிறுவர் விளையாட்டுக்கள்.

சிறுவீடு கட்டி விளையாடுதல்,மண்வண்டி விளையாட்டு - மண்ணினால் வண்டியையும், பொருட்களையும் செய்து விளையாடும் விளையாட்டு. அதே போல் சமைத்துண்ணும் விளையாட்டில் வீட்டில் சமைப்பது போல் மணல் கரைத்து மண்ணில் தண்ணீர் விட்டு குழப்பி சமையல் செய்து, விளையாடும் விளையாட்டு. இதில் இலைகளை வெட்டி கறி சமைத்து விளையாடுவர். அதுமட்டுமல்லாது காய்கள் இலைகளை வெட்டி சமைத்து விளையாடல், நெருப்பின்றி சமைத்து விளையாடலே இதில் முக்கிய பண்பாகும். இது சமைத்து விளையாடல் எனப்படும். அடுப்போடு சிறு வீடு கட்டல், வீடு வேறாகவும் வீட்டிற்கு வெளியே அடுப்பும் கட்டி விளையாடல், செங்கல் அடுப்பு அமைத்து சமைத்து, பொங்கல் சமைத்து விளையாடல், கோலி விளையாட்டு, சங்கு விளையாட்டு, பம்பரம் சுற்றுதல், குளம்-கரை, கரை- குளம் எனும் சொல் விளையாட்டு, காயா-பழமா விளையாட்டு, கண்ணாமூச்சி, கண்ணாம்பொத்தி விளையாட்டு என சிறுவர்கள் விளையாடுவர்.

## 4.3 இளைஞர் பருவ விளையாட்டுக்கள்

### 4.3.1. வீர விளையாட்டுக்கள்

ஏறு தழுவுதல், மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு, வாளும்கேடயமும் ஆகியன ஆண்களின் வீரவிளையாட்டுக்களாகவும் குறிப்பிடுவர். ஏறு தழுவுதலில், ஏறு என்பது காளை. காளையை அடக்க காளையின் கழுத்தினை இறுகத்தழுவி கழுத்துடன் இணைந்து ஏறுகளின் கொம்பு களைப் பிடித்து அதன் குட்டேறு முறியும்படி தமது முழுப் பலத்தினையும் பிரயோகித்து காளையை அடக்குதல். இதன் போது காளை கொம்புகளால் முட்டுவதும் ஏறு பிடிப்பவரை சாய்த்து கீழே விழுத்தியும் போராடும். சிலவேளை, தழுவியவரை சாகும்படி குத்தி உயிர் நீக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளும் கேடயமும் எனப்படும் விளையாட்டின்போது, வாள் சுழற்றி வீசப்படும். கேடயம் அதைத்தடுக்கும். ஒருவர் வெற்றி பெறும் வரை விளையாடப்படும்.

வெட்டுக்கத்தி விளையாட்டும், வாள்வீச்சு போல, ஒரு கையால் வெட்டுக்கத்தி வீச்சும் மறுகையால் தடுக்கும் முறையும் கலந்த விளையாட்டு. இதனைச் சிலம்பாட்டத்துடன் இணைத்தே விளையாடு வார்கள். மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு போன்றனவும் வீரவிளை யாட்டுகளில் உள்ளடக்கப்படுகின்றன.

### 4.3.2. பொதுவான விளையாட்டுக்கள்

குண்டாட்டம், தேங்காய்ப்போர், மரக்குரங்கு, தாயக்கட்டம், சோழி, சதுரங்கம், பாண்டிப்பலகை, தும்பி, கொம்பு முறித்தல், சோழி, சொக் கட்டான், பாண்டி, என்பன பொதுவான விளையாட்டுக்கள் ஆகும்.

## 5. பிரதேச ரீதியிலான விளையாட்டுக்கள்

### 5.1 யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு பிரதேச விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு கடற்கரைப்பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்கள் சிப்பி மற்றும் சோகிகளைக் கொண்டு தாயம் விளையாடுவதைப் போலவே பட்டம் ஏற்றுதல், பட்டம் ஏற்றும் போட்டி நடத்துதல், பனை, பூவரசு ஆகியவற்றிலிருந்து 'விண்' கட்டல், பூவரசு இலையிலிருந்து குழல் செய்து இசைத்தல், பனையோலை யிலிருந்து விசிறி செய்தல், கட்டுமரம் செலுத்துதல், ஓடம் விடுதல், துடுப்பு வலித்தல், நீந்துதல், கிணறு பாய்தல், கிணற்றில் பாய்ந்து நீந்துதல், கடலில் மணலில் குழிதோண்டுதல், கடலில் மணலில் வீடுகட்டுதல் மற்றும் சொல்விளையாட்டுகள் போன்ற விளையாட்டுக் களை விளையாடினார்கள்.

### 5.2 மலையக பிரதேச விளையாட்டுக்கள்

மலையகத்தில் ஆரம்பக்காலந்தொட்டு தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். பின்னர் ஆங்கிலேயர்க் காலத்தில் இந்தியாவிலிருந்தும் கூட்டிவரப் பட்டுள்ளனர். இம் மலையகத் தமிழர்கள் இறப்பர் விதைகளில் பம்பரம் விடுதல் மற்றும் இந்தியாவின் தமிழகத்தில் காணப்படும் விளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டுக்களை பின்பற்றிய விளையாட்டுக்கள் மற்றும் சூழலுக்கேற்ற மலைகளில் சறுக்குதல், பாறைகளில் சறுக்குதல், சொல்விளையாட்டுகள் போன்ற விளையாட்டுக்களையும் விளையாடினார்கள். இவை சமூகத்தினரிடையே வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன.

## 6. கூடத்து ஆட்டம் மற்றும் வெளிப்புற ஆட்டம்

### 6.1 வெளிப்புற ஆட்டங்கள்

குண்டாட்டம், தேங்காய்ப்போர், மரக்குரங்கு, தும்பி,கொம்பு முறித்தல், கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, கோலி, கிளித்தட்டு, சடுகுடு, வெட்டுக்கத்தி, வாளும் கேடயமும், வழுக்குமரம் ஏறுதல், பட்டம் விடுதல் போன்றனவும் ஏறு தழுவுதல், மல்யுத்தம், சிலம்படிவிளையாட்டு, வாளும்கேடயம், சேவல் சண்டையிடவிட்டு குதூகலித்தல், கப்பல் விடல், மண்வண்டி விளையாட்டு.

மாட்டுவண்டி ஓட்டுதல், கொம்பு முறித்தல் ஆகியன ஆண்களின் வெளிப்புற விளையாட்டுக்கள் ஆகும்.

கோலம்போடுதல், சமைத்து விளையாடல், நொண்டிக்கோடு, பாண்டியாடுதல், வீடு கட்டி விளையாடல், கோலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல் ஆகியன பெண்களின் வெளிப்புற விளை யாட்டுக்கள் ஆகும்.

### 6.2 கூடத்து ஆட்டங்கள்

தாயக்கட்டை, சோழி, சதுரங்கம், பாண்டிப்பலகை, சோழி, சொக் கட்டான், பம்பரம், குளம்கரை என இரு பக்கம் பாய்தல், காயா பழமா, கீச்சு கீச்சுத்தம்பாளம், பண்ணாங்குழி, சங்கிலிபுங்கிலி, முந்திரிக்காயும் நரியும், சிறுவீடு கட்டுதல், கண்ணாம் பூச்சி, ஓடிப்பிடித்து விளையாட்டு, சதுரங்கம் (டக்டிக் டொஸ்), தாயம் விளையாடுதல், நொண்டி விளையாட்டு, உப்பு விளையாட்டு, காற்றாடி, காவடி விளையாட்டு என்பன கூடத்து ஆட்டங்கள் ஆகும்.

இனி சில விளையாட்டுகளை விரிவாக நோக்கின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிட்டிப்புள்

கிட்டிப்புள் என்பதனை கில்லிதாண்டி எனவும் அழைத்தனர். கில்லி என்பது புள். தாண்டு என்பது கிட்டி குழியின் மேல் நீட்டுப்போக்காக வைக்கப்படும் சிறுகுச்சியினை வைத்து கோலால் (தடி, கம்பு) தட்டி எழுப்பி அடித்தல், குச்சியினை அடித்த பின்னர், அதனை எடுத்தவர் குழிக்கு அருகில் செல்லுமாறு ஏறிவர். கிட்டிப்புள் அசைந்தால் அடிக் கலாம். கிடையாக விழுந்து கிடப்பின் அதனை அடித்தல் கூடாது.

### சடுகுடு (கபடி)

இது பலப்பரீட்சை செய்யும் விளையாட்டு. சிறுவர்கள் இரண்டுகட்சி களாக பிரிந்து அல்லது இரண்டு கிராமங்களைச்சேர்ந்த சிறுவர்கள் இரண்டு வெவ்வேறு அணியாக விளையாடுவர். இருகட்சிகளின் பிராந்தியங்களைப் பிரிக்கும் எல்லைக்கோடுகள் ஒன்று உண்டு. ஒரு தடைவையில் ஒருவர் எல்லையிலிருந்து பாடியவாறு எதிரணியினரின் பிராந்தியத்தினுள் சென்று எதிரணியில் ஒருவரை தொட்டுவிட்டு தமதெல்லைக்குள் ''பாட்டம்'' கொண்டுவர வேண்டும். எதிரணியினர் சிக்காது ஓடி விடுவர். பாடிவந்தவர் எல்லையைத்தாண்டியதும் துரத்தி தொடுவர். எந்த அணி எதிரணியிலுள்ள சகலரையும் தொடுகிறதோ அந்த அணி வெற்றி பெற்றதாகக் கருதப்படும். கபடி விளையாட்டினை யும் இது போலவே சிறுமாற்றங்களுடன் விளையாடப்படுகிறது. சடுகுடுவில் வரும் நாட்டார்பாடல் ஒன்றில் ''காளை காளை வருகுது பார், கறுப்புக் காளை வருகுது பார் சூரியனுக்கு வேண்டிவிட்ட துள்ளக் காளை வருகுது பார்'' என குறிப்பிடப்பட்டுள்ளது. துள்ளக் காளை என்பது அடக்கமுடியாத காளை என்பதாகும்.

### பிள்ளையார் பந்து

பிள்ளையாரைக் குறிக்கும் ஒரு கல்லின் மேல் பந்தை எறிந்தாடும் விளையாட்டு இது. ஒரு செங்கல்லினை பிள்ளையாராக வைத்து மணலை குவித்து அதனை நட்டு குறிப்பிட்ட தூரத்திலிருந்து பிள்ளை யாரைச் சாய்க்க ஒவ்வொருவராக பந்தால் அடிப்பர். மற்றைய எதிர் கோஷ்டி பிள்ளையாருக்கு இருபக்கமும் நின்று பந்தை பிடிப்பர். பிள்ளையார் மீது பட்ட பந்து எதிரணியினால் பிடிக்கப்பட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோஷ்டியில் அடுத்தவர் பந்தை அடிப்பார். அனைவரும் அடித்து தீர்த்த பின் எதிரணியினர் பந்தை அடிப்பர். அடித்த கோஷ்டி பிடிக்கும் கோஷ்டியாக மாற வேண்டும். பிள்ளையாரைச் சாய்த்த பந்து பிடிக்கப்படாவிடின், பந்தினை அடிக்கும் கோஷ்டி எடுத்து சற்று தொலைவிற்கு சென்று சகலரும் ஒன்று கூடி அவர்களுள் ஒருவர் பந்தை தனது அடிவயிற்றுப்பகுதியில் ஒளிக்க மற்றவர்கள் தாங்களும் ஒளித்து வைத்துள்ளது போல் நடிப்பர். எதிரணியினர் யாராவது ஒருவர் மீது, உண்மையில் பந்து வைத்திருப்பவர் திடீரென எறிவர். எறிந்த பந்து படின் ஆட்டம் முடியும். பந்தாக துணியாலும் கயிற்றாலும் இறுக்க கட்டப்பட்ட உருண்டை வடிவான ஒன்றைப் பயன்படுத்துவர்.

### பிள்ளையார் கட்டை

ஆண்கள் விளையாடும். விளையாட்டு இரண்டு சம குழுக்கள். இக்குழுவின் நடுவில் பிள்ளையார் கட்டை வைக்கப்படும். வேறு கட்டைகள் அடுக்கி வைக்கப்படும். பந்தினால் பிள்ளையார் கட்டையை நோக்கி குறி பார்த்து ஒரு தரப்பினர் அடிப்பர் அல்லது எறிவர். கட்டைகள் சிதறும். மற்ற தரப்பு கட்டைகளை ஒழுங்காக அடுக்க வேண்டும். அடுக்குபவர்கள் மீது பந்தை எறிவர். பந்து பட்டவருக்கு நோ தாங்கமுடியாதிருக்கும். இரு அணியும் மாறி மாறி விளையாடும்.

### வழுக்குமரம் ஏறுதல்

கமுகு மரத்தினைச் சீவி அதில் ''கிறீஸ்'' பூசி அதன் மேல் வெற்றிக்கொடி நாட்டப்பட்டு நிறுத்திவைக்கப்படும். இவ்வாறு நிறுத்திவைக்கப்பட்ட பின் வெற்றிக்கொடியை எடுக்க மரம் ஏறுவர். இது புது வருட, தீபாவளி விளையாட்டின் போது நடத்தப்படுவதுடன் இரண்டு கிராமங்களுக் கிடையேயும் நடத்தப்படும்.

### மாட்டுவண்டி சவாரி

மாடுகளை வண்டிலில் கட்டி போட்டிக்குத் தயாராக வைத்திருப்பர். ஒரே நேரத்தில் மாட்டு வண்டிகள் புறப்பட்டு குறித்த முடிவுப்புள்ளியை அடைவர். இது வண்டிச்சவாரி எனப்படும். தைப்பொங்கலுக்கு அடுத்துவரும் நாட்களில் இப்போட்டிகள் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சதுரங்கம் (டக்டிக் டொஸ், டாம்)**

சதுரங்கம் இரண்டு வகைப்படும். வகுப்பறையிலும் வீட்டிலும் திண்ணையிலும் ஒன்பது பெட்டியிட்டு விளையாடப்படும் ஒரு வகை சதுரங்கமாகும். இருவர் மட்டுமே விளையாடலாம். ஒருவருக்கு மூன்றுகாய்கள் படி ஆறுகாய்கள் இருக்கும். இக்காய்களை ஒரேஒரு பெட்டி மட்டும் தகர்த்து தனது மூன்றுகாய்களையும் நேராகச் சரி நேராக சமாந்தரமாக சாய்வு கோணத்திற்கு நேராக கொண்டு வருவதே இந்த விளையாட்டாகும். ஒரு பக்கம் வெள்ளைக்காய்களும் மறுபுறம் கறுப்புக்காய்களும் வைத்து விளையாடப்படும். இவ்விளையாட்டு போட்டிகளாக நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்படும். இவ்விளை யாட்டினை சூதாட்டமாகவும் பணத்திற்காகவும் விளையாடுவர். இருவர் விளையாடும் போது மற்றவர்கள் யார் வெற்றி பெறுவார் என பணம் வைத்து பந்தயம் கட்டுவதும் உண்டு. மற்றையது, சதுர பெட்டிகளுக்குள் நிறக்காய்களை நகர்த்தி காய்களை வெட்டி விளை யாடுவர்.

**தாயம் விளையாடுதல்**

சோகி அல்லது தாயக்கட்டைகளைக் கொண்டு தாயம் விளையாடப்படும். தாயவிளையாட்டிலும் பலவகை விளையாட்டுகள் உண்டு. எவ்வித வயது வித்தியாசமுமின்றி தாயம் விளையாடப்படும்.

**ஓடிப்பிடித்து விளையாடுதல்**

ஒருவர் பிடிக்க மற்றவர்கள் ஒளிவது இந்த விளையாட்டாகும். பிடிப்பவர் யார் என்பதை 10, 20, 30, என எண்ணி 100 வருபவர்களைத் தவிர்த்து இறுதியாக உள்ளவர் பிடிப்பவர். முதலில் தொடுபடுபவர், அடுத்து பிடிப்பவராவர்.

ஒளித்துப்பிடித்து விளையாடுதல் மற்றும் கள்ளன் பொலிஸ் விளையாடுதல்

ஒருவர் பிடிக்க மற்றவர்கள் ஓடி ஒளிவது இந்த விளையாட்டாகும். பிடிப்பவர் யார் என்பதை 10, 20, 30, என எண்ணி 100 வருபவர்களைத் தவிர்த்து இறுதியாக உள்ளவர் பிடிப்பவர். முதலில் கண்டுபிடித்து தொடுபடுபவர், அடுத்து பிடிப்பவராவர். இதனை சிறுவர்கள் கள்வராகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரும் பொலிஸாராக சிலரும் ஓடி, ஒளிந்து மறைந்து பிடித்து விளையாடுதல். இவ்விளையாட்டு ஓடிப்பிடித்து விளையாடுதல் போலவும், ஒளித்துப் பிடித்து விளையாடுதல் போலவும் அமையும்.

### நொண்டி விளையாட்டு (நொண்டிப்பிடித்தல்)

ஒருவர் நொண்டி, நொண்டி, ஒற்றைக்காலில் சென்று மற்றவர்களை பிடிப்பார் அல்லது இரண்டு குழுவாகப்பிரிந்து ஒருகுழு நொண்டி நொண்டி ஒற்றைக்காலில் சென்று மற்றைய ஓடும் குழுவினைப் பிடிக்கும். இவ்விளையாட்டு எல்லைவகுத்து விளையாடப்படும். கையால் தொடுபட்டவர் ஆட்டமிழப்பார்.

### சாண் அளத்தல் (டங்கா அடித்தல்)

இது நாணயத்தினை சுவரை நோக்கி எறிந்து அது சுவரில் பட்டு தெறித்து விழும் தூரத்தினை பொறுத்து இரண்டாமவர் தனது நாணயத்தினை சுவரை நோக்கி எறிந்து அது சுவரில் பட்டு முதலாவது நாணயத்துக்கு ஒரு சாண் தூரத்தில் தெறித்து விழுந்தால் முதல் எறிந்த நாணயம் இரண்டாமவருக்கு சொந்தமாகும். இதுவும் ஒரு சூதாட்டமாகவே கொள்ளப்படுகிறது. இதனால் நாணயங்கள் உருவமழிந்து போவதையும் காணலாம்.

### உப்பு விளையாட்டு

ஒருவர் பேசக்கூடிய குழந்தையை முதுகினில் சுமந்து 'உப்பு, உப்பு, உப்பு' என கூவிச் செல்வார். அவர் அருகில், பக்கத்தில் போவோர் 'ஒரு உப்பு தா, அல்லது இரண்டு உப்பு தா' எனக் கூறுவர்.

குழந்தையை தூக்கியவர் குனிய, குழந்தை 'இந்தா ஒரு உப்பு, இந்தா இரண்டு உப்பு' என்று ஏதாவது சத்தத்துடன் உப்பு வழங்கும்.

### பட்டம் விடுதல்

மார்கழி விடுமுறையில் காற்றுக்காலத்தில் பெரியபட்டங்களும் படலங்களும் செய்து விடுவர். பட்டம்விடும் போட்டிகளும், ஒருவரின் பட்டத்தினால் மற்றவரின் பட்டத்தினை அறுக்கும் செயல்களும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. கொக்குப் பட்டம், பருந்துப் பட்டம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கூட்டுப் பட்டம், பாம்புப் பட்டம் என பல்வேறு வடிவங்களும் பெயர்களும் வழங்கப்படுகின்றன. விண் செய்து பூட்டி படலங்களும் செய்து விடுவர். இதற்கான போட்டிகளும் தைப்பொங்கல் தினத்தில் அல்லது தைப்பொங்கல் தினத்துக்கு பின்னர் வரும் ஒருநாளில் நடைபெறும்.

## காற்றாடி விடல் அல்லது பம்பரம் விடுதல், கப்பல்விடல், ஓடம் விடல்

பம்பரம் செய்து அதனை சுழற்றி விட்டு விளையாடுவர். யாருடைய பம்பரம் அதிகநேரம் நிமிர்ந்து சுற்றுகின்றதோ அவர் வென்றவராவார். காற்றாடி செய்து விளையாடுவர். இதுவும் பம்பரம் விளையாட்டு போன்றது. தென்னோலை, கடதாசி, பனையோலை போன்றவற்றில் காற்றாடி செய்து விளையாடுவர். காவடி விளையாட்டு போட்டிகளும் திருவிழாக்காலங்களில் நடைபெறும்.

கப்பல் விடல் விளையாட்டில் கடதாசியில் கப்பல் செய்து தண்ணீரில் அல்லது வாய்க்காலில் விட்டு விளையாடுவர். மழைக் காலத்தில் அதிகமாக விளையாடுவர்.

ஓடம் விடுதல்- கரையோரங்களில், வன்னிக்குளங்களில் விளையாடப்படும் விளையாட்டாகும். இந்த விளையாட்டில் ஓடம் விடும் போது பாடல்களும் பாடுவர். கட்டுமரம் செலுத்தல், துடுப்பு வலித்தல், நீந்துதல் போன்ற விளையாட்டுகளும் இடம்பெறும். இதற்கான போட்டிகளும் திருவிழாக்காலங்களில் நடைபெறும்.

## கொக்கான் வெட்டுதல்

ஒன்றுக்கு மேற்பட்ட மகளீர் சேர்ந்து விளையாடும் விளையாட்டு. ஐந்து கற்கள் ஓரளவு உருண்டை வடிவமானது தேர்ந்தெடுக்கப்படும். ஒவ்வொருவரும் தமக்குரியதை தாமே தேர்ந்து எடுத்துக்கொள்வர். ஒருவர் விளையாடத்தொடங்குவார். அவர் தவறுசெய்தால் மற்றவர். இரண்டாமவர் தவறு செய்தால் மூன்றாமவர், பின் முதலாமவர் விட்ட இடத்திலிருந்து தொடர்வார். வீட்டுக்குள்ளேயே விளையாடும் விளையாட்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கு விளையாட்டு**

சிறுவர்கள், சிறுமிகள் சேர்ந்து இவ்விளையாட்டை உறவு முறைகள் சொல்லி தங்கள் கைகளைச் சங்கு வடிவில் பொத்தி ஒவ்வொருவர் கைகள் மேலும் மாறிமாறி வைக்க ஒருவர் மட்டும் ஒரு கையை சங்கடுக்கில் வைத்து மறுகையின் ஒரு விரலால் அடுக்கிய சங்கின் கீழிருந்து மேல் நோக்கி, அல்லது மேலிருந்து கீழ் நோக்கி ''இது யாரு சங்கு இது யாரு சங்கு?'' என்று கேட்க மற்றவர்கள் ''இது அம்மா சங்கு,'' ''இது அப்பா சங்கு,'' ''இது அக்கா சங்கு'' ''சங்கு'' என்று கூற வெட்டவா? தீட்டவா என்று தலைவர் கேட்க ஒருவர் வெட்டு என்றவுடன் தலைவர் இரண்டாக வெட்ட சிறுவர்கள் தங்களின் கைகளை வாயில் வைத்து சங்கூதுவது போல் ஊ..... ஊ.... ஊ.... என்று ஊதுவர். இது சங்கு விளையாட்டாகும்.

**சங்கிலி புங்கிலி**

ஒருவர் புலி. ஒருவர் ஆடு. மற்றவர்கள் ஆட்டினைச்சுற்றி வட்டமாகக் கையைக் கோர்த்துக் கொண்டு நிற்பார்கள். மற்றவர்கள் அவர்களை காப்பாற்ற வட்டமாகக் கை கோர்த்து நிற்பர். புலி ''சங்கிலி புங்கிலி கதவைத்திற'' என பாடுவான். வட்டமாக நிற்பவர்கள், ''நான் மாட்டேன் வேங்கைப் புலி'' எனப் பாடுவர். புலி மீண்டும் 'ஆட்டுக்குட்டியை கண்டீர்களா' என்பான். 'கண்டோம்' என வட்டமாக நிற்போர் கூறுவர். 'வரலாமா? வரக் கூடாதா? எனப் புலி கேட்பான். 'வரக் கூடாது' என வட்டத்தில் உள்ளோர் கூறுவர். புலி யாராவது கை கோர்த்து இருப்போரில் ஓரிடத்தில் உடைத்துக் கொண்டு ஆட்டைத் தொட முயல்வான். தொட்டால் ஆடு விளையாட்டிலிருந்து நீக்கப்படுவார்.

**பசுவும் புலியும்**

கைகோர்த்து சுற்றி நிற்பர். பசு என்பவர் உள்ளே நிற்பார். சுற்றி நிற்பவர்களது கைகோர்வை உடைத்துக்கொண்டு புலி பசுவைப் பிடிக்கும். சுற்றி வேலியால் நிற்பவர்கள் புலியைத் தடுப்பர். புலி பசுவைப் பிடித்தும் ஆட்டம் முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆடுபுலி**

விளையாடுவோர் கோர்வையாக நிற்பர். ஆடு கோர்வையிலுள்ளோரை தாயாடு போய் காப்பாற்றும். புலி கோர்வையிலுள்ள அல்லது இறுதியிலுள்ளவரை பிடித்து இழுத்துச் செல்லும்.

**முந்திரிக் காயும் நரியும்**

வரிசையாகச் சிறுவர்கள் கையைப் பிடித்து நிற்பர். அநேகமாக இவர்கள் ஒரு வட்ட வடிவில் ஒன்று சேர்ந்த நிற்பர். இவர்கள் ஒன்று கூடி ஒருவரை முந்திரிக்காய் எனப் பெயரிடுவர். கையைப் பிடித்துக் கொண்டு வட்டமாக நிற்பவர்கள் பாட்டுப்பாடுவர். நரி சுற்றிச் சுற்றி வந்து சரியாக முந்திரிக்காய் என பெயரிட்டவரைத் தொடவேண்டும். ''குலை குலையாய் முந்திரிக்காய், நரியே நரியே சுற்றி வா, கூட்டத்தில் இருக்கிறான் கண்டு பிடி'' எனப் பாடி விளையாடுவர்.

**உச்சரிப்பு விளையாட்டு**

சில வாக்கியங்களை விரைவாக மீண்டும் மீண்டும் சொல்லல். ர,ற,ன,ண,ல,ள,ழ ஆகியன சரியாக உச்சரித்து பழக இது ஒரு சிறந்த விளையாட்டு. ''கடற்கரையில் உரல் உருளுது.'' ''ஓடுகிற நரியில் ஒரு நரி சிறுநரி, சிறுநரி முதுகில் ஒரு பிடி நரை மயிர்.'' ''பருப்பு உருண்டை, கடல் அலையிலே, ஒரு உரல் உருளுது, பிரளுது, தத்தளிக்குது, தாளம் போடுது'' என்று (திரும்ப திரும்பச் சொல்லுதல்) விளையாடுவார்கள்.

**கிளித்தட்டு**

சிலர் உப்புக்கோடு, உப்புப்பாய்தல் எனவும் கூறுவர். ஓரே அளவு அகலமும் நீளமும் கொண்ட பெட்டிகளை வரைந்து பாத்திகள் போல் நடுக்கோடிட்டு வெளிகளில் விளையாடப்படும் விளையாட்டு இது வாகும். விளையாடும் ஆட்களின் தொகைகளுக்கேற்ப ஒன்றுகுறைத்து பெட்டிகள் வரையப்படும். ஆடும்குழு சம எண்ணிக்கையுள்ள குழுக்களாகப் பிரிக்கப்படும். இக்குழுக்களின் தலைவர் ''கிளி'' என அழைக்கப்படுவார். காசு ஒன்றினை சுண்டிப்பார்த்து (பூவா தலையா) எந்த அணி முதலில் கூட்டுக்குள் இறக்குவது, எந்த அணி முதலில் கூட்டினைக்காப்பது எனத்தீர்மானித்து, ஆட்டம் ஆரம்பிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்தனியாக கிளித்தட்டு பாய்ந்து இறுதியாக பழமாவார்கள். ஆரம்ப இடத்திலும், பழமான பின்னர் மீண்டும் ஆரம்ப இடத்துக்குத் திரும்பும் வரை எதிரணியினர் தடுத்து நிற்பர். ''கிளி'' நடுநெடுங்கோட்டிலும், வரம்புக்கோட்டிலும் கீழும் மேலும் ஓடி கிளித்தட்டு பாய்பவர்களை அடிக்கும். மறிப்பவர்கள் முதலில் புகும் பக்கம் ஒவ்வொரு தட்டிலும் நிற்பர். ஒன்று புகும் பக்கம். மற்றையது வெளியேறும் பக்கம். பக்கக்கோடு பாயும் போது தட்டுப்பட்டாலோ, ''கிளி'' அடித்தாலோ, முழுகுழுவும் தோற்றுவிடும்.

**தும்பி விளையாட்டு**

ஆண், பெண் இருபாலாரும், சேர்ந்தும் விளையாடுவர். வட்டமாக சுற்றியமர்ந்து கையை பின்புறம் ஒரு பொருளை பெறுவது போல் வைத்திருப்பர். தடிப்பான சீலையினை முறுக்கி எடுத்து விளையாடுவர். இதனையே தும்பி என்பர். தும்பியை எடுத்துக்கொண்டு வருபவர் அமர்ந்திருப்பவர்களை சுற்றி வந்து கையினுள் வைப்பது போல் பாசாங்கு செய்து இறுதியில் யாராவது ஒருவரின் கையினுள் தும்பி யினை வைப்பர். தும்பியை வைத்து விட்டு வட்டத்தில் ஓரிடத்தில் அமர்ந்து கொள்வார். தும்பியை வைக்கப்பட்டவர் 'தும்பி தும்பி' என கூவியபடி அமர்ந்திருப்பவர்களை மீண்டும் சுற்றி வந்து யாராவது ஒருவரின் கையினுள் தும்பியினை வைப்பர். அதுமட்டுமல்லாது தும்பி சுற்றும் விளையாட்டு எனும் மகளீர் விளையாட்டும் காணப்படுகிறது. எதிர்எதிராக இருந்து கால்களை நெருக்கி கைகளை பெருக்கல் குறிபோல் பிடித்து பற்றிக்கொண்டு பாடல்களை பாடிக்கொண்டு பம்பரம் சுற்றுவது போல் சுற்றுதல். இதனை தும்பி சுற்றுதல் என்பர்.

**கண்ணாமூச்சி (கண்ணாம்பூச்சி)**

இதற்கு குழுத்தலைவர் ஒருவர் இருப்பார். இவர் ''தாச்சி'' என அழைக்கப்படுவார். ஒரு சிறுவனை தெரிந்து தாச்சி அவன் கண்களை கட்டிவிடும். மற்றவர்கள் ஒளிந்து கொள்வார்கள். தாச்சி கண்ணை திறந்து விட்ட பின் அவன் தேடி சென்று யாரையாவது தொட வேண்டும். ஒளிந்தவர்கள் ஓடி வந்து தாச்சியை தொட்டால் இடைவேளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுபட்டவர்கள் அல்லது தட்டப்பட்டவர்கள் மீண்டும் கண்களைக் கட்டிக்கொள்ள வேண்டும்.

**கண்ணாம்பொத்தி**

ஒரு பிள்ளையின் கண்ணைப் பொத்திக்கொண்டு மற்ற பிள்ளைகளை தேடுவதாகும்.

**தெப்ப விளையாட்டு**

நீந்துதல், அமிழுதல் என்பனவாகும். ஏதாவது ஒரு துண்டை தெப்பம் என தண்ணீருக்குள் போடுவர். தெப்பத்தினை தேடி எடுத்து வரவேண்டும்.

**சுரக்காய் இழுத்தல்**

உறுதியான மரத்தை ஒருவர் இறுக்கி பிடிக்க அவரின் இடுப்பை ஒருவர் பின் ஒருவராக கட்டிப்பிடித்து இழுப்பர். ஒருவர் ''சுரக்காய் இருக்கோ, ''சுரக்காய் இருக்கோ, எனக் கேட்டு இறுதியாக உள்ளவரை இழுப்பார். ஒருவர் பின் ஒருவராக பிடித்திருப்போர் இழுப்பதில் ஏதோ ஓரிடத்தில் கைவிடுவர். அந்த கைவிட்ட இடத்திற்குப் பின் இருப்போர் ஆட்டமிழப்பர்.

**முடிவுரை**

மக்களது இயந்திரமயமான வாழ்க்கையில் கணினி ஆகியவற்றின் முக்கியத்துவத்திற்கு மத்தியில் நாட்டார் விளையாட்டுக்கள் அருகி போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. சிறுவர் பாடல்கள், நாட்டார் பாடல்களுடனான இவ்விளையாட்டுக்கள் அருகி போவதனால் நாட்டார் பாடல்களும் பாவனையின்றி போய் விடலாம். இந்த பண்பாட்டு கோலங்களையும், பழக்கவழக்கங்களையும், பாரம்பரிய மரபுமுறைகளையும், சிறுவர்கள் மத்தியில் எடுத்துச் செல்வது அவசியமாகும். இவ்விளையாட்டுக்களைத் தனித்தனியாக ஆராய்ந்து நாட்டார் விளையாட்டுக்கள் மூலம் வளர்க்கப்படும் உளபாங்கு, உளவளர்ச்சி போன்றவற்றையும் ஆராய்ந்து எடுத்துரைப்பதோடு இவை நூலுருப் பெறவேண்டும். இவற்றோடு இவ்விளையாட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்ந்த பாடல்கள் சேகரிக்கப்பட்டு விளையாட்டுப்பாடல்கள் பகுதியில் ஆராயப்படவேண்டும். அப்போது தான் ஈழத்து தமிழ் நாட்டாரியல் பூரணத்துவம் அடைய முடியும்.

## உசாத்துணைநூல்கள்


1. செங்கைப்பொதுவன் 2010, ''சங்க இலக்கியங்களில் விளையாட்டுக்கலை'',உலக தமிழ்ச்செம்மொழி மாநாடு சிறப்புமலர், கோவை, உலகத் தமிழ்ச்செம்மொழி மாநாடு,

2. தேவநேயப்பாவனாச் .ஞா. 1957, தமிழ்நாட்டு விளையாட்டுகள். தமிழ் மண்பதிப்பகம், சென்னை.

3. அருணாச்சலம்,அ. 2002, தமிழர் வீரவிளையாட்டு, கழக வெளியீடு, சென்னை.

4. எதிர்மன்னசிங்கம் எஸ். 2012, ''சிறுவர் இலக்கியத்தில் கிராமிய விளையாட்டுக்களின் சிற்ப்பம்சங்கள் ஒரு கண்ணோட்டம், டிண பூவல், கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# இலங்கையில் மலையகத் தமிழரின் நாட்டுப்புற மருத்துவம்

## அறிமுகம்

இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் ஐரோப்பியர் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் தொழிலுக்காக இந்தியத் தமிழர்கள் இலங்கைக்குக் கூட்டி வரப்பட்டனர். இலங்கையில் ஐரோப்பிய ஆளுநர் நோர்த் காலத்தில் (1798-1802) 30,000 பவுண் செலவில் இந்தியத் தொழிலாளர் களை இலங்கைக்கு கூட்டிவர தொடங்கியுள்ளனர். இவர்களே ''பயினியர் ரோட் கோப்ஸ்'' என அழைக்கப்பட்டனர். 1818 இல் இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்காக 5000 தென்னிந்தியர்கள் கொண்டுவரப்பட்டனர், அவர்களே பாலங்கள், ரயில் பாதைகள் ஆகியன அமைத்தனர். இலங்கையில் கம்பளை, பேராதனை, களுத்துறை, கட்டுகஸ்தோட்டை ஆகிய பகுதிகளில் பாலங்களை இவர்களே கட்டினார்கள்.

1796ல் பிரித்தானியர் இலங்கைக் கடற்கரையினைக் கைப்பற்றியபோது வரி சேகரிப்பதற்காக இருமொழி தெரிந்த இந்திய சென்னைத் தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர், இவர்கள் ''டுபாஷிகள்'' என அழைக்கப்பட்டனர். இந்தியபரதவர்கள் என்ற இனத்தவர்கள் போர்த்துக்கேயர்கள் காலந்தொட்டு இலங்கையில் குடியேறினர், வட்டிக்கடை, அடவுக்கடை நாட்டுக்கோட்டை செட்டியார்களும் ஐரோப்பியர் வருகைக்கு முன்னரே இலங்கைக்கு வந்துள்ளனர். இவர்கள் செட்டி எனவும் நாட்டுக்கோட்டை நகரத்தார் எனவும் அழைக்கப்பட்டனர். இதன் பின் கோப்பி, தேயிலை, இறப்பர், கொக்கோத் தோட்டத் தொழிலாளிகளாக இந்தியத் தமிழர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

''சிலோன் புளுபுக்'' நூலில் 1864 ல் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியாவிலிருந்து 2079 கலங்களும், பிரெஞ்சு இந்தியாவிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175 கலங்களும் வந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1848 இல் புகையிரதப்பாதை ஆரம்பிக்கப்பட்டபோதும், எண்ணூறு (800) இந்தியத் தொழிலாளர்கள் கூட்டிவரப்பட்டுள்ளனர். இந்திய தமிழர்கள் தொழிலாளர்களாகக் கூட்டி வரப்பட்டபோது கடலில் படகு சரிந்து பலர் இறந்துள்ளனர். பாம்புக்கடியினாலும், மலேரியா காய்ச்சலினாலும் பலர் இறந்துள்ளனர். ''ஆதிலட்சுமி'' என்ற கப்பல் நீரில் மூழ்கி 120 பேர் இறந்துள்ளனர். கடற்கரையிலிருந்து தோட்டங்களுக்கு வந்து சேருமுன்பாகவும் பலர் இறந்து உள்ளனர். 1924ல் இலங்கையில் இந்தியத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களாக 6,10,000 பேர் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1847-1867 வரை 24 சட்டங்கள் புலம் பெயர்வுக்காக கொண்டு வரப் பட்டுள்ளது. இதில் 1858ல் குடிவரவு (இமிகிரேஷன்) சட்டம், 1859ல் ஒப்பந்தத்தொழிலாளர் சட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள் லயன்களிலேயே (10x10 அடி அறைகள்) தங்க வைக்கப்பட்டனர். இந்த லயன்களே இவர்களது நிரந்தர வீடாகியது. இவ்வாறு வந்தவர்கள் செங்கல்பட்டு, மதுராந்தகம், வடஆற்காடு, சேலம், தென்னாற்காடு, திண்டிவனம், திருச்செந்தூர், சிதம்பரம், நாமக்கல், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, பாபநாசம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலிருந்து வந்துள்ளனர்.

இம்மக்களது தாய்வேர்களான மதநம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், கலைகள் ஆகியவற்றில் தென்னிந்தியாவில் பூர்வீக இடங்களில் காணப்பட்ட பண்பாட்டின் வேர்கள் காணப்படுவதைக் காணலாம். ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரை சமயசடங்குகளுடன் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பின்னிப்பிணைந்துள்ளது. வெளியுலகத் தொடர்பற்று தனிமை, மழை, மலைகள் காரணமாக கடுங்குளிர், காற்று தொற்றுநோய்கள், பசிபட்டினி, துயரங்கள் போன்றன சமயநம்பிக்கைகளுக்கும் நாட்டுப்புற மருத்துவத்துக்கும் பற்றுக் கோலாக அமைந்தன.

தொன்று தொட்டு, பன்னெடுங்காலமாக மனிதன் மருத்துவ முறைகள் இயற்கையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்டு வந்திருக்கின்றது. தானே உணர்ந்த உண்மைகளின் அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும், பிறருடைய அனுபவ அறிவினாலும் நோய்களுக்கு நாட்டுப்புற மருத்துவ முறைகளை கண்டறிந்து மனிதனே உருவாக்கிக்கொண்டான். ஒவ்வொரு மனித சமுதாய குழுக்களும் தமக்கென தனித்துவமான மருத்துவ அமைப்பு முறைகளைக் கொண்டுள்ளது. நோயும் மருத்துவமும் மனித இனப்பண்பாட்டு வரலாற்றில் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரிக்கமுடியாதன ஆகும். ஒரு சமுதாய மக்கள் பின்பற்றுகின்ற மருத்துவமுறை அச்சமுதாயத்தின் வரலாற்றுச் சிறப்பியல்புளை வெளிப்படுத்த வல்லனவாக காணப்படுவதுடன், அம்மருத்துவ முறைகள் சமுதாய வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் வரலாற்றுக்கும் பெருந்துணையாக நிற்கின்றன.

## ஆய்வின் பிரச்சினை

நாட்டுப்புற மருத்துவ முறைபற்றி இந்திய நாட்டிலோ இலங்கையிலோ விரிந்தளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இந்திய பழங்குடியினரை ஆய்வுக்குட்படுத்திய மேலைநாட்டு மானிடவியலறிஞர்கள் நாட்டுப்புற மருத்துவம் பற்றி குறிப்பிட்டுள்ளனர். நாட்டுப்புற பாடல்களிலும் பல அரிய மருத்துவமுறைகள் அடங்கியுள்ளன. ஹெக்கார்வட் (Haggard, W, 1929), சர்சிட்னி சிமித் (Sumith, Sir Sydney 1952), ஜாக்கி (Jaggi, OP 1982) ஆகியோர் இத்துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். தமிழில் க.வெங்கடேசன், (1976) ஆ.சிவசுப்பிரமணியன் (1985) ஆகியோர் மந்திரச் சடங்குகள் பற்றி ஆய்வுகள் செய்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நாட்டுப்புற மருத்துவத்தில் ஒப்பீட்டு ஆய்வுகள் ஐரோப்பாவிலும் - அமெரிக்காவிலும் செய்யப்பெற்றுள்ளன. இந்தியாவில் நாட்டுப்புற மருத்துவ முறைகளைப் பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், இலங்கை மலையக தமிழரின் மருத்துவ முறைப்பற்றி இன்னும் சிறப்பான ஆய்வுகள் இல்லை, ஆவணப்படுத்தப்படவுமில்லை.

## ஆய்வின் நோக்கம்

இந்திய தமிழர்களின் புலம்பெயர் சூழல் மற்றும் காரணங்கள் பற்றி ஆராய்ந்து நாட்டுபுற மருத்துவங்கள், பூர்வீக பண்பாட்டின் வேர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளப்படுத்துவதும் அவை பற்றி சர்வதேச ரீதியில் எடுத்துக் காட்டுவதும் இதன் செல்நெறிகளை ஆய்வதும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வில் கண்டறிந்தவை

நாட்டுப்புற மருத்துவத்தில், நாட்டுப்புற மருத்துவம் மற்றும் நாட்டுப்புற மந்திரச் சடங்குகள் இரண்டும் இணைந்தே காணப்படுகின்றன. நாட்டுப்புற மருத்துவத்தில் மந்திரச்சடங்குகள் மூலம் மருத்துவம் செய்யும் அல்லது பழங்கால நம்பிக்கைகள் காணப்படுகின்றன. அறிவியல் நாகரிக, இயந்திர வளர்ச்சி பெற்ற இக்காலத்திலும் கூட கிராமப்புறங்களில் நாட்டுப்புற மருத்துவ முறை வழக்கில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புற மருத்துவத்தை இரண்டு வகையாகப் பகுக்கின்றனர். அவற்றில் ஒன்று இயற்கை மருத்துவம் (Natural Folk Medicine), மற்றொன்று மதமாந்திரீக மருத்துவம் (Megical Religious Medico Religious Medicine), இயற்கை மருத்துவம் மனிதர்களுக்கான இயற்கை மருத்துவம், விலங்குகளுக்கான இயற்கை மருத்துவம் என இரண்டு பிரிவுகளாகவுள்ளன. இயற்கை மருத்துவ பிரிவையும் உட்கொள்ளும் மருத்துவ பிரிவு, வெளிப்பூச்சு மருத்துவ பிரிவு என இரண்டு பிரிவுகளாகவும் பிரிக்கலாம். மந்திர சமய மருத்துவ பிரிவை கடவுளின் சீற்றத்தால் ஏற்படும் நோய்கள், கெட்ட ஆவிகளினால் ஏற்படும் நோய்கள், சூன்யம் முதலியவற்றால் ஏற்படும் நோய்கள், கண்ணேறு படுவதால் ஏற்படும் நோய்கள், விலக்குகளை மீறுவதால் ஏற்படும் நோய்கள் என ஐந்து பிரிவுகளாகப்பிரிக்கலாம் என டோன் யோடர்(Don Yoder) குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுப்புற மருத்துவமாக தாய்ப்பால் மருந்து, காய், இலை. செடி, வேர், பட்டை, எழுமிச்சை, சீரகம், தும்பை, துளசி, மிளகு, பூண்டு, மோர், காய்ச்சிய எண்ணெய், தேன், பால், முட்டை ஆகிய வற்றைப் பயன்படுத்தினர். வெளியில் பூசும் மருந்துகளாக ஆமணக்கு, பூண்டு, வாழைத்தண்டு, வேப்பிலை, மஞ்சள், மிளகு, உப்பு, தேன் ஆகிய வற்றைப் பயன்படுத்துகின்றனர். இங்கு வாதம், கண்நோய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீக்கம், வலி, பீனிசம். பல் வருத்தம், காயங்கள் என பலவகை நோய்களுக்கு மருந்து செய்கின்றனர்.

இவர்கள் மருத்துவ சடங்குகளாக நேத்திகடன் நிறைவேற்றல், பலி தீர்க்க சூனியம், பேய் விரட்டல் போன்றவற்றை மேற்கொள்கின்றனர். திருநீறு மந்திரிப்பது இதில் முக்கியத்துவம் பெறுகிறது. சாமப்பேய், பிசாசு, முனி, கறுப்பு, மோகினி, ஆவி ஆகியவற்றை விரட்டும் சடங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மரபுவழி மருத்துவம் குடும்பப் பாரம்பரிய மருத்துவமாகவும், பொது மக்கள் சிலரால் செய்யப்படும் கௌரவ மருத்துவமாகவும், தர்ம மருத்துவமாகவும் உள்ளது. மூலிகைப் பொருட்களாலும், ஆட்டுப்பால், மாட்டுப்பால், தைலம் போன்றவற்றாலும், நாட்டுப்புற மருத்துவம் செய்யப்படுகின்றது. இதில் உடனுக்குடன் மருந்துகள் தயாரிக்கப்பட்டு மருத்துவம் பார்க்கும் முறைகளே மிகுந்துள்ளது. மனித இன வரலாற்றினை நோக்கின், நோய்கள் ஏற்பட காரணங்கள் இருந்தன. பழங்குடி சமுதாயத்தில் பிலாத்தி, மருத்துவச்சி என்பவர்களே பூசாரியாகவும், மந்திரவாதியாகவும், வைத்தியராகவும் உள்ளான். அவனுக்கு அச்சமுதாயத்தில் மிக்க மதிப்பு உண்டு. ஆவியுலகக் கோட்பாட்டின் அடிப்படையில் இவர்களது மந்திரங்கள் தோன்றியது என்கின்றனர். மனிதனுக்கு அப்பாற்பட்ட ஆற்றலொன்று உலகைக் கட்டுப்படுத்துகின்றது எனவும் அவ்வாற்றலை வழிபாட்டின் மூலமும் பலியிடுதல் மூலமும் ஈர்க்க முடியும் எனும் நம்பிக்கையின் அடிப்படையில் இவை மேற்கொள்ளப்பட்டது. நாட்டுப்புற மந்திர சமய மருத்துவம், மந்திரித்தல், திருநீறு போடல், கோடங்கி கேட்டல், பார்வை பார்த்தல், நேர்த்திக்கடன் செய்தல், பேயோட்டல், செய்வினை செய்தல் போன்ற பல பெயர்களால் அழைக்கிறார்கள்.

நாட்டுப்புற இயற்கை மருத்துவம் மிகப்பழைமையானது, காலம் காலமாக வாய்மொழி மரபு மூலம் நாட்டுப்புற மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. மூலிகைகள், செடிகள், வேர்கள், மரப்பட்டைகள், தாதுப் பொருட்கள், விலங்கினுடைய எச்சங்கள் இவற்றை கொண்டு மனிதன் நோயைக் குணப்படுத்தப் பயன்படுத்தினான். இயற்கை மருத்துவமே காலப்போக்கில் ''மூலிகை மருத்துவம்'' என வழங்கலாயிற்று. புரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் பண்பாட்டு வாழ்க்கையில் மூலிகை மருத்துவமே முக்கிய இடம் பெறலாயிற்று.

இயற்கை மருத்துவத்தினை, குழந்தைகள் மருத்துவம், பெண்கள் மருத்துவம்,ஆண்கள் மருத்துவம், பொது மருத்துவம் என நான்கு பிரிவுகளாகப் பாகுபாடு செய்து ஆராய்கின்றனர்.

## குழந்தைகள் மருத்துவம்

1. பிறந்த குழந்தைக்கு சளி, காய்ச்சல் வராமல் இருக்க வெற்றிலை, துளசி இரண்டையும் பிழிந்து சாறு எடுத்து தேனில் கலந்து, கஸ்தூரியுடன் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

2. பிறந்த குழந்தையின் தொப்புள்காயம் ஆறாமல் இருந்தால் சுருட்டுச் சாம்பல் சீமை ஓட்டினைத் தேய்த்து வைத்தால் விரைவில் ஆறிவிடும்.

3. பிறந்த குழந்தைக்கு ஐந்தாம் நாள், ஏழாம் நாளில் சீரகம், வேப்பிலை, பூண்டு மூன்றையும் அரைத்து ஊற்றினால் குழந்தையின் வயிற்றிலிருக்கும் கெட்ட நீர் வெளியேறும். பசியை உண்டாக்கும்.

4. குழந்தைக்கு ஓராண்டு ஆகும் வரைக்கும் சாதிக்காய், மாசிக்காய், வசம்பு, மிளகு, சித்தரத்தை முதலான பொருள்களை ஆவிகாட்டி அவித்து காயவைத்து எடுத்து வைத்துக்கொண்டு குழந்தைக்கு எந்த நோய் வந்தாலும் அனைத்திலும் சிறிதளவு இழைத்து ஊற்றினால் எல்லாவிதமான நோயும் குணமாகும்.

5. குழந்தைக்கு சளி அதிகமாக இருப்பின் கொடிக்கள்ளி, கற்பூரவள்ளி இரண்டையும் வதக்கி சாறு பிழிந்து நான்கைந்து சொட்டுகள் கொடுக்கலாம்.

6. குழந்தைக்கு சளிப்பிடித்திருந்தால் தேங்காய் எண்ணெயையும், கற்பூரத்தையும் காய்ச்சி கை பொறுக்கும் சூட்டில் சிறிதளவு தடவினால் குணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தினமும் காலையில் குழந்தை கண் விழித்ததும் சுத்தமான தேன் ஒரு சொட்டு நாக்கில் தடவ வேண்டும். நாக்கு பிரண்டு விரைவில் பேச்சு வரும்.

8. குழந்தைகளுக்குக்கு கண்வலி ஏற்பட்டால் நந்தியாவட்டைப் பூவின் சாற்றை இரண்டு சொட்டு காலை வேளையில் விட்டால் கண்வலி உறுத்தல் நீங்கும்.

9. குழந்தைக்கு இளம்பிள்ளை வாதம் ஏற்பட்டால் வெண் தாமரைப் பூவைக் கொண்டு வந்து ஒரு சட்டியில் போட்டு தண்ணீர் ஊற்றிக் காய்ச்சி வடிகட்டி தினமும் காலை வேளைகளில் கொடுத்த வந்தால் வாதம் நீங்கும்.

10. குழந்தைகளுக்குச் சீத பேதி ஏற்பட்டால் சுத்தமான சர்க்கரை நீரை ஒரு வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் நாளைக்கு மூன்று வேளைகள் கொடுத்தால் சரியாகும்.

## பெண்கள் மருத்துவம்

1. பிரசவித்த தாயின் கருப்பையிலிருந்த அழுக்குகள் வெளியேறு வதற்கு கருஞ்சீரகம், பெருங்காயம், பனைவெல்லம் மூன்றும் சேர்த்து இடித்து உருண்டை செய்து ஒரு வாரத்திற்கு தினமும் காலையில் வெறும் வயிற்றில் கொடுத்து வந்தால் கருப்பை சுத்தமாகும்.

2. பூப்படைந்த பெண்ணுக்கு ஒருவாரம் வரை தினமும் காலையில் வெறும் வயிற்றில் நல்லெண்ணெயுடன் மிளகுதூள் கலந்து கொடுத்தால் பூப்பினால் ஏற்பட்ட பலவீனம் சரியாகும்.

3. இளம் பெண்கள் குறிப்பிட்ட வயதில் பூப்படையவில்லையென்றால் இஞ்சி, நல்துளசி, எள்ளு சேர்த்து அரைத்துத் தண்ணீரில் கரைத்துக் கொடுத்தால் ஒரு மாதத்தினுள் வயதிற்கு வருவாள். அது போல பல ஆண்டுகளாக பெண் வயதிற்கு வரவில்லை என்றால் எள்ளினை ஊரவைத்து வடிகட்டி அதன் தண்ணீரை மட்டும் கொடுத்தால் விரைவில் பெண் பூப்படைவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. குழந்தையைப் பெற்றெடுத்த தாய்க்குத் தாய்ப்பால் அதிகமாகக் கிடைக்கவில்லை என்றால் பூண்டு வேகவைத்துச் சாப்பிட்டால் பால் அதிகமாகக் கிடைக்கும்.

5. பிரசவ காலத்தில் கருவுற்றிருக்கும் பெண்ணிற்கு சேம்பு, கராம்பு, சேற்றுக்கத்தாழை மூன்றையும் அரைத்துக் கசாயம் வைத்துக் கொடுத்தால் பிரசவம் எளிதாக இருக்கும்.

6. கருவுற்றிருக்கும் பெண்ணுக்குச் சரியாக சிறுநீர் கழியவில்லை என்றால் வெள்ளை வெங்காயம், சேம்பு. கொத்துமல்லி, முருங்கை ஈர்க்கு ஆகியவற்றைச் சேர்த்து இடித்துத் தண்ணீர் விட்டுக் காய்ச்சி கசாயம் வைத்துக் கொடுத்தால் சிறுநீர் நன்றாக வெளியேறும்.

## ஆண்கள் மருத்துவம்

1. ஆண்களுக்கு இளம்வயதில் முடி உதிர்ந்து சொட்டை ஏற்பட்டால் தேனில் பூண்டினைப் உரைத்து முடி உதிர்ந்த இடத்தில் தேய்த்து வந்தால் விரைவில் முடி வளரும்.

2. ஆனைநெருஞ்சி, நீர்முட்லாக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, பசும் பால் மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்து ஐந்து நாள் ஐந்து வேளைகள் சாப்பிட்டால் பால்வினை நோய் முழுமையாகக் குணமாகும்.

## பொது மருத்துவம்

நாகபாம்பு முதலான விஷமுள்ள பாம்புகள் கடித்துவிட்டால் கடி பட்டவுடன் வாழைப்பட்டை சாறுபிழிந்து வயிறு நிரம்பக் குடித்து விட்டால் விஷம் முறிந்து வாந்தி வழியே விஷம் வெளியேறிவிடும்.

இயற்கையில் கிடைக்கின்ற மூலிகை, தாதுக்கள் போன்ற பொருட்களைக் கொண்டு மக்களின் நோய்களுக்கேற்ற மருத்துவம் செய்வதை இயற்கை மருத்தவம் என்று முன்னர் குறிப்பிட்டோம். இயற்கைப் பொருட்களை கையாளும் நாட்டுப்புற மருத்துவச் செய்முறைகளைக் கவனித்தால் இயற்கைப் பொருள்களை மருந்தாக பயன்படுத்தவதை விட உணவாகப் பயன்படுத்துவதே அதிகமாக நடைமுறையில் உள்ளது. உணவே, மருந்து, மருந்தே உணவு என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைத் தத்துவத்தை நாட்டுப்புற இயற்கை மருத்துவம் பெற்றுள்ளது.

இலங்கையில் வரும் இந்திய வம்சாவளி தமிழர்கள் மத்தியில் மட்டும் காணப்படும் நோய்கள் பற்றி கூறும் பழமொழிகளையும், நாட்டுப்புற மருத்துவம் பற்றிய பழமொழிகளையும் எடுத்து நோக்கின் நாட்டுப்புற மருத்துவத்தின் முக்கியத்துவம் புலனாகும். எடுத்துக் காட்டாக,

1. ''காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் ! ''
2. ''முருங்கைக் கீரை வெந்து கெட்டது
   அகத்திக் கீரை வேகாமல் கெட்டது''
3. பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்.
4. இம்பூறல் காணாமல் இருமிச் செத்தான்.
5. தூதுவளை ஆயுளை விருத்தி செய்யும்.
6. வேப்பெண்ணெய் ஆபத்துக்கு உதவும்.
7. வேலம்பட்டை பித்தத்தைப் போக்கும்.
8. கொடிமுள்ளி நாறும் கபத்தை அறுக்கும்.
9. ஆற்று நீர் வாதத்தை போக்கும்.
   சோற்று நீர் பித்தம் போக்கும்
10. சுக்குக்கு மிஞ்சிய மருந்துமில்லை
    சுப்பிரமணியருக்கு மிஞ்சிய சாமியும் இல்லை போன்றவையாகும்.

**மந்திர சமய மருத்துவம்**

1. இருள் அடித்தவர்களுக்கு மந்திரித்த தாயத்து கட்டுகின்றனர்
2. பெண் கர்ப்பமாயிருக்கும் போது குழந்தை நலன் வேண்டி கோழி பலியிடுவதுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பல்வலி, காய்ச்சல், வயிற்றுவலி, நாய்க்கடி, பாம்புக்கடி முதலிய வற்றை மந்திரம் மூலம் குணப்படுத்த முயலுகின்றனர்.

4. காணிக்காரர்களிடையே ''பிலாத்தி'' என்பவர் ஜோஸ்யராகவும் சூன்யக்காரராகவும், வைத்தியராகவும் பணியாற்றுகின்றனர்.

5. மந்திரம் ஓதுவது மூலம் நோய் தீருமென நம்புகின்றனர்.

6. இசை முழங்க மருந்து உட்கொண்டால் நோய் தீருமென நம்புகின்றனர்.

நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கைகளும் இவர்களிடம் காணப் படுகின்றன.

1. அம்மைநோய் தெய்வக்குறை என எண்ணி மாரியம்மனுக்கு வழிபாடும் நேர்த்திக்கடனும் பண்ணுகின்றனர்.

2. அமாவாசை நாளில் நோயின் குணம் தீவிரமாகும் என எண்ணு கின்றனர்.

3. கை கால் சுளுக்கிக் கொண்டால் இரட்டையர் தடவினால் போகும் என மக்கள் நம்புகின்றனர். இதே போல் காலால் (கால் வழியே வெளியில் வரும்) பிறந்தவர்கள் உருவினால் போகும் எனவும் நம்புகின்றனர்.

4. ''நெற்றியில் கை வைத்தல்'' ''நெஞ்சில் கை வைத்தல்'' போன்ற வற்றை மருத்துவரை நாடிவரும் ஆட்கள் செய்தால் நோய் குணமாவது கஷ்டம் என வைத்தியர்கள் நம்புகின்றனர்.

5. சனிக்கிழமை ரேவதி நட்சத்திரத்துடன் எமகண்டமும் கூடியிருந்தால், மருந்து கொடுக்க கூடாது என வைத்தியர்கள் நம்புகின்றனர்.

**முடிவுரை**

இந்தியப்புலம்பெயர் இலங்கை வாழ் மலையகத்தமிழரின் தனிப்பட்ட அடையாளங்கள் அழிந்து வருகின்றன. இவர்களது ஆரம்ப வேர்கள் பற்றி எந்த அடிப்படை அறிவும் இல்லாதவர்களாக இம்மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியதொடர்புகளின்றி இலங்கை பிரஜா உரிமை பெற்ற மக்களாக வாழ்கின்றனர். பலர் கலப்புத் திருமணம் மூலம் மொழிமாற்றம், மத மாற்றத்திற்கும் உள்ளாகியுள்ளனர். எனவே, இம்மக்களின் வரலாறு, தனிப்பட்ட கலாசார விழுமியங்களை தொகுத்து, ஆராய்ந்து, ஆவணப் படுத்தி, பாதுகாத்து, எஞ்சியிருப்பவர்களுக்குக் கொண்டு செல்வது இன்றியமையாததாகும்.

## உசாத்துணை நூல்கள்

சக்திவேல், சு. நாட்டடப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், 1983.

நல்லையா, சி. ''மலையகத் தமிழர் வரலாறு'' கொட்டகலை, சாரல் வெளியீட்டகம், 2003.

முத்தையா. இ. நாட்டுபுற மருத்தவ மந்திரச் சடங்குகள். வெண்ணிலா பதிப்பகம், 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# சங்க கால இலக்கியத்தில் தற்கால விளையாட்டுக்கள்

## ஆவணப்படுத்தலுக்கான ஓர் ஒப்பீட்டாய்வு

### முன்னுரை

விளையாட்டினால் ஒருவருக்கு மனமகிழ்ச்சியும், உடல்வளர்ச்சியும், உடலுக்குப் புத்துணர்வும் ஏற்படுகின்றன. மனிதனுக்கு உழைப்பும், உறக்கமும் போலவே விளையாட்டு, திளைப்பு, மகிழ்ச்சி என்பனவும் முக்கியமானதாகும். மனிதர்கள் மட்டுமன்றி சகல உயிர்களும் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றன. விலங்குகளும் பறவைகளும் கூட விளையாடுவதைக் காண்கிறோம். தமிழ் இலக்கியத்தில், பழந்தமிழ் மன்னர்கள் காலந்தொட்டு வீர விளையாட்டுக்கள் இருந்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. பிரபலமான பல விளையாட்டுக்கள் இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகள் சங்ககாலத்திலேயே ஆரம்பமாகி யுள்ளது.. சங்ககால தமிழ் இலக்கியங்களில், விளையாட்டுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சங்கத்தமிழ் இலக்கியம் எட்டுத் தொகையையும், பத்துப்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டவை. கி.மு. 776 இல் ஒலிம்பிக் ஆரம்பித்து நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடந்துவந்துள்ளது. கி.மு. 339 இல் நிலநடுக்கம் காரணமாக அரங்கம் அழிந்ததில் பலர் இறந்தனர். இதனால் ஒலிம்பிக் நிறுத்தப்பட்டு மீண்டும் 1896 இல் ஆரம்பிக்கப்பட்டது. எனவே, ஆரம்ப ஒலிம்பிக் சங்க காலத்தில் நடந்துள்ளன. சங்கக்கால விளையாட்டுக்கள் பற்றிச் சங்கப் பாடல்களிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது. தெரு, மறைவிடம், மன்றம், செய்குன்று இளமரக்கா என்னும் பூங்கா, பந்தல், பீளிக்கறை, நீர்நிலை, நெடுமணல்பரப்பு, காவற்காடு, கனிமலர்ச்சோலை, களம் முதலான பகுதிகளில் சங்ககால மக்கள் விளையாடியதாகச் சான்றுகள் தெரிவிக்கின்றன. தமிழரின் ஆயகலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுபத்துநான்கில் குதிரையேற்றமும் ஒன்றாகும். இது வளர்ச்சிபெற்ற சூதாட்டப் போட்டியாகவும் இன்று காணப்படுறது.

*''ஒண்கொடி மகளிர் வண்டல் சயநம*
*நொண்டி அன்ன என்நலம் கந்து*
*கொண்டனை சென்மோ - மகிழ்த - நின் சூளே''*

இங்கு ஒள்ளிய வளையலை அணிந்த பெண்கள் வண்டற் பாவை செய்து விளையாடுவதை குறிப்பிடுகின்றது. (குறுந்தொகை 238: 3)

புறநானூற்றில் ''ஓரை ஆயத்து ஒண்தொடி மகளின்'', ஓரை ஆயம் - ஒரு விளையாட்டு வகை கைவளையல் அணிந்த மகளிர் விளையாட (புறநானூறு 176 : 2) குறுந்தொகையில் பாலுண்டலையும் பந்து விளையாடலையும் தன்னோடு கூடி விளையாடும் ஆய மகளிருடன் செய்யாமல் என (396:2 பாலையில்) கூறப்பட்டுள்ளது.

''விளையாட்டாயமொரு'' (நன்றிணை 68)'' விளையாட்டு ஆயமொரு வெண்மணல் அழுத்தி'' (நற்றிணை 172)'' ஒருங்கு விளையாட ''(கலித்தொகை 711.6)'' மடவரன் மகளிரோடு விளையாடி'' (பெரும்பாணாற்றுப்படை38) ஆகியவற்றில் ''விளையாட்டு'' பற்றிக் கூறப்படுகின்றது. இவற்றை அக விளையாட்டுக்கள், புறவிளை யாட்டுக்கள் (Indoor & Outdoor games) என வகைப்படுத்தலாம்.

தொல்காப்பியத்தில்,'' செல்வம் பலனே புணர்வு விளையாட்டென்று எல்லல் நீத்த உவகை நான்கே'' எனக் கூறப்படுகிறது. இதன் மூலம் இன்பம் தருவதே விளையாட்டாக நோக்கலாம். சங்ககால இலக்கியங் களில் கூறப்படும் விளையாட்டுக்களை இன்றைய விளையாட்டுக்களோடு ஒப்பிட்டு நோக்குதல் அவசியமானதாகும்.

தற்காலத்தில், சட்டதிட்டங்களுடன் விளையாடப்படும் விளை யாட்டுக்கள் கூட ஆரம்பகாலத்தில் நாட்டுப்புற விளையாட்டுகளாக இருந்தே வளர்ச்சியடைந்ததன. பின்னர் இன்று வரைக்கும் காலத்துக் காலம், காலத்துக்கேற்ப விதிமுறைகள் அமைக்கப்பட்டு தற்போது விளையாடப்பட்டு வருகின்றன. விளையாட்டுக்களின் ஆரம்பகாலம் ஆவணப்படுத்தப்படாமல் வரலாறாகவே கூறப்படுகிறது. ஆனால், சங்க இலக்கியத்தில் இதற்கான ஆவணப்படுத்தலையும், பதிவினையும் காணமுடிகின்றது. இவற்றில் பல ஆதாரத்துடன் எடுத்து காட்டப் படாமலுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககால இலக்கியங்களில் தற்கால விளையாட்டுகளின் ஆதாரங் களைத் தேடுவதும், ஆதாரத்துடன் எடுத்துக்காட்டி இப் பதிவினை ஆவணப்படுத்துவதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

வரலாற்று மீட்டுருவாக்க அணுகுமுறைக் கோட்பாடு கொண்டு சங்க இலக்கியமான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகியவற்றிலிருந்து பொதுவான விளையாட்டுக்களையும், குறிப்பாக தற்போது சட்ட திட்டங்களுடன் விளையாடும் விளையாட்டுக்களின் ஆரம்பத்தினையும் தேடிப் பதிவு செய்து ஆவணப்படுத்துவதோடு, இரண்டாம்நிலை ஆதாரங்களின் துணைக்கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## புனலாடுதல்/நீச்சல் (swimming)




நீராடி மகிழ்தல் என்பதே புனலாடுதலாகும். இது தற்போது பல பெயர்களைக் கொண்ட நீச்சல் தடாக விளையாட்டாக காணப்படுகின்றது. நீச்சல் என்பது நீரினுள் எந்தவிதக் கருவிகளும் இல்லாமல் பக்க உறுப்புகளின் அசைவின் மூலம் மிதந்து, நகரும் செயலாகும். நீச்சல் பழக்கம் புத்துணர்ச்சியையும், சுறுசுறுப்பையும் தருகிறது. குளிப்பதற்கும், மீன்பிடிப்பதற்கும், புத்துணர்ச்சிக்கும், உடற்பயிற்சிக்கும் மற்றும் விளையாட்டாகவும் நீச்சல் பழக்கம் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது. இதில் படர்பிறை (Synchonised Swiminig) என்பதும் நீச்சல் போட்டிகளில் காணப்படும் ஒரு வகை நீரில் ஆடல் எனும் குழுவாக பங்குபற்றும் போட்டியாகும். வரலாற்றிற்கு முந்திய காலமான கற்காலந்தொட்டே நீச்சல் கலை மனிதர்களிடம் இருந்ததற்கான ஆதாரங்கள் 7000 ஆண்டுகள் பழைமையான குகை ஓவியங்கள் மூலம் காணக்கிடைக்கின்றன. கில்கமெஷ் காப்பியம், இலியட்,ஒடிசி மற்றும் விவிலியம் போன்ற எழுத்துபூர்வமான ஆதாரங்கள் கி.மு. 2000 இல் இருந்து கிடைக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களும், பெண்களும் பங்குபற்றும் இப் போட்டி நிகழ்வாக விளங்கும் நீச்சல், சங்க காலத்தில் ''மருதச்'' செய்யுள்களில் காணப்படு கின்றது. பரிபாடல் வையைப்பற்றிய பாடலில் புனலாடல் பற்றிக் காட்டப்பட்டுள்ளது.

வையைப் புனலின் வனப்பு

*''இறு வரை புரையுமாறு இருகரை ஏமாத்து,*
*வரை புரை உருவின் நுரை பல சுமந்து,*
*பூ வேய்ந்து, பொழில் பரந்து ;*
*துனைந்து ஆடுவார் ஆய் கோதையர்,*
*அலர் தண் தாரவர், காதில்*
*தளிர் செரீஇ, கண்ணி பறித்து;*
*கைவளை, ஆழி, தொய்யகம், புனை துகில்,*
*மேகலை, காஞ்சி, வாகுவலயம்,*
*எல்லாம் கவரும் இயல்பிற்றாய் : தென்னவன்*
*ஒன்னார் உடைபுலம் புக்கற்றால் - மாறுஅட்ட*
*தானையான் வையை வனப்பு''*

நீரால் அரிக்கப்பட்டு அடிப்பக்கம் இற்றுப்போன மலைபோல, நீரால் அரிக்கப்பட்டுக் குத்துண்டு நிற்கும் இருகரைகளாகிய காவலுக்குள் அடக்கி, வெள்ளிப் பனிமலையின் சிகரங்களைப் போன்ற வடிவம் உடைய நுரைகள் பலவற்றையும் சுமந்துகொண்டு, பூவினால் மூடப்பட்டுச் சோலைகளிடையே பரந்து வந்தது வையை, மேலும், அவ்வையை, தன்னிடத்தில் விரைந்து நீர் விளையாடலைச் செய்கின்ற ஆராய்ந்தணிந்த மலர் மாலையினையுடைய பெண்டிரின் காதுகளில் தளிரைச் செருகியும், மலர்ந்த குளிர்ச்சி பொருந்திய மாலையணிந்த ஆடவரின் தலையில் சூடிய தலைமாலைகளைப் பறித்தும், மகளிரின் கைகளில் அணிந்த வளையல், மோதிரம், தலையில் அணிந்த தலைப்பாகை, உடுத்திய ஆடை, அந்த ஆடையின் உள்ளே அணியப் படும் மேகலை, ஆடையின் புறத்தே அணியும் காஞ்சி ஆகியவற்றையும் கவர்ந்து கொள்ளும் இயல்பினையுடையதாய, பகைவரைக் கொன்ற படையினுடைய பாண்டியனுக்குரிய வையையாற்றில் வந்த புது வெள்ளத்தின் இயல்பு, பாண்டிய மன்னன், பகைவருடைய தோல்விக் குரிய நிலத்தில் புகுந்து அவர்களை வென்று அவர் நாட்டுப் பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கவர்ந்து வருதலை ஒத்ததால் வையையின் வனப்பு, பாண்டியனின் இயல்பை ஒத்தது எனக் கூறப்படுகின்றது.

*"தலைப்புணைக் கொளினே தலைப் புணைக்கொள்ளும்*
*கடைப் புணைக் கொளினே தலைப் புணைக்கொள்ளும்*
*புன்னகைவிட்டு புனலோடு ஒழுகின்*
*ஈண்டும் வருகுவன் போலும்"*


குறுந்தொகையில் ( 222:1 குறிஞ்சி) தலைவியும்,தோழியும் ஆடும் புனல் விளையாட்டில் தலைவன் கண்டறிந்தமை இப்பாடலிற் கூறப்படுகிறது.

*"புனல்நயந்து ஆடும் அத்தி அணிநயந்து*
*காவியி கொண்டு ஒயித் தாங்கும் அன்னோ என"*

(அகநானூற்றில் 376 மருதம் (10-11) கூறப்படுகிறது.

**பண்ணை பாய்தல் (Diving)**





மகளிர்க் காதில் தளிரைச் சொருகும் வழக்கம் உண்டு என்பதனை, "வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்" (திருமுருகாற்றுப்படை-31) என்பதால் அறியலாம். மூழ்கி நீராடி எழும் போது, நீரில் அடித்து வரப்படும் தளிர் காதில் வந்து செருகிக் கொள்ளுமாதலின், வையை, மகளிர் காதில் தளிரைச் சொருகியது என்னும் கற்பனையை ஆசிரியர் புலப்படுத்தினார். இதில் கீழ் நீச்சல் - அதாவது மேலே இருந்து குதித்து கிணற்றின் கீழே சென்று மணல் எடுத்து வருவதை "தொடித்தலை " விழத்தண்டூன்றினார்" என்றும் புலவர் குறிப்பிடுகின்றார்.

பெண்கள் பலரும் சூழ்ந்து நிற்கக் கிணற்றுக்குள் துடுமெனப் பாய்ந்து குதித்து மணல் கொண்டு மேலேவந்து அனைவரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியப்பில் ஆழ்த்திய கல்லா இளமைப் பருவத்தினை நினைந்து கழிவிரக்கப்படுகிறார், தொடித்தலை விழுத்தண்டூன்றினார் என்னும் புலவர்.

*''இனிநினைதந் திரக்க மாகின்று திணிமணல்*
*செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத.*
*தண்கயம் ஆடும் மகளிரொடு கைபிணைந்து*
*தழுவுவழித் தழீஅத் தூங்குவழித் தூங்கி*
*மறையென லறியா மாயமி லாயமொடு*

*உயர்சினை மருதத்துத் துறையுறத் தாழ்ந்து*
*நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்*
*கரையவர் மருளத் திரயகம் பிதிர*
*நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து*
*குளித்து மணற்கொண்ட கல்லா இளமை '' புறம்.243*

நற்றிணையில் (68இல்) ஆற்று நீர் விளையாட்டுப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**ஈட்டி எய்தல்** (Spear shot& Javelin& Arrow shot)



ஈட்டி எறிதல் என்பது ஈட்டி அல்லது ஈட்டி போன்ற ஒன்றை எவ்வளவு தூரம் எறிய முடியும் என்று பார்க்கும் ஒரு தட கள விளையாட்டு ஆகும். ஒவ்வொரு போட்டியாளரும் ஒரு தட களத்தில் ஓடிவந்து அந்த விசையுடன் எறிவர். ஒவ்வொருவருக்கும் மூன்று சுற்றுக்கள் தரப்படும். ஈட்டியின் முனை முதலில் நிலத்தைக் குத்தினால், அந்த முனையில் இருந்து தூரம் கணக்கிடப்படும். ஈட்டி கிடையாக போய் விழுந்தால், ஈட்டியின் இறுதி முனையில் இருந்து தூரம் கணக்கிடப்படும். எந்தப் போட்டியாளர் அதிக தூரம் எறிகிறாரோ, அவரே வெற்றியாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விளையாட்டானது ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும், தென் ஆசிய (சாக்) விளையாட்டு போட்டியிலும் உண்டு. இது போலத் தேசியப் போட்டிகள் மாகாணப் போட்டிகளிலும் ஈட்டி எறிதல் போட்டி உண்டு. சங்க கால வேடுவர்கள் ஈட்டி எய்தனர். மன்னர்களே ஈட்டி எய்தலை வீரமிக்கதாக கருதினர் புறநானூற்றில் வேட்டையாடச் சென்ற இடத்தில் ஈட்டி எறிதலைக் கண்ட புலவர் பெருமானுக்குப் பெரும்பரிசினை அளித்த செய்தி இடம் பெற்றுள்ளது

**உடற்பயிற்சி ஆட்டம் / கண்காட்சி /பெலே டான்ஸ். (**Tril Play**)**




விளையாட்டுப் போட்டிகளில் ஆரம்ப விழாவிலும், இறுதி விழாவிலும் நடைப்பெறும். ஆட்டங்களுடன் போட்டியாகவும் நடைபெறுகின்றது. சில இடங்களில் பேண்ட் வாத்தியப் போட்டியாகவும் நடைபெறுகின்றது. சங்க காலத்தில் மன்னர்கள் கூத்தர் விறலியர்களின் பாடலையும், ஆடலையும் கேட்டும் கண்டும் இணைந்து பங்குபற்றியவர்களுக்கு பெரும் பரிசு அளித்துள்ளனர். ''துணங்கை'' என்பது இன்னொரு கூத்தாகும், விழாவின் போது தெருக்களில் துணங்கை ஆடினர். இதற்கு ஏற்ப முழவு ஒலித்தது.

*''முழவு இமிழும் அகலாங்கண்*
*விழவு நின்ற வியன்மறுகில்*
*துணங்கை'' (மதுரை.327)*

அத்துணங்கைக் கூத்தில் மகளிர் பங்கு பெறுவர். ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து ஆடுவர். ''மள்ளர் குழீஇய விழவினானும், மகளிர் தழீஇய துணங்கையானும் யாண்டும் காணேன் மாண்தக்கோனை'' என்னும் ஆதிமந்தியாரின் பாடல் வரிகள் சான்றாகும். போர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமையால் நெடுஞ்செழியனின் பகைப்புல மகளிர் தாம் வழக்கமாக ஆடும் துணங்கையை மறந்திருந்தனராம். (மதுரை. 159-160) இங்ஙனம் நடக்கும் துணங்கையில் அரசரும் கலந்து கொண்டனர் எனக் கூறப்படுகின்றது.

**சதுரங்கம்** (chess)



சங்ககாலத்தில் சிறந்து விளங்கிய விளையாட்டுகளில் ஒன்று வட்டாடல். திருவள்ளவர்

*''கல்லாடிக் கோட்டி கொளல்*
*அரங்கின்றி வட்டாடுதலை யொக்கும்''*

என்கிறார் இளங்கீரனார் பாடிய நற்றிணையில் வேப்பமரத்து நிழலில் நெல்லிக்காயை வட்டமாக கொண்டு ஆடுவது பற்றி,

*''பொரியரை வேம்பின் புள்ளி நிழல்*
*கட்டளை யன்ன வட்டரங் கிழைத்துக்*
*கல்லாச் சிறாஅர் நெல்லிவட் டாடும்*
*வில்லே ருழவர் வெம்முனைச் சீறூர்''* - ***(நற். 3.2-5)***

பறையில் உதிர்ந்து கிடந்த பளிங்கு போன்ற நெல்லிக் காய்கள் வட்டுப்போலத் தோன்றிய பாலை நிலம்பற்றி அகநானூறும் ( 5.9-10) குறிப்பிடுகின்றது. சதுரங்கத்தின் தோற்றம் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவினாலும், இந்தியாவில் விளையாடப்பட்டு வந்த சதுரங்கம் என்னும் விளையாட்டிலிருந்தே இது வளர்ச்சியடைந்தது என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. இங்கிருந்து மேற்கே ஐரோப்பாவுக்கும், கிழக்கே கொரியா வரையும் பல வேறுபாடுகளுடன் பரவியது. இது மங்கோலியா வழியாக ரஷ்யாவுக்குப் பரவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விளையாடப்பட்டதாகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து பாரசீகத்துக்குப் பரவிய இவ் விளையாட்டு, பாரசீகத்தை இஸ்லாமியர்கள் கைப்பற்றிய பின்னர் இஸ்லாமிய நாடுகள் பலவற்றிலும் பரவியது.

தமிழர் விளையாட்டில் மிகவும் சிறப்புற்றிருந்த விளையாட்டு வட்டாடல் ( வட்டாடல்-வட்டை உருட்டி சூதாடுதல்) இதற்காக இழைத்துக் காய்களை நகர்த்தி விளையாடும் இவ்வகை ஆட்டம் ஒருவகைச் சூதாட்டத்தை ஒத்தது. இவ் விளையாட்டைத் திருவள்ளுவர்,

தமிழர் விளையாட்டில் மிகவும் சிறப்புற்றிருந்த விளையாட்டு வட்டாடல் ( வட்டாடல்-வட்டை உருட்டி சூதாடுதல்) இதற்காக இழைத்துக் காய்களை நகர்த்தி விளையாடும் இவ்வகை ஆட்டம் ஒருவகைச் சூதாட்டத்தை ஒத்தது. இவ் விளையாட்டைத் திருவள்ளுவர்,

*''அரங்குஇன்றி வட்டுஆடி அற்றேநிரம்பிய*
*நூலின்றிக் கோட்டி கொளல்'' (401)*

ஆகவே, இந்த வட்டாடல் விளையாட்டு குறள் காலத்து விளையாட்டு என்பது தெரிய வருகிறது. எனவே, பழந்தமிழரும் விளையாட்டுகளிலும் அறிவியல் வழி சிந்தனை கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதே தமிழருக்கு மரபு சார்ந்த பெருமையாகிறது.

## பந்தாடுதல் - கோ-கோ/ ஏன்ட்போல் (Handball)




நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒருவகைப் பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய மகளிர் வழக்கமாக இருந்தது. மாடி வீடுகளில் - மேல் மாடத்தில் பெண்கள் வரிப்பந்தாடியது பற்றியது பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*''பீலி மஞ்ஞையின் இயலிக் கால*
*தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை*
*வான்தோய் மாடத்து வரிப்பந் தசைஇ'' (பெரும்பாண். 331.333)*


கைப்பந்தாடும்(ஏன்ட்போல்) பெண்களைப்பற்றிப் புறநானூற்றிலும் கூறப்படுகின்றது.

*''வரிப்பனை பந்தோடு பாவைத்தூங்க'' (திருமுருகாற்றுப்படை 68)*
*''பந்தோடு பெயரும் பரிவி லாட்டி'' (நற்றிணை 140 6-7)*
*''பந்து நிலத்தி எறிந்து பாவை நீக்கி'' (நற்றிணை 17 9-2)*
*''பாலும் உண்ணால் பந்துடன்*
*விளையாடு ஆலயமொரு மேவார்'' (குறுந்தொகை 396 - 1 )*

எனக் குறிப்பிடப்படுகின்றன.

புராண காலந்தொட்டு திருமாலின் அவதாரமாகிய கண்ணன் (கிருஷ்ணன்) கோபியர்களுடன் வட்ட வடிவில் நின்று விளையாடியது பற்றி கூறப்படுகின்றன. அதன் வளர்ச்சியே இன்றைய கோ - கோ விளையாட்டு. இயற்கையாகவே இளஞ்சிறார்கள் '' ஒருவரை மற்றொருவர் துரத்திப் பிடித்து, விளையாடுவர். அதன் வளர்ச்சியுற்ற நிலையே கோ - கோ விளையாட்டு என்று வல்லுனர்கள் கருதுகின்றனர்.'' இன்று இந்தியா -ஆசியா என்று பரந்து பட்ட நிலையில் இவ்விளையாட்டு விளையாடப்பட்டாலும், தொடக்கம் காலத்தில் மராட்டிய மாநிலத்தில் தொடக்கப் பெற்று வந்துள்ளது. நற்றிணையில் மகளிர் கைப்பந்து, காற்பந்து விளையாட்டுகள் பற்றிக் (நற்றிணை 104, 324) குறிப்பிடப் பட்டுள்ளது.

## மணிவட்டு (ஆக்கி - Hockey)



மணிவட்டு உருண்டுகொண்டிருந்தது. அதனைக் குணிலால் அடித்தனர். அதனால் அந்த மணிவட்டு மேலும் வேகமாக உருண்டோடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் இந்த விளையாட்டைப் பற்றிச் சொல்லப்படும் செய்தி. குணில் என்பது நுனி வளைந்திருக்கும் தடி. துரத்தல் என்பது தட்டி ஓட்டுதல். வளைந்த தடியால் உருளும் பந்தை அடித்தனர். இது இக்கால ஹாக்கி விளையாட்டைப் போல அக்காலத்தில் ஆடப்பட்ட விளை யாட்டு.சேர மன்னர் இமயத்தில் வில் பொறித்த செய்தியை, ஆரிய மன்னர் இழிவுபடுத்திப் பேசிய செய்தியைக் கேட்ட செங்குட்டுவன் அவர்களுக்குப் பாடம் புகட்ட வடநாட்டின்மீது படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டிருந்தான். கண்ணகிக்குக் கல் இமயமலையிலிருந்து கொண்டுவரலாம் என்று கூறக் கேட்டதும் அவன் எண்ணத்துடிப்பு மேலும் வேகமாகப் பாய்ந்தது. இது உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரந்தாற் போல் வேகமாகச் சென்றது எனக் கூறப்பட்டுள்ளது

## வட்டுநா விளையாட்டு (Golfe)



வட்டைக் குணிலால் அடித்த குணில்வட்டு விளையாட்டைப் போல நாக்குப் போன்ற தடியால் வட்டை அடித்த விளையாட்டு நாவட்டு விளையாட்டு அல்லது வட்டுநா விளையாட்டு ஆகும். குணில் விளையாட்டில் மணிவட்டை அடித்தனர். இந்த விளையாட்டில் அரக்கினால் சிவப்புப் புள்ளிகள் வைக்கப்பட்டிருந்த வட்டை அடித்தனர். குணில் விளையாட்டில் அடிக்கும் கோலாகக் குணில் பயன் படுத்தப்பட்டது. இந்த விளையாட்டில் நாக்கு போன்ற தடி பயன்படுத்தப் பட்டது. இக்காலக் கோல்ப் விளையாட்டில் இதுபோன்ற தடி பயன்படுத்தப்படுகிறது. இது சங்ககால நாத்தடி விளையாட்டு ஆகும்.

*''வினை தலைப்படுத்தல் செல்லா நினைவுடன்*
*முளிந்த ஓனம் முதனைதயல் அம்காட்டு*
*பளிங்கத்து அன்ன பல்காய் நெல்லி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மோட்டு அரும்பாறை ஈட்டுவட்டு ஏறப்,*
*உதிர்வன படூஉம் கதிர் தெறு கவாஅன்*
*மாய்ந்த போல மழகு துணை தேற்றி''*
*(அகநானூறு பாலை 5 -(7-12))*

எனக் கூறப்படுகின்றது.

**மற்போர்** (wresling)





மற்போர் என்பது இரண்டு ஆட்கள் ஆயுதங்கள் இல்லாமல் ஈடுபடும் ஒருவகைப் போர் அல்லது தற்காப்புக் கலை ஆகும். இது உலகின் பல்வேறு சமூகங்களுக்கு இடையேயும் உள்ள ஒரு கலை வடிவம். இந்திய மரபிலும், தமிழர் மரபிலும் மற்போர் சிறப்புற்று இருந்தது. 'மல்:என்பதற்கு வலிமை, மற்றொழில், எனப் பொருள் வழங்குகின்றன இம் மற்போர் தமிழ் இலக்கியங்களில் 'மல்லாடல்' என வழங்கப் படுகின்றது. மற்போர் இன்று ஒரு விளையாட்டாக, அரங்கக் கலையாகப் பெரிதும் பயிலப்படுகிறது. இது ஓர் ஒலிம்பிக் விளையாட்டும் ஆகும். மல்லாடல் பிற்காலத்தில் குஸ்தி என்ற சொல்லாலும் குறிக்கப்படுகிறது. மற்போராளிகளைப் பயில்வான் என்றும் குறிப்பர். மற்போர் விளை யாட்டு நம்நாட்டில் நெடுங்காலமாகப் பயிலப்பட்டு வருகிறது. பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் மற்போரில் சிறந்தவனாக இருந்ததால் அவனுக்குச் சிறப்பு பெயராக மாமல்லன் என்ற பெயர் ஏற்பட்டது. அவன் பெயராலே மாமல்லபுரம் என்ற ஊர்ப் பெயர் ஏற்பட்டது.

புறநானூற்றில் மற்போர் புரிந்த மன்னன் எனப் புலவர் சாத்தந்தை யார் பாடியுள்ளார். (புறநானூறு 80) சோழன் போர்வைக் கோப்பெரு நற்றின்றி இவன் தித்தன் என்னும் சோழ மன்னன் மகன் (புறநானூறு)

*இன்கடுங் கள்ளின் ஆமூர் ஆங்கண்*
*மைந்துடை மல்லன் மதவலி முருக்கி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஒருகால் மார்பு ஒதுங்கின்றே! ஒருகால்*
*வரு தார் தாங்கிப் பின் ஒதுங் கின்றே !*
*நல்கினும் நல்கான் ஆயினும், வெல்போர்ப்*
*பொரல் அரம் தித்தன் காண்கதில் அம்ம!*
*பசித்துப் பணைமுயலும் யானை போல,*
*இருதலை ஒசிய எற்றிக்*
*களம்புகு மல்லன் கடந்து அடு நிலையே !''*

மல்லன் (மற்போர்வீரன்) ஆற்றலை அழித்துத் தன் ஒரு காலை அவன் மார்பிலும், மற்றொரு காலை முதுகுப்புறத்திலும் அழுத்தி வருந்தச் செய்தவன் பெருநற்கிள்ளி அவன். பசித்துச் செல்லும் யானை தன்முன்னே எதிர்ப்பட்ட மூங்கில் தண்டினை ஒடித்துத்தள்ளுவதைப் போல, களம்புகுந்து மல்லனைப் பெருநற்கின்னி வீழ்த்திய செயல் விளங்கிற்று எனக் கூறப்படுகின்றது.

**நாவாய்ப் போட்டி (படகோட்டப்போட்டி/ Boat competition / rowing)**




நாவாய் என்பது பொதுவாகக் கடற்கரை நாவாயியல் (Coastal Narvigation) வானவியல் நாவாயியல் (Astrononomical Navigation) மின்னணுக் கருவி நாவாயில் (Electronic Nativagation) என இன்று பகுத்துள்ளனர்.

கடற்கரை நாவாயியல் என்பது கடற்கரை நிலப்பகுதியில் உள்ள அடையாளங்களைக் கொண்டு கப்பலை வழிநடத்துவதாகும். நாவாய்ப் போட்டிகள் - அதாவது படகோட்டிப் போட்டிகள் படகு வலிக்கும் போட்டிகள் தற்போது காணப்படுகின்றன. நெடியோன் - பாண்டியனின் முந்நீர் விழாவில் வளி தொழில் நாவாய்ப் போட்டி பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

இக்கால விளையாட்டுக்கள் பலவற்றின் ஆரம்பம் சங்ககாலத்தில் காணப்பட்டுள்ளதைத் தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சங்க இலக்கியச் சான்றுகள் கொண்டு விளக்கவும் ஆராயவும் முடிகின்றது. இவ் ஆய்வு சங்கப் பாடல்களில் விளையாட்டுப் பற்றியதாக அமைந்தாலும், தமிழ் இலக்கியத்திற்கும் விளையாட்டுக்குமான ஓர் ஆய்வின் முன்னோடி ஆய்வாகவே இதனைக் கொள்ளமுடியும். எனவே, இத்துறை சார்ந்த ஆய்வுகள் ஆய்வாளர்களால் தொடர்ந்தும் ஆராயப்பட வேண்டும். அதற்கு ஒரு முன்னாய்வாக இதனைப் பயன்கொள்ளமுடியும்.

## உசாத்துணை நூல்கள்


1. தட்சிணாமூர்த்தி அ. (1994) தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ். வெளியீடு
2. தமிழ் நாட்டு வரலாறு சங்ககாலம் வாழ்வியல் (2000) தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்
3. செங்கைப் பொதுவன் (2010) சங்க இலக்கியங்களின் விளையாட்டுக்கலை உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டு சிறப்பு மலர். 2010 தமிழ்நாடு அரசு.
4. சங்க இலக்கிய வரலாறு மா. ரா. களஞ்சியம் iii (2010) தொகுப்பு சண்முகசுந்தரம், சென்னை,காவ்யா
5. சிவகாமசுந்தரி க. (1995) சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
6. வித்தியானந்தன்.சு. (1954) தமிழர் சால்பு. தமிழ் மன்றம் கண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

## தைப்பொங்கல் வழக்காற்றியல்

மலையக பாரம்பரிய கலாசார விழுமியங்களில் ஒன்றாக தைப்பொங் களும் மாட்டுப் பொங்கலும் காணப்படுகிறது. இலங்கையில் மாநகரங்களில் சிற்பந்திகளாகவும் வேறு துறைகளிலும் பணிபுரியும் மலையக ஆண்களும் ஆடை தொழிற்சாலைகளிலும் வர்த்தக நிலையங் களிலும், வீடுகளிலிலும் தொழிற்புரியும் மலையக பெண்களும் முன்கூடியே விடுமுறைகள் பெற்று தோட்டங்களில் ஒன்று கூடும் பண்டிகையாக இத் தைப்பொங்கல் விளங்குகின்றது.

தைப்பொங்கல் தமிழர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு தனிப்பெரும் விழா, தமிழர் திருநாளாக தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், மொரீசியஸ் என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலிலும் கொண்டாடப்படுகிறது.

தைப்பொங்கல் சூரியனுக்கு நன்றிசெலுத்தும் தினமாகவும் கொண்டாடப்படுகிறது. பயிர்களின் வளர்ச்சிக்கு மழையைத் தந்து வளம் தரும் சூரியபகவானுக்கு உழைப்பின் முதல் அறுவடையை பொங்கல் வைத்து படைத்து நன்றி கூறி வழிபட்டுவரும் மரபு தமிழர்களுக்கே உரித்தானதாகும். இதனை தொன்று தொட்டு எம்மக்கள் கடைப்பிடித்து வருவதனை நாம் அவதானிக்கலாம். பொங்கல் விழா நான்கு நாட்கள் அதாவது போகி, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என வெகு சிறப்பாக கொண்டாடப்படுவதுண்டு. இன்றைய தினம் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும். யாவரும் வாழ்வில் விழுமியங்களை அவ்வாறே கடைப்பிடித்து சிறந்த முறையில் இத் தைத்திருநாளைக் கொண்டாடி மகிழ்வோம்.

நன்றி தெரிவிக்கக் கொண்டாடும் இந்நன்றி திருவிழா மூன்று வகையாக நடைபெற்று வருகிறது. அவற்றுள் ஒன்று தைப்பொங்கல் விழாவுக்கு முதல்நாள் நடைபெறும் போகிப் பொங்கல் விழாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகி என்பவன் இந்திரன். அவன் மேகங்களை இயக்கி மழையை வழங்கும் இறைவனாக கருதப்பட்டான். தமிழ் நாட்டார் காலத்திலிருந்தே இந்திரனை விளை நிலங்களின் தெய்வமாக வைத்து வழிபட்டு வரலாயினர். சோழ வள நாட்டில் இவ்விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. இப்போகிப் பொங்கலுக்கு அடுத்து வருவது தைப்பொங்கல் பெருநாளாகும். இப்பெருநாள் மேற்குறிப்பிட்டபடி சூரியனை வழிபடும் நாளாகும். இப்பொங்கல் பெருநாளுக்கு அடுத்த நாள் நடைபெறுவது மாட்டுப்பொங்கல் திருநாளாகும். நாட்டுப் புறங்களில் இப்பொங்கல் மிகச்சிறப்பாக நடைபெறும். பண்டை காலத்தில் மாடே செல்வமாக கருதப்பட்டது. மாடு என்ற சொல்லுக்கு செல்வம் என்ற பொருளுமுண்டு.

மனித இனத்திற்கு உழைக்கும் மிருகங்களில் மாட்டுக்கு இணையாகச் சொல்லக் கூடிய எந்த மிருகமுமில்லை. விளை நிலத்தை உழுவதற்கு உதவுவது மாடு. களத்து நெல்லை களஞ்சியத்தில் சேர்க்க உதவுவது மாடு இன்னும் பாலும் தயிரும் நெய்யும் தந்து நம் உடலை பாதுகாக்க உதவுவது மாடு. அமைதியும் அன்பும் பொறுமையும் உடையது பசு. தன் கன்றுக்குரிய பாலைக் கவர்ந்து கொள்ளும் கல் நெஞ்சர்க்கும் ஒளிக்காது பாலை வழங்கி வரும் கருணை உடையது பசு. இப்படிக் கருணையுள்ள பசுக்களை ஆதரிக்க வேண்டும் என்பது தமிழர் கொள்கை.

வயல் நிலங்களில் கடுமையாக உழைக்கும் காளை மாடுகளும் காலையும் மாலையும் இனிய பாலை வழங்கும் கறவை மாடுகளும் நோயின்றி செழித்து வளர்வதற்காக நிகழ்ந்து வருவதே மாட்டுப் பொங்கலாகும். நன்றி மறவாமை என்ற மானிட நற்பண்பினை அன்று தொட்டு இன்று வரை நானில மக்களுக்கு எடுத்துக் காட்டும் தலை சிறந்த விழா தனிப்பெரும் பொங்கல் விழா. மலையக மக்கள் தமது வருமானத்தினைத் தரும் ஒன்றாக பசுமாடு வளர்ப்பினைக் கொண் டுள்ளனர். எனவே மாட்டினை குளிப்பாட்டி, மாலையிட்டு பொட்டிட்டு, மணி கட்டி, பலநிற கோழிச்சாயங்கள் மூலம் நிறமிட்டு, அலங்கரித்து பொங்கல் வைத்து படைத்து வழிபடுவதை காணக்கூடியதாகவுள்ளது.

ஒவ்வொரு சமயத்தினதும் அடிப்படைத் தத்துவமானது, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டது. அவ்வகையில் உழவர்களுக்கு நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தும் முகமாக கத்தோலிக்கர்களும், கிறிஸ்தவர்களும் தைப்பொங்கல் திருநாளை கொண்டாடுவதை யாழ்ப்பாணத்திலும், தமிழ் நாட்டிலும், மலையகத்திலும் ஏனைய சில பிரதேசங்களிலும் கண்கூடாகக் காண முடிகிறது. இந்தியாவில் தமிழ்நாடு, தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் ''மகர சங்கராந்தி'' எனும் பெயரில் பொங்கல் பண்டிகையைத் தமது கலாசாரத்திற்கேற்ற வகையில் கொண்டாடு கின்றனர். மலையகத்திலும் கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர் மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் கொண்டாடுகின்றனர். ஒரு காலத்தில் மலையக தோட்டங்களில் ஜல்லிக்கட்டு. சிலம்பாட்டம், கரகாட்டம், போன்ற போட்டிகளையும் பொங்கல் காலத்தில் நடாத்தினர். இது தற்போது மாறி கரப்பந்தாட்டம், கிரிக்கட், கபடி, காற்பந்தாட்டம், பட்டமிடுதல் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது.

உழவர்களினது உழவுத் தொழிலினதும் மகத்துவத்தை உணர்த்த வள்ளுவர் எந்தத் தொழிலுக்கும் கொடுக்காத முன்னுரிமையைக் கொடுத்து திருக்குறளில் பத்துக் குறள்களை உழவுத் தொழிலுக்காக செதுக்கியிருக்கிறார்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்.''

என உழவுத் தொழில் செய்து வாழ்பவர்களே உயர்வான வாழ்க்கை வாழ்கின்றனர் என்றும் மற்றவர்களெல்லாம் உழவர்களைத் தொழ வேண்டும் என்றும் மொழிகின்றார்.

பொங்கல் பண்டிகை, இந்துக்களுக்கேயுரியது என்ற குறுகிய வட்டத்திலிருந்து நாம் வெயியே வந்து நாம் தங்கியிருக்கும் இயற்கைக்கும் சக மனிதராகிய உழவருக்கும் நன்றி செலுத்தும் வகையில் பொங்கலை கொண்டாட வேண்டும். தைப்பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கிணங்க, அர்த்தமற்ற சம்பிரதாயங்களினால் இனியும் கண்டிருக்காமல், புதியதோர் உலகம் சமையவழி செய்வோம்!. உபசரித்தல், நன்றியளித்தல் என்பன தமிழ் மக்களின் பண்பாட்டை விளக்கும் காரணிகளில் முதன்மையானவை. அந்த வகையில் எமக்கு உணவளிக்கின்ற நாம் உயிர் வாழக்காரணமான சூரியனுக்கு நன்றி தெரிவிக்கவே தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ் கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# கண்டி எசல பெரகராவும் உபயோகத்திலுள்ள தமிழ் சொற்பதங்களும் – ஓர் ஆய்வு கண்ணோட்டம்

கண்டி வரலாற்று புகழ்மிக்க எசல பெரகராவில் காணப்படும் ''தமிழ் சொற்பதங்கள்'' தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெரகராவிற்கும் உள்ள தொடர்பினை பறைசாற்றி நிற்கிறது.

இத் தமிழ் சொற்கள் கலப்பிற்கு பல காரணங்கள் இருக்கலாம். இந்திய தமிழ் நாட்டுடனான தொடர்பு கண்டி இராச்சிய மன்னர் காலம் தொட்டு, இந்திய அரச குடும்பங்களில் பெண் எடுக்கும் வழமை கண்டி இராச்சியத்தினை தமிழ் நாயகர்கள் ஆட்சி செய்தமை நாயகர் களோடும், அதற்கு முன்னரும் கண்டியில் தமிழர்கள் குடியிருந்தமை, தமிழ் நாட்டின் ஆடித்திருவிழாவாக கண்டியில் எசல பெரகரா அறிமுகப்படுத்தப்பட்ட வரலாறு, மன்னர் காலத்து தமிழர் நிர்வாகம், திராவிட மொழிகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளின் கலப்பு சிங்கள மொழிகளில் காணப்படுவது போன்றன தமிழ் சொற்பாவனைக்கு காரணமாக இருக்கலாம்.

இதுவே, கண்டி எசல பெரகராவுடன் சைவம் மற்றும் தமிழர்களது கலாசார நிகழ்வுகள் இரண்டரக் கலந்துள்ளதுடன் இது இலங்கையின் இன ஒற்றுமைக்கும், மத ஒற்றுமைக்கும் சான்று பகிர்வதாக அமைந்துள்ளன.

பெரகரா என்ற சொல் பிரகாரம் என்னும் தமிழ் சொல்லின் மருவிய சொல்லாகும். பிரகாரம் என்பது ''சுற்றி வருதல்'' சுற்று பிரகாரம் என்பதாகும். இது கோயிலைச் சுற்றி வருதல் என்ற சொல் லாகும். கோயில்களைச் சுற்றியே பெரகரா ஊர்வலம் நடந்துள்ளன. பிரகாரம் - பெரகார ஆக மாறி பெரகரா ஆயிற்று. இந்த ஊர்வலமானது கஜபாகு மன்னர் காலத்தில் ஆடி மாத பூரணையில் நடைபெறுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடி மாதமே சிங்களத்தில் எசல மாதமாகும், தற்போது எசல பெரகரா என அழைக்கப்படுகிறது.

தலதா மாளிகையின் எண்கோண மண்டபம் ''பத்திரிப்பு'' என அழைக்கப்படுகிறது. இது மன்னர் மக்களை பார்த்து இருந்த இடம் ''பார்த்து இருத்தல்'' பாத்திருப்பு பின்னர் பத்திரிப்புவாக மாறியுள்ளது. அக்காலத்தில் ''மாமலுவ'' என்பது தலதா மாளிகைக்கு முன்பான மைதானமாகும். இதில் மக்கள் ஒன்று கூடுவர். மன்னரைப் பார்த்து வணங்குவர். மன்னர் பார்த்திருப்பு பகுதியில் நின்று உரையாற்றுவார். பரிசுகள் வழங்குவார். தண்டனைகளும் வழங்குவார்.

பெரகரா ஆரம்பிக்கும் போது நமது இந்து கோயில்களில் ''காப்பு கட்டுதல்'' போல இங்கும் ''காப்பு கட்டுதல்'' நடைபெறுகின்றது. இது மருவி கப் நாட்டல் என சிங்களத்தில் அழைக்கப்படுகிறது. இதன் போது பால் மரக்கன்று கிளை ஒன்று நாட்டப்படுகிறது. இந்துக்களில் திருமண வைபவங்களில் முள் முருங்கக் கிளை நாட்டப்படுவது போன்றதாகும்.

இந்துக்களின் நேர்த்திக்கடன் போலவே தலதா மாளிகை மற்றும் தேவாலயக் காணிகளிலுள்ளோரும் தமது ''இராஜகாரிய'' என காணிகளை வழங்கிய இராஜவுக்கு வேலை செய்வதாக கருதி இராஜ கர்மம் அல்லது அரச கர்மமாக நினைத்து தமக்கு காணி வழங்கிய தலதா மாளிகைக்கும் தேவாலயங்களுக்கும் நேர்த்திக்கடனான நடனம், மற்றும் மேளக் கலைஞர்களாக பரம்பரை பரம்பரையாக கலந்து கொள்கின்றனர். இந்த ''இராஜகாரியம்'' என்பதே சிங்களத்தில் இராஜகாரிய என்றழைக்கப்படுகிறது. இவர்களுக்கு உபகாரம் வழங்கப்படும் இவ் ''உபகாரம்'' என்ற தமிழ் சொல் ''உபகார'' என்று சிங்களத்தில் உபயோகிக்கப்படுகிறது.

''ய'' என்ற எழுத்தும் ''ம'' என்ற எழுத்தும் பல தமிழ் சொற் களோடு இறுதியில் கலந்து சிங்கள சொற்பதமாக மாறியுள்ளதை இங்கு பல சிங்கள சொற்களில் அவதானிக்கலாம். பெரகராவில் முன்னால் '' கசை'' அடிக்கப்படுகிறது. இந்த தமிழ் சொல் அப்படியே சிங்களத்தில் ''கசை'' என பாவிக்கப்படுகிறது. இதனை அடிப்பவர்களை கசகார்கள் என்பதற்கு பதிலாக ''கச காரயோ'' என்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரகரா ஊர்வலம் இரவில் செல்வதால் வெளிச்சத்திற்காக வருசையாக நெய்ப்பந்தம் பிடிக்கப்படுகிறது. இந்த ''பந்தம்'' என்ற சொல் சிங்களத்திலும் அதே அர்த்தத்தில் பாவிக்கப்படுகிறது. ''ம்'' இல்லாமல் பந்தம என பாவிக்கப்படுகிறது.

பெரகராவில் ''காவடி'' ஆடப்படுகிறது. ''காவடி'' என்பது தமிழ் சொல் இந்த சொல் சிங்களத்திலும் ''காவடி'' என்றே பாவிக்கப்படுகிறது.

இந்துக்களதும், தமிழர்களதும் கலாசார நிகழ்வுகளில் முக்கிய அம்சமாக நாதஸ்வரம், தவில் மேளம் வாசிக்கப்படுகிறது. இதன் மூலம் இந்து, தமிழ் கலாசாரம் பிரதிபலிக்கின்றது. ''நாதஸ்வர'' என்று சிங்களத்திலும், மேளம அல்லது ''மோளம'' என சிங்களத்திலும் அழைக்கப்படுகிறது. காவடி , கரகாட்டத்தோடு பிற மேளங்களின் ஒன்றான தப்பு, கிளர்னட் மேளம் அடித்து ஆடப்படுகின்றது. இது இந்திய தோட்டத் தொழிலாளர்களினால் இலங்கைக்கு அறிமுகப் படுத்தப்பட்ட மேளமாகும். இது பர என்பதற்கு ''பெர'' என சிங்களத் தில் அழைக்கப்படுகிறது. இவை தவிர மயிலாட்டம், புலியாட்டம் கோலாட்டம், தப்பாட்டம், கரகாட்டம் போன்ற தமிழ் கலாசார நிகழ்வு களும் பெரகரா ஊர்வலத்தில் காணக்கூடியதாகவுள்ளது. இதில் ''வேல்'' தூக்கி ஆடுகின்றனர். சிங்களத்திலும் வேல் என்றே அழைக் கின்றனர். வேல் யானைகளின் மேல் எடுத்துச் செல்லப்படுவதோடு கதிரேசன் கோயில் பெரகராவில் அங்கு பூசை செய்யும் பிராமண வேல், நாதஸ்வர மேளத்துடன் செல்கிறார். ''கரகம்'' சிங்களத்தில் ''கலய'' என அழைக்கப்படுகிறது.

இப் பெரகராவில் தலதா மாளிகையுடன் நான்கு தேவாலயங்களான நாத்த, விஷ்ணு, கதிரேசன், பத்தினி தேவாலய பெரகரா இடம் பெறுகிறது. இங்கு புத்த பெருமானின் புனித பல் புனித தந்தம் வைத்திருப்பதால் ''தந்த தாது'' என சிங்களத்திலும் அது மறுவி தலதா என்றுத் தமிழ் சொற்பதமானது. மேலும், ''மாளிகை'' என்பது ''மாளிகாவ'' எனவும் அழைக்கப்படுகிறது. நாதர் கோயில் நாதர் முடிமேல் இருக்கும் நல்லப்பாம்மே என நாம் கூறுவது போல நாத்த என்றும் ''நாக'' என்றும் அழைக்கின்றனர். நாத்தீஸ்வரன் கடவுளுக்கு பதிலாக நாத்தீஸ்வர என அழைக்கின்றனர். ''விஷ்ணு'' என்ற சொற் பதமும் பத்தினி என்ற சொற்பதமும் தமிழிழும் பாவிக்கப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே சிங்களத்திலும் பாவிக்கப்படுகிறது.. ''தேவாலயம்'' என்ற சொற்பதம் தமிழிலும் உள்ளது. இக் கோயில்கள் சிங்களத்தில் தேவாலய என அழைக்கப்படுகிறது. நாத்த தேவாலய, விஷ்ணு தேவாலய கதரகம தேவாலய, பத்தினி தேவாலய என்றே அழைக்கின்றனர். தேவாலயம் என்பதும் தமிழ்ச் சொற்பதமாகும்.

கதிர்காமம் தேவாலயம் என்பது முருகன் கோயில். முருகனை நாம் தமிழ் கடவுள் என்கின்றோம். இது சிங்களத்தில் கதரகம என அழைக்கப்படுகிறது. ஆனால் கோயிலுக்குள்ளே தெய்வம் ஒன்றுதான். முருகனின் வேல் வைத்து ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழரின் சைவசமய முறைப்படி இறுதிநாள் பெரகராவில் நீர் வெட்டல் இடம்பெறுகிறது. இந்த நீர் வெட்டலில் புனித நீர் கலசத்தில் எடுத்து வரப்பட்டு கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் கோயிலில் பூசைக்கு வைக்கப் பட்டு கலசங்கள் பூசை செய்யப்பட்டு பகல் பெரகராவாக ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு இந்த தோவாலயங்களில் வைப்பு செய்யப்படு கின்றன. இதன் மூலம் கண்டி செல்வ விநாயகர் கோயிலிலும் பெரகராவில் ஒரு அங்கமாகவுள்ளது. கோயில் பூசை முடிந்து கலைஞர் களுக்கு விபூதி, சந்தனம், குங்குமம் இடப்பட்டு பெரகரா ஊர்வலத்தில் செல்கின்றனர். இதன் மூலம் இந்துக்களினது அடையாளம் ஏற்று கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

பொட்டு வைத்தலை ''பொட்டுவ'' என்கின்றனர். ''பூசை'' அல்லது ''பூஜை'' செய்வதை ''பூஜாவ'' என்கின்றனர் தண்ணீர் கலசத்தினை ''கலய'' ''கலேய'' ''கலசம'' என்கின்றனர். பகல் என்பதற்கு தவல் என அழைக்கப்படுகின்றது. பிள்ளையார் கோயில் என்பதற்கு ''கோவில'' என்கின்றனர். பிள்ளையாருக்கு ''புள்ளையார்'' எனவும் செல்வ விநாயகருக்கு ''செல்வ விநாயக்க'' என்றும் அழைக்கின்றனர்.

மயில் ''வாகனம்'' பெரகராவில் கொண்ட செல்லப்படுகிறது. இதில் வாகனம் என்பதற்கு ''வாகன'' என்கின்றனர்.

பெரகராவுடன் இணைத்து பாவிக்கப்படும் சொற்களில் கங்காணி அல்லது ''கண்காணி'' என்ற சொல் தமிழ் சொல். இது ''கண்கனரால'' என்றும் கொடி அதாவது சேவல் கொடி, மயில் கொடி, இராவணா கொடி, சிங்க கொடி என பல கொடிகள் பெரகரா ஊர்வலத்தில் கொண்டு சுமக்கின்றனர். இதில் ''கொடிக்கு'' ''கொடிய'' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் ''இராவணா கொடிய'' என்ற சொல்லும் பாவனையில் உள்ளது. ''சிங்கம் என்பதை சிங்க என்கின்றனர். பெரகரா ஊர்வலத்தில் மன்னர் உடை அணிந்து மன்னர் போல தியவதன நிலமே மண்டபத்தி லிருந்து ஊர்வலத்திற்கு செல்கிறார். சிங்களவர்களால் இது ''மண்டபய'' என்று அழைக்கப்படுகிறது. அதிகாரமுடைய அதிகாரிகள் புடை சூழ வருவார்கள். இவர்களை சிங்களத்திலும் ''அதிகாரி'' என அழைப்பர். இவர்களோடு பெரகராவில் கலந்து கொள்ளும் பஸ்நாயக்க நிலமேக்கள் தேவாலய தெய்வங்களை வழிபட்டு, ஊர்வலத்தில் கலந்து கொள் கின்றனர். தெய்வத்தை ''தெவியோ'' என ''தெய்யோ'' அழைக்கின்றனர். நில உடைமையாளர்களே நிலமே என அழைக்கப்படுகிறார்கள். இந்நிலமேக்களின் நிலத்திலேயே மற்றவர்கள் வாழ்கின்றனர்.

பெரகரா ஊர்வலத்தில் முதல் யானையில் பொகரா செல்லும் வழி சொல்லும் சாசனம் கொண்டு செல்லப்படுகிறது. இது சிங்களத்தில் ''சாசன'' என்று சன்னஸ என்றும் அழைக்கப்படுகிறது. யானை மேலிருந்து தட்டுகளில் மல்லிகை பூக்களை வைத்து அம்பாரி கட்டிய யானை மீதுள்ள தண்டாயுதத்திற்கு மலர்தூவுகின்றனர். இதில் தட்டு என்பதற்கு ''தட்டுவ'' எனவும் ''மலர்களுக்கு மல'' எனவும் அழைக்கப் படுகிறது. பூவின் ''மொட்டு'' சிங்களத்திலும் ''மொட்டு'' என்றே அழைக்கப்படுகிறது.

பெரகராவில் பங்குபற்றும் பௌத்த குருமாருக்கு தானம் வழங்கப் படுகிறது. இதனை ''தான'' என அழைக்கின்றனர். இக் கலைஞர்களின் நிபுணத்துவத்தினைப் பாராட்டி பரிசுகள் வழங்கப்படுகிறது. இதனை ''நிபுணத்வய'' என சிங்களத்தில் அழைக்கின்றனர்.

புனித தந்த பேழை தலதாமாளிகை யானையால் சுமந்து செல்லப் படும் போது பாவாடை விரிக்கப்பட்டு புனித தந்தத்தின் பேழைக்கு மரியாதை செலுத்தப்படுகிறது. இந்த ''பாவாடை'' விரிப்பு என்ற சொல் சிங்களத்திலும் பாவாடையென்றே பாவிக்கப்படுகிறது, மயில் தோகை விரித்து செல்கிறது. இதில் சிங்களத்திலும் ''தோகை'' என்றே அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரகரா ஊர்வலத்தில் யானைகள் மீது சுவடிகள் கொண்டு செல்லப்படுகிறது. இது சிங்களத்திலும் சுவடி என்றே அழைக்கப்படுகிறது.

பெரகராவில் பிராமணர் வர்ணமாலை அணிந்து செல்வதும் யானைகள் ''வர்ண'' உடை அணிந்து செல்வதையும் காணகூடிய தாகவுள்ளது. இதில் சிங்களத்திலும் ''வர்ண'' என்ற சொற்பதமே உபயோகத்திலுள்ளது.

பெரகரா ஊர்வலத்தில் இறுதியில் ''பள்ளாக்கு'' தூக்கி செல்லப் படுகிறது. இதில் நீர் வெட்டு கலசங்கள் கொண்டு செல்லப்படுகிறது. சிங்களத்திலும் ''பள்ளாக்கு'' என்பதே அழைக்கப்படுகிறது.

''விளக்கு'' பற்ற வைத்தல் மூலம் வழிபாடுகள் தொடங்குகிறது. சிங்களத்திலும் விளக்கு என்ற சொல் பாவனையிலுள்ளது.

''பணிவிடை'' என்ற தமிழ் வசனமும் சிங்களத்திலுண்டு. ''வளவு'' என்ற சொல் தமிழில் உள்ளது. இது சிங்களத்தில் ''வலவ்வ'' என கூறப்படுகிறது. பெரகரா முடிந்த பின் பெரகராவிற்கு உபயோகிக்கும் பொருட்கள் ''பெட்டகத்தில்'' வைக்கப்படுகின்றன. சிங்களத்திலும் ''பெட்டகம்'' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

பெரகரா ஆரம்பிக்கும் போது அறிவிப்பதற்காக ''வெடி'' போடப்படுகிறது. இதுவும் சிங்களத்தில் ''வெடி'' என்றே கூறப்படுகிறது. நடனமாடுவோர், நிலமேக்கல், அதிகாரிகள், ''தொப்பி'' அணிகின்றனர். சிங்களத்திலும் ''தொப்பி'' என்றே கூறப்படுகிறது. கொப்பரா இட்டு பந்தம் கொளுத்தப்படுகிறது. இந்த கொப்பரா ''பொட்டனிகளில்'' சுமந்து வரப்படும். சிங்களத்திலும் பொட்டனி என்றே உபயோகிக்கப் படுகிறது.

ஆட்ட கலைஞர்கள் ''தோடு'' அணிகின்றனர். சிங்களத்திலும் ''தோடு'' என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அது போலவே ''பதக்கம்'' அணிவதையும் ''பதக்கம'' என்ற சொல் சிங்களத்திலும் உள்ளது.

எனவே, இச்சொற்பதங்களை நோக்கும்போது தமிழ் சொற்கலப்பு அல்லது தமிழர்களுக்கும் பெரகராவிற்குமான தொடர்பு வெளிப் படையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இன ஒற்றுமைக்கும், மத ஒற்றுமைக்கும் காரணமாக விளங்குவது வரலாற்று புகழ் மிக்க வருடாந்த கண்டி எசல பெரகரா. இது பௌத்தத்திற்கும், தமிழுக்கும் அது போல பௌத்தத்திற்கும் சைவ மதத்திற்கும் நீண்ட வரலாற்று தொடர்புகள் உள்ளன என்பதை பறைசாற்றி நிற்கின்றன.

## உசாத்துணை நூல்கள்

Dammaratana Hisselle Thero (1963) Tamil influence on Sinhalese language

Gunasena, R. M. D., (1981)."The Kandy Esala Perahara Aluwihare', Colombo,

Seneviratne,Anuradha. (1978) ""The kandy Asala Perahara"" Ceylon Tourist Board, Colombo,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# கண்டி எசல பெரகராவும் நான்கு தேவாலயங்களுக்கும் இடையிலான தொடர்புகளும்

கண்டி நகரின் வரலாற்றுப் புகழ்மிக்க எசலபெரகராவிற்கும் எமது தமிழ் இதிகாசங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன. இராமயணத்திற்கும் பெரகராவிற்குமான தொடர்பு, விஷ்ணுவுக்கும் மற்றும் சிலப்பதிகாரத்திற்கும் பெரகராவுடனான தொடர்பு, கந்த புராணத்திற்கும் பெரகராவிற்குமிடையிலான தொடர்பு, போதிசத்வர் வரலாற்றிற்கும் பெரகராவிற்குமான தொடர்பு (புத்தபெருமானின் 550 ஜாதகக் கதைகளில் குறிப்பிடுவர்) என்பன தொடர்பாக ஆய்வு செய்யப்படும் போது இராமர், விஷ்ணு, கண்ணகி, முருகன் மற்றும் போதிசத்வர் ஆகியோருடன் இப் பெரகரா கொண்டுள்ள தொடர்புகள் வெளிப்படுகின்றன.

இந்து சமயம், வைணவம், சைவம், சாக்தம், கணாபத்தியம், கௌமாரம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியது. வைணவர் ராமர், இந்திரன், விஷ்ணு, வருணன், திருமால், பெருமாள், கண்ணன், நரசிம்மன், நாராயணன், வாசுதேவர், மகாவிஷ்ணு போன்ற நாமங்களில் வைணவ தெய்வத்தை வணங்கி வருகின்றனர்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான தொடர்புகள் கலாசார ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் அமைந்ததன் காரணமாக தென் இந்திய திராவிடர்களின் சைவசமயமும், ஆரியர்களது வைணவ சமயமும் இலங்கையிலும் பரவியது. இதில் வைணவம் சைவத்துடனும், பௌத்தத்துடனும் இணைந்தே காணப்படுகிறது. எனினும் இலங்கையில் சைவ சமயம் பரவிய அளவுக்கு வைணவம் பரவவில்லை. இலங்கையில் சைவர்களிடையே பெருமாள் வழிபாடு, திருமால் வழிபாடு, வல்லிப்புரத்தாழ்வார் வழிபாடு, கிருஷ்ண வழிபாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் நரசிம்ம வழிபாடுக்கான கோயில்கள் காணப்படுகின்றன. இவை சைவ சமயத்தவர்களிடையே போற்றி வழிபடப்படுகின்றன.

அதே சமயம் பௌத்த சிங்களவர்களிடமும் விஷ்ணு வழிபாடு பிரசித்த பெற்றது. இந்திரன், வருணன், மாயோன், சேயோன் வழிபாடுகளும் சிங்கள பௌத்தர்களிடம் சிறப்பாகவுள்ளது. இவர்கள் சமன் தெய்யோ என வழிபடுவதை நாம் காணலாம். இது இந்திர வழிபாடாகும். இந்திரனே சமன், வருண என பௌத்தத்தில் வழிபடுகிறார்கள். இதே போலவே இலங்கை மன்னர்கள் இந்திய நாட்டுடனான திருமண தொடர்புகளினால் பாண்டி நாட்டிலும், கலிங்க தேசத்திலும், உள்ள இளவரசிகளைத் திருமணம் செய்ததன் காரணமாக விஷ்ணு வழிபாடும் இலங்கையில் பரவ காரணமாயிற்று.

கண்டி பெரகராவில் மூன்றாவதாக விஷ்ணு தேவாலய பெரகரா ஊர்வலம் செல்கிறது. விஷ்ணு கோயிலை ''மகா'' தேவாலய என்றே அழைக்கின்றனர். கண்டி எசல பெரகரா ஆரம்ப நிகழ்வான கப் நாட்டல் (சைவ சமயத்தில் திருவிழாவிற்கு முன்னர் காப்பு கட்டுதல்) வைபவத்தை மகா விஷ்ணு தேவாலயத்திலேயே நடத்துகின்றனர். தேவாலயங்களில் தலைமை தேவாலயமாக விஷ்ணு தேவாலயம் கருதப்படுகிறது.

இந்தியாவில் குப்தர் ஆட்சி காலத்தில் வைணவ சமயமே ஆளும் வர்க்கத்தின் சமயமாக இருந்துள்ளது. மன்னன் மகாசேனனின் (கி.பி. 274-301) புதல்வனும் 4ம் நூற்றாண்டின் மன்னனுமான கீர்த்தி ஸ்ரீ மெஹாவன (301-328) இந்திய கலிங்க நாட்டு மன்னன் சமுத்ர குப்தருடன் கொண்டிருந்த நட்பின் காரணமாகவே புனித தந்தம் இலங்கைக்கு வழங்கப்பட்டது. இக்காலந்தொட்டே கலிங்கத்துடனான உறவு வலுவாக இருந்திருக்கிறது. இதன் காரணமாகவே விஷ்னு வழிபாடு இலங்கையில் பரவ முடிந்தது. இலங்கையை சம்பந்தப் படுத்தும் இதிகாசங்களை எடுத்துக்கொண்டால் இராவணனை அழித்த இராமரின் கதையே இராமாயணம். ஒரு அசுரனை அழித்தவர் என்ற காரணத்தினால் இராமரை தெய்வமாகவே கருதுகின்றனர். மகா விஷ்ணுவே இராமராக அவதரித்தார் என்பது இந்துக்களின் நம்பிக்கை இது வழக்காற்றியல். இலங்கையை நாற்புறமும் கடல் சூழ்ந்துள்ளதால் சமுத்திர தெய்வமாக வருணனை வழிபடப்படுகிறார்கள். இவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமன், சுமன சமன், கிருஷ்ண (விஷ்ணு) அவதாரமாகவே நினைத்து வணங்குகின்றார்கள். எனவே எசலபெரகராவிலும் விஷ்ணு ஆலய ஊர்வலமும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. இந்த விஷ்ணு தேவாலயத் தினை சிங்கள நூல்களில் தேவேந்திர தேவாலய அளுத்நுவர தேவாலய, ராம தேவாலய என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோழ மன்னர்களை வென்ற கஜபாகு கண்டியில் விஷ்ணு கோயிலை மீள் கட்டுவித்ததாகவும் பெரகராவில் முக்கிய பங்கினை ஏற்கச் செய்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன. இதேபோன்று விஷ்ணு தேவாலயங்கள் கேகாலை மாவட்டத்தில் அலுத்நுவரவிலும், தெவுந்தரவிலும், கடலாதெனிய, லங்காதிலக்க ஆகியவற்றிலும் உள்ளன. இவை பஸ்நாயக்க நிலமேமார்களினால் நிர்வகிக்கப்படுகிறது. இவர்கள் பெரகரா ஊர்வலத்திலும் பங்குபற்றுகின்றனர். கண்டி விஷ்ணு தேவாலய பஸ்நாயக்க நிலமே தெரிவில் மேற்கூறப்பட்ட விஷ்ணு தேவாலயங்களுக்கும் வாக்குகள் உண்டு. விஷ்ணுவின் நிறம் நீலம் எனவே கண்டி எசல பெரகராவில் விஷ்ணு தேவாலய கெரகரா விஷ்ணுவின் நிறமான நீலவர்ண மின்குமிழ் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. ''பௌத்த போதி'' சத்துவர் நம்பிக்கை வழக்காற்றின்படி விஷ்ணுவும் ஒரு புத்த அவதாரமாகவே கருதப்படுகிறது. கண்டி எசல பெரகராவில் நான்காவதாக கதிரேசன் தேவாலய பெரகரா ஊர்வலமாக செல்கிறது. கதிரேசன் என்றால் கார்த்திகை மாத குமரன் என்பது பொருள். கார்த்திகேயன், குமரன், முருகன், கந்தன், வேலன், ஆறுமுகன், சுப்பிரமணியன் என இந்துக்களினால் அழைக்கப்படும் வேலனை கதரகம தேவியோ,குமார, விசாக, மகாசேன என்ற சிங்களவர்கள் வழிபடுகின்றனர். முருகன் இலங்கையில் கதிர்காமத்தில் வேடர் இனத்தைச் சேர்ந்த வள்ளி என்ற பெண்ணை மணந்தார் என்பது வழக்காற்றியல் வழமை. முருகனை மகா கதரகம என பௌத்தர்கள் வழிபடுகின்றனர். நாயக்கர் ஆட்சி காலத்தில் இராஜசிங்கன் வம்சம் நாட்டை ஆளுபவர் பௌத்தராக இருக்க வேண்டும் என்பதற்காகவும், புனித தந்தத்தின் காவலர் என்பதாலும் பௌத்த மதத்தை தழுவி வழிபட்டனர். எனினும் அவர்களது இந்திய அரசியர் இந்துக்களாகவே இருந்தனர். இவர்கள் முருக பக்தர்களாகவும் இருந்துள்ளனர். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னரும், இராணியும் ஒன்றாக சென்று வழிபடக்கூடியதாக பௌத்த மும் முருக வழிபாடும் ஒன்றிணைந்ததாக கண்டி கதிரேசன் கோயில் அமைந்தது.

நாயக்க மன்னர் காலத்திற்கு முன்னரே கதிரேசன் கோவில் அமைந்திருந்த போதிலும் இக்கோவிலை நாயக்க மன்னர்கள் புனரமைத்து வழிபட்டனர். கதிரேசன் பெரகராவில் முருகனுக்கு பிடித்த காவடியும் ஆடப்படுகிறது. முருகனின் சேவற்கொடி, மயில் கொடிகள் ஊர்வலத்தில் கொண்டு செல்லப்படுகின்றன.

இலங்கையிலும் இந்தியாவிலும் சங்ககாலந்தொட்டே முருக வழிபாடு சிறப்பு பெற்று விளங்கியுள்ளது. சிங்கள மக்கள் பௌத்த மதத்தவராக விளங்கிய போதும் முருகனை வழிபட்டு வந்தமைக்கு வரலாற்று சான்றுகள் உண்டு. விஜயன் கதிர்காம கோயிலை கட்டியதாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. துட்டகாமினி எல்லாளனை தோற்கடிப்பதற்காக கதிர்காம கந்தனுக்கு நேர்த்தி வைத்ததாகவும், வெற்றி பெற்றதன் பின் கதிர்காம ஆலயத்தை அமைத்ததாகவும் ''கந்த உபாத'' கூறுகிறது. எனவே சிங்கள மக்களிடையே காணப்பட்ட முருக வழிபாடு கண்டியிலும் பிரசித்து பெற்றிருந்ததில் ஆச்சரியமில்லை.

பெரகராவில் புத்த தந்த பவனி சேர்க்கப்படு முன் கதிர்காம கடவுளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டு வந்த்தாக பெரகரா வரலாறு கூறுகிறது. பெரகராவில் விஷ்ணுவும் கதரகம தெய்யோவும் (கண்டி கதிர்காம கந்தன்) பத்தினி தெய்வமும் ஊர்வலமாக சென்றதாக ரொபட் நொக்ஸ் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். ரொபட் நொக்ஸ் நூல் பிந்திய காலத்தைச் சேர்ந்தது. ஆனால் அவர் இலங்கையில் கைதியாக இருந்த போது கேட்டவற்றையே இதில் குறிப்பிட்டுள்ளார்.

1753 காலப்பகுதியில் தலதா மாளிகை அமைக்கப்பட்டது. ஆனால் ஆடி மாதப்பருவத்தில் பெரகரா என்ற ஊர்வலம் நான்கு தேவாலயங் களின் ஊர்வலமாக அப்போது இடம்பெற்று வந்திருக்கிறது. தலதா மாளிகை அமைக்கப்பட்ட பின்னர் மன்னர் நரேந்திர சிங்கனை அணுகிய சரணாங்கர தேரர் புனிதத் தந்தத்தினை ஊர்வலத்தில் சேர்க்க வேண்டும் எனவும் முதல் பெரகராவாக தலதா ஊர்வலமும் நான்கு தேவாலய ஊர்வலங்கள் அதைத் தொடர வேண்டும் எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோள் விடுத்தார். மன்னர் இதை ஏற்றார். தலதா மாளிகையும் பெரகராவில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

கண்டி எசல பெரகராவில் ஐந்தாவதாக பத்தினி தேவாலய பெரகரா ஊர்வலமாக செல்கின்றது. கண்ணகி அம்மன் குழந்தையாக பேழையில் மிதந்து வந்த போது மாநாயக்கன செட்டியார் எடுத்து கண்ணகி என்ற பெயரிட்டு வளர்த்து கோவலனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாகவும் கோவலனுக்கும் மாதவி என்ற கணிகையுடன் தொடர்பு ஏற்பட்டதால் தனது செல்வங்களை எல்லாம் இழந்து பின்னர் கண்ணகியிடம் தஞ்சமடைந்து வாணிக நோக்கமுடன் மதுரை சென்ற தாகவும், காற் சிலம்பை விற்க சென்ற போது பாண்டிய மன்னனால் கள்வனென கருதப்பட்டு கோவலன் கொல்லப்பட்டதாகவும் நீதி கேட்டு கண்ணகி விரித்த கூந்தலுடன் மன்னனை சந்தித்து மற்றைய கால் சிலம்பை திருகி எறிந்து, அது தனது கால் சிலம்பு என நிரூபித்ததாகவும் கோபத்தில் மதுரையை எரித்தபின் மலையேறி மறைந்ததாகவும் அதனை செங்குன்றக் குரவர்கள் கண்டதாகவும் சிலப்பதிகாரம் சொல்கிறது. கண்ணகியின் பெருமையை உணர்ந்து செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை செய்தான் எனவும் சிலை பிரதிஷ்டை செய்தபோது இலங்கை மன்னன் கஜபாகு இவ் விழாவில் கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது. கஜபாகு மன்னன் தென்னிந்தியாவில் இருந்து திரும்பிய போது சந்தன மரத்திலான கண்ணகி சிலையையும் காற் சிலம்பையும் இலங்கைக்குக் கொண்டு வந்தான் எனவும் வடபுல கடற்கரையில் இறங்கிய மன்னன் யானை மீது ஊர்வலமாக கண்டிவரை சிலையைக் கொண்டு சென்று கண்டி ஆலயத்தில் வைத்து வழிபட்டான் எனவும் கூறப்படுகிறது. இதனை கடல்சூழ இலங்கை கயபாகு வேந்தனும் (வரந்தரு காதை (160 -164) எனும் பாடல் மூலம் அறியலாம்.

கஜபாகு மன்னரே இலங்கையில் கண்ணகி வழிபாடு பரவ காரணமானவர். கண்ணகியே பின்னர் பத்தினி தேவாலயமாக பௌத்தர்களால் அறியப்பட்டது. இந்த பத்தினி ஆலயத்தின் எசல பெரகரா ஊர்வலத்தில் பெண்களின் நடனம் நிகழ்ச்சிகளை அதிகம் காணக்கூடியதாக இருக்கும். பெண்கள் தாம் கண்ணகி ஆலயத்தில் நேர்த்தி வைத்துக் கொண்டு அதை நிறைவேற்றுவதாலேயே பெண்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்பு அதிகமாக உள்ளது என்று இதற்கு காரணம் தெரிவிக்கப் படுகிறது. சிலப்பதிகாரத்தின் புகார்க் காண்டத்தில் மங்கள வாழ்த்துப் பாடலில் ''இந்திரா விழாவெடுத்த காதை'' என்பதும் ஒன்றாகும். இந்த சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்ற இத்திருவிழா பூம்புகாரில் கொண்டாடப்பட்ட விழா. இந்திரக் கோயிலான வச்சிரக் கோட்டத்திலுள்ள முரசை வெள்ளானைத் கோட்டத்திற்கு எடுத்துச் சென்று அதனை யானை மேலே ஏற்றி வீதி வலம் செல்வதன் மூலம் இந்திரவிழா உத்தியோகப்பூர்வமாக நகர மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த இந்திர விழாவில் சிவன் கோயில், குமரக் கோட்டம், திருமால் கோட்டம், பலராமன் கோட்டம் ஆகிய எல்லா கோயில்களிலும் விழா நடைபெற்று வலம் வந்தன. இதனை கண்ணுற்ற கஜபாகு இலங்கையிலும் இதைப்போலவே நடைபெற வேண்டும் என விரும்பி கண்டி பெரகராவுடன் நாத்த, விஷ்ணு, கதிரேசன், பத்தினி தேவாலயங்களில் இருந்தும் ஊர்வலங்கள் புறப்பட்டு எசலபெரகராவுடன் இணையும்படி செய்திருக்கலாம் என கருதப்படுகிறது.

நாத்த தேவாலய பெரகரா, ஊர்வலத்தில் இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளது. நாத்த என்பதற்கு பல்வேறு விளக்கங்களை நாம் காணக்கூடியதாகவுள்ளது. இந்து சமயத்தில் நாரதர் என சிவபெருமான் அழைக்கப்படுகிறார். அகிலேஸ்வர நாதர் என்பதும் சிவனின் பெயர்களில் ஒன்றாகும். நாதர் முடிமேலிக்கும் நல்ல பாம்பே என்ற சொற்றொடரை மனதில் இருத்திக் கொள்ளவும். முன்னேஸ்வர நாதர் எனவும் அழைக்கின்றோம். நாதர் என்பது மருவி ''நாத்த'' என்றாகி இருக்கலாம் என்றும் சிவன் கோயில் பிற்காலத்தில் ''நாத்த'' எனப் பெயர்பெற்றிருக்கலாமென கூறும் நூல்களும் உள்ளன. ''நாக வழிபாடு'' காலப்போக்கில் மறுவி நாக என்பது சிங்களத்தில் ''நாத்த'' எனப் பெயர் பெற்றிருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.. ஆனால் ''நாத்த'' என்பதுடன் எந்தவித இந்து மத்த் தொடர்பும் கிடையாது என சிங்க நூலான பெபிலியானவில் கே. என். ஓ. தர்மதாஸ, எச். எம். எஸ் துன்தெனிய ஆகிய இருவரும் கூறியுள்ளனர்.

நாத்த தேவாலயம் பற்றி கூறும் பெபிலியான சாசனம் கடலாதெனிய சாசனம், லங்காதிலக்க சாசனம் (சிலாலேகன) ஆகியன நாத்த என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் இந்து சமயத்துடன் சம்பந்தப்படாதது என்றும் இத் தெய்வம் போதிசத்துவர் அவதாரமாகவும் கூறப்படுகிறது.

புத்தர் 550 தடவை அவதாரம் எடுத்துள்ளார் என ஜாதகக் கதைகள் கூறுகின்றன. இந்த அவதாரங்களையே போதி சத்துவர் என பௌத்தத்தில் கூறப்படுகிறது. இத் தொடர்ச்சியின் இறுதி அவதாரமே கௌதம புத்தராவார் என்று பௌத்த நம்பிக்கை மேற்படி அவதாரங்களில் ஒரு அவதாரமான போதிசத்து அவ்லோகிஸ்வரநாத்த என்ற அவதாரமே நாத்த தெய்வமாக வணங்கப்படுவதாக பெபிலியான சாசனமும், புத்தரின் முதல் அவதாரமான லோகிஸ்வரநாத்த இங்கு வணங்கப்படு வதாக கடலாதெனிய சாசனமும் குறிப்பிட்டுள்ளன.

''நாத்த என்ற பெயருடன் தொடர்புடைய மற்றொரு விளக்கத்தில் அனுராதபுரத்திலிருந்து வெள்ளரசு கிளை ஒன்றினை நாத்த எனப் பெயருடையவர் கொண்டு வந்து தலதா மாளிகைக்கு முன்பாக நட்டு வணங்கியதால் நாத்த என்ற பெயர் வந்ததாகவும் 14ஆம் நூற்றாண்டில் இந்தத் தேவாலயம் கட்டப்பட்டு வணங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

புத்தரின் முதல் அவதாரம் என்பதால் ''நாத்த தெய்வம் வீற்றிருக்கும் இக்கோவில் சக்திவாய்ந்ததாகக் கருதப்படுவதோடு பெரகாரா ஊர் வலத்தில் தேவாலயங்களில் முதலிடம் பெறுகிறது. இக்காலத்திலேயே தலதா மாளிகைக்கு அடுத்ததாக ஊர்வலத்தில் இடம் பெறும் கௌரவத்தை இத் தேவாலயம் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராசையா மகேஸ்வரன் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியின் பழைய மாணவர், ஹொக்கி விளையாட்டு வீரர். அக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நீண்ட கால உபதலைவர். பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரி. இவர் பேராதனைப் பல்கலைக்கழக மாணவராக இருந்த போது ஹொக்கி குழு தலைவராக, விளையாட்டு சபை உறுப்பினராக, தமிழ்ச் சங்க செயலாளராக, விவாத சங்க உபதலைவராக இருந்தவர். பன்விலை விக்னேஸ்வரா வித்தியாலய அதிபராக, கொட்டகலை அரசினர் ஆசிரியர் கல்லூரி விளையாட்டுத்துறை விரிவுரையாளராக பின்னர் பேராதனைப் பல்கலைகழக நூலகத்தில் கல்விசார் உதவி நூலகராக, சிரேஷ்ட உதவி நூலகராக, பிரதி நூலகராக விளங்கியவர். தற்போது பதில் நூலகராகவும் பதவி உயர்ந்துள்ளார். பல்கலைக்கழக கல்விசார் விரிவுரையாளர் சங்க உபதலைவராகவும் தற்போது செயலாளராகவும், குறிஞ்சிக்குமரன் கோயில் பெரும்பாண்மைக்குழு உறுப்பினராகவும், அதன் செயலாளராகவும், இந்து பட்டதாரிகள் சங்க தலைவராகவும் விளங்குகின்றார். கண்டி ஹொக்கி சங்க தலைவராகவும், இலங்கை ஹொக்கி சங்க தலைவராவும் நீண்ட காலம் கடமையாற்றியதோடு தேசிய பயிற்றுவிப்பாளர், தேசிய நடுவர் போன்ற தரத்தினையும் பெற்றவர். ஹொக்கி மூலம் இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பங்களாதேஷ், மலேசியா, ஹொங்கொங், பெல்ஜியம், ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கு தேசிய குழு முகாமையாளராக, சம்மேளன உபதலைவராக சென்றவர். சிறந்த ஆய்வாளர், ஊடகவியலாளர், விமர்சகர். நூலகத்துறையிலும், இலக்கிய துறையிலும் தனது ஆய்வு கட்டுரைகளை இந்தியா, பிரித்தானியா, மலேசியா, சுவிஸ் ஆகிய நாடுகளில் சமர்ப்பித்தவர். கோவை செம்மொழி மாநாடு, ஒன்பதாவது உலக தமிழாராய்ச்சி மாநாடு, லண்டன் தமிழியல் ஆய்வு மாநாடு, மலேசியா இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, காயல் பட்டிணம் இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு, மலேசியா முருக பக்தி மாநாடு, சிங்கப்பூர் நூலகவியலாளர் மாநாடு, சென்னை தமிழாராய்ச்சி நிறுவன பண்ணாட்டு கருத்தரங்கு, இந்திய தமிழ்நாட்டு தொல்லியல் கழக 25வது வருட பண்ணாட்டு கருத்தரங்கு, பேராதனைப் பல்கலைக்கழக தமிழ் துறை தமிழ் ஆய்வு தேசிய கருத்தரங்கு ஆகியன இவர் ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பித்த முக்கியமான மாநாடுகளாகும். 'நதி கடந்த களம்' என்ற ஆய்வு நூலுக்கு மத்திய மாகாண சபையின் சாகித்ய பரிசு பெற்ற இவர் 'நாட்டுப்புற பாடல்கள்', 'அமைதி வழியும் மதுர மொழியும்', 'ஆண்ட பரம்பரை', 'நூலக பிரயோக விஞ்ஞானம்', 'உளவியல் அறிவும் நூலக ஆசிரியர் செல்நெறியும்' ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

**எஸ். விஜேயசந்திரன்**
தலைவர்
பொருளியற்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

ISBN 978-955-659-589-5
9 789556 595895
விலை ரூபா: 450.00
Printed by Kumaran Press (Pvt) Ltd. kumbhlk@gmail.com
# 777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org